www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
පක්කම් 20
දිනමුරසු වාරමලර්
மே.29- ஜூன்.04,1994 ரூபா 8/50

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 52



## ஆளும் கட்சி அரசியலில் அடித்தாட வரும் புதிய அணி!

எக்ஸ்ரே ரிப்போர்ட்

## மர்மங்கள் நிறைந்த தலைநகர அரசியல்

அரசியல் அலசல்



சினி விசிட்


## தலை இரண்டு கண் நான்கு

அதிசய பிறவி



வன்முறையும்

உலக ரவுண்டப்



ரசிகன் தரும் இலக்கிய நயம்



இடி மின்னல் அலன் போடர்

ஸ்போர்ட்ஸ்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## ஒருபோதும் தள்ளப்பட மாட்டோம்!

"என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை" -யோவான்-6:37

தம்மிடம் வந்தவரை நம் ஆண்டவர் தள்ளிவிட்டதாக எங்கேயாவது சொல்லப் பட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் அதைப்பற்றி அறிந்துகொள்ள நமக்கு விருப்பம் உண்டு. ஆனால் அப்படி ஒரு இடத்திலும் சொல்லப்படவும் இல்லை; சொல்லப்படப்போவதும் இல்லை. இழக்கப்பட்ட ஆன்மாக்களாய் நரகத்திலுள்ள ஒருவராவது "நான் இயேசுவண்டை போனேன். அவர் என்னை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டார்." என்று சொல்ல முடியாது. அவர் கொடுத்துள்ள வாக்கை உங்களிடமாவது என்னிடமாவது தவறமாட்டார். அப்படிப்பட்ட ஐயத்தை விட்டு ஒழிப்போமாக.

இக்காலத் தீமைகளைக் குறித்து இயேசுவோடு உரையாடுவதற்கென்று சென்றால் அவர் நம்மோடு பேசுவார் என்றும், நம்மைத் தள்ளிவிட மாட்டார் என்றும் திடமாய் நம்பலாம். அவரிடம் பலமுறை சென்றவர்களும் ஒருமுறைகூடச் செல்லாதவர்களுமாகச் சேர்ந்து, அவரண்டை போகலாம் வாருங்கள். நம்மிலே ஒருவரின் முகத்திலாவது அறைந்தாற்போல் கிருபையின் கதவுகளை மூடிவிட மாட்டார்.

"இயேசு பாவிகளை ஏற்றுக் கொள்கிறார்; ஒருவரையும் புறக்கணிப்பதில்லை" என்று சொல்லப்படுகிறது. நாம் தளர்விலும் பாவத்திலும், ஊசலாடும் விசுவாசத்தோடும், குறைந்த அறிவோடும், ஒடுங்கிய நம்பிக்கையோடுமே அவரண்டை நெருங்குகிறோம். ஆனால் அவர் நம்மைத் தள்ளி விடுவதில்லை.

நாம் பாவிகளாயிருந்தும் எம் பாவங்களை நாம் உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட் போமானால் அவர் நம்மை ஒருபோதும் ஒதுக்கித் தள்ளுவதில்லை. ஒருபோதும் புறக்கணிக்காதவரிடம் இன்றே மறுபடியும் செல்வோமாக.

குணத்தி பிரபா-கனடா.

## ஆன்மீகம்



## இவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்

கலீபா உமர் (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஒரு தடவை சிலர் நீண்ட வழிப்பிரயாணம் செய்து கொண்டிருந்தார்கள். பிரயாணத்தின் போது தண்ணீர் கிடைக்காமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். நீர் இல்லாமல் நீண்ட நாள் பிரயாணம் செய்யக்கூடிய அவர்களின் ஒட்டகைகள் கூட நாவரண்டு தளர்ந்து விட்டன. கடைசியாக இப்பிரயாணிகள் ஒரு குக்கிராமத்தை வந்து சேர்ந்தார்கள். அந்தக் கிராமவாசிகளிடம் தங்களின் நிலையை உணர்த்தி கிணறு இருக்கும் இடத்தைக் காட்டுமாறும் தண்ணீர் இறைப்பதற்கு பாத்திரங்கள் தந்துதவுமாறும் வேண்டிக் கொண்டனர்.

ஆனால், அந்தக் கிராமவாசிகள் தண்ணீர் கிடைக்க எந்த வசதியும் செய்து கொடுக்கவில்லை. அவர்களிடம் தண்ணீர் இருந்தது. அதைப் பகிர்ந்து கொடுக்க அவர்கள் முன்வரவில்லை. அதனால் யாத்திரீகர்கள் தட்டுத்தடுமாறி மதீனா வந்து சேர்ந்தார்கள். மதீனா வந்ததும் அவர்கள் கலீபா உமர் (ரலி) அவர்களிடம் கிராமவாசிகள் தங்களுக்கு தண்ணீர் தர மறுத்ததைப் பற்றி புகார் செய்தார்கள்.

இதை செவிமடுத்த கலீபா உமர் (ரலி) அவர்கள் பெரிதும் வேதனைப்பட்டதோடு "ஹல்லாவலஃதும் பீஹிமுள்ஸிலாஹ"- "உங்கள் ஆயுதங்களை அவர்கள்மீது ஏன் பிரயோகிக்க வில்லை" என்று கருத்துப்பட அவர்களிடம் கேட்டார்கள்.

மனிதன் தனது வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசிய பொருளை ஏராளமாக வைத்துக் கொண்டு அவற்றை பொதுமக்களுக்கு கிடைக்காமல் செய்பவன் சமூகத்துரோகி, அவன் மக்களுக்கும், நாட்டுக்கும் இறைவனுக்கும் விரோதி. எனவே அவன் தண்டிக்கப்பட வேண்டியவன் என கலீபா அவர்கள் கூறினார்கள்.

பறகஹதெனியூர்-அக்ரம்.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.
பாரிஸ் நகரில்
இலங்கைத் தமிழர் ஒருவர்
இரத்தம் சிந்தியிருக்கிறார்.
வழக்கம்போலவே
உரிமை கோரப்படாத கொலை!

இங்கிருந்து சுதந்திரமாக
எழுதவும், வெளியிடவும்
துப்பாக்கிகள் தடை என்று
தூரதேசங்களுக்கு சென்றவர்களை
அங்கும்
துப்பாக்கிகள் துரத்துகின்றன.

ஒரு கொலை என்பது-
அப்படி ஒன்றும் பெரிய விசயமல்ல
என்பது மாதிரியான-
உணர்ச்சி மரத்துப்போன
ஒரு நிலை-
எமக்குள் ஏற்பட்டு வருகிறது.

எல்லாவற்றையுமே மறந்து கொண்டிருக்கிறோம்.
மனித உயிரின் பெறுமதியை;
மனிதாபிமானத்தை;
மனம் திறந்து பேசும் வெளிப்படைத்தன்மையை;
இப்படி—இப்படியாக
மறக்கக்கூடாதவற்றை மறந்தும்
இழக்கக்கூடாதவற்றை இழந்தும்
மறக்கவும்-இழக்கவும்
இனி எதுவுமில்லை என்ற நிலையில்
உணர்ச்சிகளும் உயிர் துறந்துவிட்டன.

எனவே சபாலிங்கம்
செத்துப்போனால் என்ன?
சகோதரன் கொல்லப்பட்டால் என்ன?
விதியை நொந்து வெந்ததைத் தின்று

வாழும் கதையாகிவிட்டது
தமிழ் மக்களின் வாழ்க்கை!

நமக்காகச் சிந்தித்தவர்கள்
வீடு என்ற எல்லை தாண்டி
தன் மக்கள், தன் இனம் என்று
கடமையுணர்வோடு காரியம் செய்தவர்கள்
இரத்தம் சிந்தி, உயிர் விட்டாலும்
என்ன நடந்தது என்று
எட்டிப்பார்க்கக்கூட முடியாதபடி
பயம் ஒரு கயிறாகக் கட்டிப்போடுகிறது.

தினம்-தினம் சாவுகள்
தொடரும் சகோதரப் படுகொலைகள்
கேட்டும், அறிந்தும், பார்த்தும்
இவற்றை தடுக்கவே முடியாது.
இதுதான் நியதி.
என்ன செய்ய முடியும் எம்மால்
என்று மனம் சலித்துப்போய்
அதுவே-யார் செத்தால் என்ன
என்கிற அலட்சிய உணர்வாகி விட்டது.

அதனால்தான்-
சுதந்திரமான சிந்தனையை மறுக்கும்-
அப்படிச் சிந்திப்பவர்களை அழிக்கும்
ஜனநாயக விரோத கரங்கள்
நம்மவர்கள் மத்தியில் இருந்து
இப்போது கடல் தாண்டியும் நீள்கின்றன.
கண்டிக்க யாரால் முடியும்
என்ற துணிச்சல் கரம் நீளக் காரணமாகிறது.

கொலைக்கு காரணம் புலிகள்
என்று 'சபா' குடும்பத்தினர் சொல்கிறார்கள்.
பொதுவாகவும் அப்படித்தான் நம்பப்படுகிறது.

புலிகளை கண்டிப்பதால்
புலிகள் மட்டுமே ஜனநாயகத்தை
மறுப்பவர்கள் என்று அர்த்தமல்ல.

ஜனநாயகம் பேசுகின்ற
தமிழ் அமைப்புக்கள்கூட
தமக்குள்ளும் சரி, வெளியிலும் சரி
ஜனநாயக நடைமுறைகளை
வெளிப்படுத்தியிருக்கின்றனவா-அதன்மூலம்
முன்னுதாரணம் காட்டியிருக்கின்றனவா
என்றால், இல்லை என்பதே பதிலாகிறது.

ஒரு விடயம் மட்டும் உறுதி.
சொந்த மக்களின் ஜனநாயகத்தை
மறுத்துக்கொண்டிருக்கும் எவரும்
அம்மக்களுக்கு
வெளிச்சமான எதிர்காலத்தை
ஏற்படுத்திக்கொடுக்க முடியாது.

ஜனநாயகம் என்றாலே
தமிழ் மக்களுக்கு
அந்நியமான-அநுபவிக்க முடியாத
ஒன்றாகிவிட்டதோ என்னும்
சந்தேகம் நியாயமானதாகிவிட்டது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும் வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## தினமுரசு போன்: 820265

### கவிதைப்போட்டி இல-49

களம்தேடி வந்து விதைக்கப்பட்டவற்றில்
வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

#### பரிசுக்குரிய கவிதை

**அச்சம்**

"கள்ளமற்ற கருவறைப் 'பூ'
கலங்குவது எதற்காக?
ஆறறிவு மானிடா உன்
போர் முழக்கம் அதற்காக!

எஸ்.எச். சுல்பிகா
புத்தளம்.

**வாரிசு!**

போரின் விளைவால்
பெருகி வரும்
அகதிப் பட்டியலில்
ஒரு புதுமுக வாரிசு!

ஆர்.சந்திரா
கொழும்பு-12.

**ஆத்மாவின் யாத்திரை**

கொலைந்து விட்டதை
தொடர்ந்து தேடும்
தொட்டில் உறவுகள்

எஸ்.விக்னேஸ்வரன்
கல்முனை-01.

**கண்ணீர்**

கண்ணீர்க் கடலில்
கலங்கள் மூழ்கிய பிறகு
அடைக்கலம் தேடிய
ஆ...! புத்திரனே!

அ.மஞ்சுளா -வவுனியா.

**மறுப்பு**

மனித வேட்டை ஓயும்வரை
கண்விக்க மறுக்கும் ஜீவன்!

உம்முல் மக்கியா-புத்தளம்.

**அலறல்**

ஆயுதங்களின்
சலசலப்பு
உன்னையும்
அலறவைத்ததோ?

ச.தஜானி
ஆரையம்பதி-03.

எரிமலை தேசத்தில்
பூவின் ஜனனம்.

பி.சி.அன்ரன்
மட்/கூளாவடி.

#### வியக்கப்பட்டவை

**பிறந்து விட்டேன்!**

பிளவுகள் நாளாந்தம்
பிறக்கின்ற வேளையிலே!
பிள்ளையென நானும்
பிறந்துவிட்டேன் வழியிலே!

லேகா-கொழும்பு-13.

**நீயுமா....!**

தேசமே அழுவது
போதாதென்று
நீயுமா...?

ஏ-அஹ்மது ஜுனைது
ஏறாவூர்-06.

**சிக்கிவிட்ட சித்திரம்**

யுத்தங்களை
முத்தமிடும்
பித்தர்களின்
பூமியில்
சிக்கிவிட்ட
மற்றுமொரு
புத்தம் புதுச்
சித்திரம்!

ரேணுகா நிபாம்தீன்
ஏறாவூர்-2.

**பிறப்பே வேண்டாம்**

மரணித்துக்
கொண்டிருக்கும்
மனிதங்களுக்கிடையில்
ஏன்தானோ
இந்த ஜனனம்?

சுப்பிரமணியம் வாணீஸ்வரி
அப்பர் கலஹா.

**ஒத்திகை**

அழுவதற்காய்
ஒத்திகை பார்க்கும்
ஆரம்ப
அத்தியாயம்—இது.

அநாமிகா
பொத்துவில்.

செல்வீச்சு குண்டடியில்
திகைப்புற்ற குழந்தை இது
வீறிட்டலறுகின்ற
வேதனையை என்
சொல்வேன்?

தா.வடிவேல்-ஏறாவூர்-5



**பசி**

நேசிக்க யாருமில்லை
யாசிக்க தெரியவில்லை
பாசிச இருளின் கீழ்
பசிவேறு வாட்டுதிங்கே.

சி.சசிதாரணி-புத்தளம்.

**புரியவில்லை**

மரணித்த மனித நேயம்
ஜனனிக்க முன்னாலே
ஜனனித்தது வீண் என்றா
தனியாக அழுகின்றாய்?

சி.சரஸ்வதி-புத்தளம்.

**கண்ணீர் தேசம்**

கண்ணீர் தேசமிது!
அழுகையுடன் நீயும்
வந்தாக வேண்டுமா?

ரமீஸா ஹமீம்
கொழும்பு-10.

**பாரில் உதித்த ஒளி!**

ஒளியைத் தேடி
விழியை நனைக்கும்
மானிடமே...
கவலை வேண்டாம்
இதோ உதிக்கிறது
ஒளி!

எப்.வெனாட்குமார்
ஹப்புத்தளை.

**ஓ...மனித ஜென்மா!**

ஏன் இந்த மருட்சி?
மனித ஜென்மந்தனில்
மலர்ந்து விட்டதற்காகவா?

விஜியலக்ஷமி முத்துக்குமார்
கொழும்பு-13.

**வேண்டாமே இவ்வுலகம்**

சமாதானக் கதவுகள்
திறக்கும்வரை
கருவறைக் கதவுகளை
மூடி வையுங்கள்.

என்.இந்துராணி-கொழும்பு-03

மார்பினில் சுமந்தவள்
மண்ணடி வீழ்ந்தாளோ- வீழ்த்திய
போர் வெய்யில் பட்டதால்-உன்
பூவுடல் நொந்ததோ?


சு.அபிராமி-அக்கரைப்பற்று-08.

**அழாதேடா கண்ணா!**

தொப்புள் கொடியறுந்து
தூளியில் வீழ்ந்தவனே
துப்பாக்கி ஓசை கேட்டோ
துடித்துப் பதறுகிறாய்?
அழாதே கண்ணா
அதுதான் இங்கே திரைநீக்கம்

மா.கவிதா
அக்கரைப்பற்று-08.

## கவிதைப் போட்டி இல-52



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

**அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 04.06.1994.**

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 52
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## வாசகர் சாலை

என்னைக் கவர்ந்த மலரே!

ரசிகர்கள் பெருகும் இதழே! உன் இரசிகை வாழ்த்துவதற்கு வார்த்தைகள் இல்லாவிடினும் உன் ஆக்கங்கள் அருமையிலும் அருமை. அதிலும் தகவல் பெட்டி தரும் தகவல்களோ நவீனம்.

மா.ஜோதிலக்சுமி-போபத்தலாவ.

□□

அன்பின் முரசே!

நீ தரும் ஆக்கங்கள் எமக்கு தருகின்ற ஊக்கங்கள். உன்னில் நேர்மையுண்டு. நேயம் உண்டு . நீ தரும் செய்திகளில் உண்மையுண்டு. எனவே எமக்கென்றும் வெற்றியுண்டு.

ராமசாமி, கார்திக்- ரமேஸ்குமாரி
நானுஓயா.

□□

அன்பு முரசே,

ஆன்மீகம், உலகரவுண்டப், லேடீஸ் ஸ்பெசல், தேன்கிண்ணம் போன்ற ஆக்கங்கள் என் உள்ளத்தைத் தொட்டது. சிறுகதைகளும் பிரமாதம். உன் சேவைகள் தொடர வாழ்த்தும்...

பலாங்கொடை வஸந்தி-கொழும்பு.

□□

அன்பின் முரசே,

நீ வாராவாரம் சுமந்துவரும் அத்தனை அம்சங்களும் தித்திக்கும் தேன்முத்து. அதிலும் ரசிகன் எழுதும் இலக்கிய நயம் எங்களை ஒருகணம் ஆழ்த்தி விடுகின்றது. தினமுரசே, உன் சுவை குறைந்து விடாமல் என் மனதார பாராட்டுவதுடன் என்றும் ஒளிவிளக்காய் பிரகாசிக்க நல்வாழ்த்துக்கள்.

அருணாசலம் ராஜலக்சுமி
கந்தப்பொல-கோட்லோஜ்.

□□

நீ வாரத்தில் ஒரு முறை சுமந்து வரும் அனைத்து அம்சங்களும் மிகவும் இனியவை. நீ தரும் மகாபாரதம் மிகவும் சிறப்பாக உள்ளது. ரசிகனின் இலக்கிய நயம், கொலைவிழும் நேரம்-சிறு கதைகள் இன்னும் பல சுவையான அம்சங்கள் என்னை கவர்ந்து விட்டன. உன் சேவை மென்மேலும் தொடர என் இதயபூர்வமான வாழ்த்துக்கள்.

எஸ்.சாந்தகுமார்-இறக்குவானை.

□□



ஒருவார எல்லைக்குள்
ஓராயிரம் செய்திகளை
ஒழுங்கான முறையில்
ஒரவஞ்சனையின்றி
பிரசுரிக்கிறாய்....வாழ்க!

எஸ்.வடிவேல்-வாழைச்சேனை.

□□

முரசே நீ வாழ்க,

இன்பமூட்டும் இனிய செய்திகளை நீ எமக்குத் தருகின்றாய். அதில் இலக்கிய நயம் என் மனதைக் கவர்ந்துள்ளது. நீ இன்னும் சிறப்புப் பெற என் வாழ்த்து.

பி.சுதர்ஷினி-திருமலை.

□□

நான்-ஒரு
வண்டு
உன்னிடம்
உள்ள
தேனை-அள்ளிப்
பருகும்
வாசக வண்டு.

கோ.சுரேஷ்-நோர்வூட்.

□□

என் இனிய முரசே!

தித்திக்கும் தேன் சுவையில் கூரிய சிந்தனைத்துளிகளை அள்ளிக் கொண்டு நித்தம் என் கரத்தைப் பற்றிக்கொள்கிறாய். உனக்குள் பொதிந்திருக்கும் சகல விடயங்களும் என் மனதைக் கொள்ளை கொள்கின்றன. உன் பணி மென்மேலும் சிறப்புடன் திகழ என் இனிய வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகட்டும்.

நிசானா நசாக்-குலுகம்முன.

□□

அன்பின் தினமுரசே,

உனதுடலில் தாங்கிவரும் அம்சங்களும் நன்றாய் அமைந்துள்ளது. இருப்பினும் தற்போது வெளிவரும் அம்சமான 'நில்! கவனி!! முன்னேறு!!!' எனும் தலைப்பின் கீழ் வரும் அம்சம் நிச்சயம் சிந்திக்கத் தூண்டும். இதை இன்னும் கூடுதலான இடத்தில் பிரசுரித்தால் நன்றாயிருக்கும் என்பது என் விருப்பம். செய்வீர்களா? வாழ்க தினமுரசே. வளர்க உன்சேவை. உயர்க மக்கள்.

பி.மனோ-கட்டைபறிச்சான்-மூதூர்.

□□

அன்பின் முரசே!

புதுப்புதுச் சினிமா செய்திகளையும் அரசியல் செய்திகளையும் வாரம்தோறும் வழங்கும் அன்பு முரசே, நீ பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறேன்.

ஏ.எம்.பஸ்ரி-கிண்ணியா-04.

□□

வாரமலரே, உன்னை வாரி அணைத்து எடுப்பதில் எனக்கு இருக்கும் இன்பத்திற்கு அளவே இல்லை.

அருனாசலம் லதா-கொம்மாதுறை.

□□

தித்திக்கும் தினமுரசே!

பலவித செய்திகளையும் ஒரே பத்திரிகையில் தொகுத்து வழங்குகிறாயே-உனக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள். இராஜதந்திரியின் அலசலோ அசத்தல். மென்மேலும் நீ வளர மனமார வாழ்த்துகிறேன்.

தமிழன்பன் ஜே.எஸ். ரெஜினோல்ட்.
வவுனியா.

□□

தரமான கருத்துக்கள் நிறைந்த செய்திகளோடு வண்ணக் கோலம் பூண்டுவரும் உன்னை நான் வரவேற்கத் தவறுவதில்லை.

ஜே.லீலா கானம்-மொனராகலை.

□□

அன்பின் முரசே, உன்னில் எத்தனை புதுமைகள்? உன்னில் எத்தனை தெவிட்டாத சிறுகதைகள்....!

எஸ்.விஜயகுமார்-வவுனியா.

# தேர்தலுக்கு முன்னர் தீர்வு முயற்சிகள்! இனப்பிரச்சனையை காமினி கவனிப்பார்?

## யாழ் குடாநாட்டு முற்றுகைக்கு திட்டம் என்கிறார்கள் புலிகள்

ஐக்கிய தேசியக் கட்சியில் பிரசார பலம் பொருந்தியவராக மாறிவரும் திரு. காமினி திசாநாயக்கா இனப்பிரச்சனை இருப்பதை ஏற்றுக்கொண்டு அதன் தீர்வுக்கு வழிகாண வேண்டும் என்று கூறி வருகிறார்.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடமும் திரு. காமினி திசாநாயக்கா தனது கருத்தை எடுத்துக் கூறியதாக தெரிய வருகிறது.

இதனையடுத்து இனப்பிரச்சனை விடயங்களில் திரு. காமினி திசாநாயக்காவின் அணுகுமுறைக்கு முக்கியத்துவமளிக்க ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இனப்பிரச்சனைத் தீர்வு காணும் விடயத்தில் முழுமையான பொறுப்பு அவருக்கு வழங்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

அமைச்சர் தொண்டமானின் ஆதரவும் காமினி திசாநாயக்காவுக்கு இருக்கிறது. தமிழ் அரசியல் கட்சிகள் சிலவற்றோடும் அவர் நல்லுறவுகளைக் கொண்டிருக்கிறார்.

எதிர்வரும் தேர்தலுக்கு முன்னர் தமிழ் பேசும் மக்களது ஆதரவையும், நம்பிக்கையையும் பெறும் வகையிலான நடவடிக்கைகள் அவசியம் என்று ஆளும் கட்சியின் உயர் மட்டத்திலும் உறுதியான கருத்து காணப்படுகிறது.

இனப்பிரச்சனைக்குத் தீர்வுகாணும் நம்பிக்கைகளை ஏற்படுத்தும் அதேவேளையில் வடக்கில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வது பற்றியும் யோசிக்கப்படுவதாகத் தெரிகிறது.

யாழ் குடாநாட்டை முற்றுகையிட படையினர் திட்டமிட்டு வருவதாக யாழ்ப்பாணத்தில் புலிகள் அமைப்பினர் கூறியுள்ளனர்.

அதேவேளையில் யாழ்ப்பாணத்தில் வடமராட்சிப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளதோடு, வடமராட்சிக் கடல் பகுதியிலும் கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

வலிகாமம் பகுதியில் சுப்பர்சொனிக் விமானங்கள் இரண்டும், புக்காரா விமானம் ஒன்றும் தாக்குதல் நடத்தியதாகவும், அங்கிருந்து மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் புலிகள் அமைப்பின் செய்திக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.'

இதேவேளை பருத்தித்துறைக் கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையே கடந்த 19ம் திகதி கடும் மோதல் ஒன்று ஏற்பட்டது.

பூநகரி முகாம் தாக்குதலின்போது புலிகளால் கைப்பற்றப்பட்ட கடற்படையினரின் 'வாட்டர் ஜெட்' படகுகளில் ஒன்றில் வந்த புலிகளே தாக்கப்பட்டனர். படகும் அழிக்கப் பட்டது என்று பாதுகாப்புப் படை தலைமையகம் கூறியிருக்கிறது.

தமது தரப்பில் ஏழு பேர் பலியானதாகவும், அதில் ஒருவர் பெண் உறுப்பினர் என்றும் கூறியுள்ள புலிகள் அமைப்பினர், பலியானவர்களது பெயர் விபரங்களையும் வெளியிட்டுள்ளனர். பெயர் விபரங்கள் பின்வருமாறு:

1. மேஜர் மீனன்- முருகேசு ஜெகதீஸ்வரன், திருகோணமலை. 2. மேஜர் குணா- திருநாவுக்கரசு நமசிவாயம், காங்கேசன்துறை 3. மேஜர் வசந்தன்- சித்திரவேல் ரவி, திருகோணமலை 4.கப்டன் குகா- செல்வரட்ணம் முருகமூர்த்தி, பருத்தித்துறை 5. கப்டன் கணேஷ்- சோமசுந்தரம் ரவிச்சந்திரன், மானிப்பாய் 6. கப்டன் சாமந்தி- தங்கராசா சுதர்சினி, உரும்பிராய்.

கடற்படைக் கப்பல் ஒன்றில் வந்த கடற்படையினரே தாக்குதலை நடத்தியிருந்தனர்.

யாழ் குடாநாடெங்கும் தமது பலியான உறுப்பினர்களது உடல்களை புலிகள் அமைப்பினர் பொதுமக்களின் பார்வைக்கு வைத்திருந்தனர். கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன.

## பிரேமாவின் மகள் மீண்டும் கோரிக்கை! "விசாரணை விபரங்களை தெரியப்படுத்துங்கள்"!

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவின் கொலை பற்றி பாரபட்சமற்ற விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று பிரேமதாசாவின் மகளான திருமதி துலாஞ்சலி ஜெயக்கொடி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். இது தொடர்பாக விசாரணைகள் தொடர்வதாகவும் மேலும்பல சந்தேக நபர்கள் கைது செய்யப்பட வேண்டியிருப்பதால் இக்கோரிக்கையினை அரசாங்கம் நிராகரித்து விட்டதாகவும் துலாஞ்சலாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் முடிவை ஜனாதிபதி விஜேதுங்காவின் சார்பில் அவரின் செயலாளர் கே.எச்.ஜே.விஜேதாசா எழுத்து மூலம் துலாஞ்சலிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

துலாஞ்சலி கடந்த வாரம் மீண்டும் ஒரு விண்ணப்பத்தினை பிரேமதாசா குடும்பத்தின் சார்பில் அனுப்பியுள்ளார். பிரேமதாசா கொலை செய்யப்பட்ட இடத்தினை உடனடியாகக் கழுவிவிடுவதற்கு யார் கட்டளையிட்டார் என்பதனைக் கண்டறியும்படி அந்த விண்ணப்பத்தில் கேட்டிருக்கிறார். அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது போன்று விசாரணைகள் தொடருமானால் அவ் விசாரணைகளின் நடைமுறைகள் அவ்வப் போது தங்களுக்குத் தெரியப்படுத்துவதற்கென ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்றும் துலாஞ்சலி கேட்டிருக்கிறார்.

## தமிழ் வாக்குகளை கவரும் தந்திரம் சுதந்திரக் கட்சிக்கு புலிகள் கண்டனம்!

### அமைச்சர் தொண்டா மீதும் குறை!

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் திருமதி சந்திரிக்காவும் தமிழ் மக்களது வாக்குகளை கவர்ந்துகொள்ள திட்டமிட்டுள்ளதாக புலிகள் அமைப்பினரால் கனடாவில் இருந்து வெளியிடப்படும் 'உலகத் தமிழர்' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா நிராகரித்துள்ள தமிழ் வாக்குகளை திருமதி சந்திரிக்கா தலைமையிலான சுதந்திரக்கட்சி கவர்ந்துகொள்ள முயல்கிறது. இதுவரை ஐக்கிய தேசியக் கட்சிக்கு சென்ற தமிழ் வாக்குகளை கவர சுதந்திரக்கட்சி தூண்டில் போடுகிறது.

பேரினவாத நிலைப்பாட்டுடன் இதுவரை இயங்கிவந்த சுதந்திரக்கட்சி இப்போது தனது அரசியல் கூடத்தில் சில மாற்றங்களைச் செய்துள்ளது. அதுதான் தமிழ் வாக்குகளைக் கவரும் தந்திரோபாயம் ஆகும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்காவுடன் மீண்டும் சுமுகமான உறவை ஏற்படுத்தியுள்ளமை மலையக தமிழர்களை பலிக்கடாவாக்கும் செயல் என்றும் உலகத் தமிழர் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அமைச்சர் தொண்டமானின் தனிப்பட்ட நடவடிக்கைகள் பற்றியும் விமர்சித்துள்ள புலிகளது பத்திரிகை, தனது சொந்த நலன் குறித்த கோரிக்கைகளையே திரு.தொண்டமான் அரசிடம் முன்வைத்தார் என்றும் குறிப்பிட்டுள்ளது.

## காத்திருக்க வேண்டும் காமினி!

ஆளும் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராகியுள்ள திரு.காமினி திசாநாயக்காவுக்கு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு வழங்கப்படலாம் என்றே பரவலாக நம்பப்பட்டது.

எனினும் ஆளும் கட்சிக்குள் அவர் இணைந்தவுடன் முக்கிய அமைச்சுப் பொறுப்பை வழங்கினால் கட்சிக்குள் அதிருப்திகளை சந்திக்க வேண்டிவரும் என்று ஜனாதிபதி தயக்கம் காட்டுவதாக தெரிகிறது.

திரு.காமினி திசாநாயக்கா முன்னர் மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்தவர். மீண்டும் அந்த அமைச்சை அவருக்கே வழங்குவதன்மூலம், மகாவலி திட்டத்திற்கு மீண்டும் புதுப்பொலிவூட்டலாம் என்றும், அதன்மூலம் வாக்காளர்களையும் கவரமுடியும் என்றும் கருதப்படுகிறது.

தேசியப் பட்டியலில் உள்ள மேலும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா செய்து, புதியவர்கள் பதவி ஏற்ற பின்னர் திரு.காமினியை அமைச்சராக்கவே ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும், தேசியப் பட்டியலில் உள்ளவர்கள் இராஜினாமா செய்வதில் இழுபறி நிலை காணப்படுவதால், திரு.காமினியை அதற்கு முன்னரே அமைச்சராக்கக்கூடும் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

## அகதிகளுக்கான கதவுகளை மூடும் ஐரோப்பிய நாடுகள்! இலங்கைத் தமிழ் அகதிகளின் எதிர்காலம் கேள்விக்குறி!!




சுவிட்சர்லாந்தில் 'போட்டம்' அமைப்பினர் நடத்திய ஆர்ப்பாட்டம். "வெளிநாட்டினரும் மனிதர்களே" என்று கூறும் பதாகைகளோடு ஊர்வலம்.

சுவிட்சர்லாந்தில் உள்ள இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்துமாறு அங்குள்ள 'பொட்ல்' என்னும் அமைப்பினர் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இலங்கைத் தமிழர்களும் உண்ணாவிரதம் ஒன்றை நடத்தியிருந்தனர்.

ஆனால் சுவிஸ் அரசு திருப்பி அனுப்பும் முடிவில் உறுதியாக இருந்து வருகிறது.

இதேவேளையில் நெதர்லாந்தும் அகதிகளைத் திருப்பி அனுப்பும் முடிவில் இருக்கிறது.

அங்கு விரைவில் தேர்தல் நடைபெற உள்ளதால் வெளிநாட்டவர் பிரச்சனையை முக்கிய அரசியல் கட்சிகள் கிளப்பி வருகின்றன.

ஏப்ரல் மாதம் முதல் வெளிநாட்டவருக்கு நீண்டகால விசா வழங்குவதை நெதர்லாந்து அரசு நிறுத்திவிட்டது. அகதிகளுக்கு வழங்கும் உதவிப்பணத்தை குறைப்பதற்கான சட்ட மூலமும் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாட்டு அகதிகளும் பெருமளவில் நெதர்லாந்தில் தங்கியுள்ளனர். இலங்கைத் தமிழ் அகதிகளும் அங்கிருந்து திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

ஐரோப்பிய நாடுகள் பல அகதிகளுக்காக திறந்து வைத்திருந்த கதவுகளை மூடி வருகின்றன. டென்மார்க்கிலும், சுவீடனிலும் அகதிகளைக் கட்டப்படுத்தும் புதிய விசா முறைகள் நடைமுறைக்கு வந்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் அகதிகளை வெளியேற்றும் போக்குகள் அதிகரித்து வருவதால் அங்குள்ள தமிழ் அகதிகளும் அச்சத்தில் இருக்கின்றனர்.

வெளியேற்றப்போவதாக கூறும் நாடுகளில் இருந்து வேறு அயல் நாடுகளுக்கு சிலர் தப்பிச் செல்லுகின்றனர். எனினும் சகலரும் அப்படி தப்பிச் செல்வது சாத்தியமல்ல. மேலும் எல்லைகளிலும் கடும் கண்காணிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

## உளரீதியாக உடைந்துவரும் சிறுவர்கள்! யாழ் கருத்தரங்கில் அரச அதிபர் கவலை!!

யாழ் குடாநாட்டில் உடல் -உள ரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொகை அதிகரித்து வருவதாக யாழ் அரச அதிபர் திரு.கா.மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

யாழ் அரச செயலகத்தில் உடல்- உளரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

"உடல், உள ரீதியாக சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். குறிப்பாக இடம் பெயர்ந்த குடும்பங்கள், பொருளாதாரத் தடையால் பாதிக்கப்படும் குடும்பங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த சிறுவர்களே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்" என்றும் யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

யாழ் கல்விப் பணிப்பாளர் அங்கு உரையாற்றும் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சிகிச்சையளிக்க போதிய மருத்துவ, சுகாதார உபகரணங்கள் இல்லாமல் இருப்பதாக கூறியதுடன், மாணவர்கள் மட்டுமல்லாமல், ஆசிரியர்களும் உடல், உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## வங்கியின் கதவு எப்போது திறக்கும்? கேள்விக்குறியோடு மூதூர் மக்கள்!

(திரு மலை நிரு பர்)

மூதூர் கிராமிய வங்கியில் தங்கள் நகைகளை அடைவு வைத்த பொதுமக்கள் அவற்றை மீளப் பெற்றுக்கொள்ள முடியாமல் அவதிப்படுகின்றார்கள்.

நகைகளை மீளப்பெறுவதற்காக வட்டியுடன் சேர்த்து பணத்தைச் செலுத்தி இரண்டு வருடங்களுக்கு மேலாகியும் தங்கள் நகைகளை இதுவரை வங்கி நிருவாகம் திருப்பித் தராதது அநியாய செயல் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

பலதடவைகள் இதுபற்றி வங்கி நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டபோதும் வங்கி வாளாவிருப்பது கவலையைத் தருகிறது என்று பாதிக்கப்பட்டவர்கள் 'முரசு'க்குத் தெரிவித்தனர்.

தங்கள் பணத்துக்கு சரியாக வட்டி அறவிட்டவர்கள் எங்கள் நகைகளை இரண்டு வருடகாலமாக வைத்திருப்பது என்ன நியாயம் என்றும் கேட்கிறார்கள்.

## சீதனக் கொடுமைக்கு தடை! மக்கள் கருத்தறிய திட்டம்!!

சீதனக் கொடுமையை ஒழிக்கப் போவதாகவும், சீதனம் வாங்குவதையும், கொடுப்பதையும் தடைசெய்யும் சட்டம் கொண்டுவரப் போவதாகவும் புலிகள் அமைப்பினர் எற்கனவே அறிவித்திருந்தனர்.

புலிகள் அமைப்பின் பெண்கள் பிரிவினரால் வெளியிடப்படும் 'சுதந்திரப் பாவைகள்' பத்திரிகையிலும் சீதனத் தடை சட்டம் விரைவில் வரும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது புலிகள் அமைப்பினர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் சீதனத் தடையை கொண்டுவருவதற்கு முன்னர் மக்களிடம் அது பற்றிக் கருத்துக் கேட்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே சீதனம் வாங்குவோரிடமும், கொடுப்போரிடமும் புலிகள் ஒரு குறிப்பிட்ட தொகையை இயக்க நிதியாக பெற்று வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பாதைத் தடைகள் நீங்கின புகார்களை அடுத்து நடவடிக்கை!

(அக்குறணை நிருபர்)

கண்டி- மாத்தளை பிரதான வீதியில் அக்குறணை பசாரில் அமைந்துள்ள குறுகலான பிரதான வீதி ஓரங்களில் எத்தனையோ நடைபாதை வியாபாரிகள் மரக்கறி, பழவகைகள் போன்றவற்றை வைத்துப் பரப்பி வியாபாரம் செய்து வந்தார்கள். இதனால் பிரதான வீதியூடாகப் போகும் கனரக வாகனங்கள் மற்றும் அவசரமான அம்புலன்ஸ் வண்டிகளுக்குக்கூட பெரும் சிரமத்தையும்-பல நீண்ட நேரங்கள் தாமதத்தையும் தடையையும் இந்த வியாபாரிகள் ஏற்படுத்தினர்.

பலமுறை பொலிசார் எச்சரித்தும் அவர்கள் அதனை சட்டை செய்யவில்லை.

இறுதியாக கடந்த 17.05.94ம் திகதி நண்பகல் பொழுதில் பொலிசாரின் அதிரடி நடவடிக்கையாக வீதியோர வியாபாரிகளின் எல்லாப் பொருட்களையும் ஒரு வாகனத்தில் ஏற்றிச் சென்றுவிட்டார்கள்.

இப்பொழுது வீதி போக்குவரத்திற்கு இசைவானதாகக் காணப்படுகிறது.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை விபரம் கேட்டபோது... பதினைந்துக்கும் மேற்பட்ட புகார்கள் தம்மை வந்தடைந்ததாகவும், அதனால் மேற்படி அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் விபரம் தெரிவித்தார்.

## கடத்தியோரை விடுவியுங்கள் ஒற்றுமைக்கு ஊறு வேண்டாம்!

கிழக்கில் தமிழ் பேசும் சமூகங்களின் நல்லுறவு வலுப்பெற்றுவரும் இவ்வேளையில் ஏறாவூரைச் சேர்ந்த இரு முஸ்லிம் ஏழைத் தொழிலாளிகளை கடந்த 16.05.94 அன்று சந்தனமடு ஆற்றில் வைத்து விடுதலைப் புலிகள் அமைப்பினர் கடத்திச் சென்றுள்ளனர்.

சம்பவத்தினம் சந்தனமடு ஆற்றில் அவர்கள் உழவு இயந்திரமொன்றில் மணல் ஏற்றிக்கொண்டிருக்கும் போது அவ்வழியால் வந்த புலிகள் பிரஸ்தாப நபர்களையும், உழவு இயந்திரத்தையும் கடத்திச் சென்றுள்ளதாகத் தெரிய வருகிறது.

இரு ஏழைத் தொழிலாளிகளையும் மனிதாபிமான முறையில் விடுவிக்கக் கோரி ஏறாவூரைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் புலிகள் அமைப்பினரைக் கேட்டுள்ளதோடு எதிர்காலத்திலும் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாது தமிழ் பேசும் இரு சமூகங்களினதும் நல்லுறவை பாதுகாக்க உதவுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## திரும்பிய அகதிகள் தவிப்பு! யூ.என்.எச்.சி. ஆரிடம் புகார்

இந்தியாவில் இருந்து யாழ் திரும்பிய அகதிகளுக்கு போதிய நிவாரணம் கிடைக்கவில்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலய செயலகத்தில் அந்த புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

74 குடும்பங்கள் வசிப்பிடம் இன்றியும், உணவு முத்திரைகள் இன்றியும் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகம் அகதிகளுக்கு உதவி வருவதாகவும் கூறப்படுகிறது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# செல்வாவை மறக்காத தி.மு.க.




தமிழகத் தலைநகரம் சென்னையில் நடைபெற்ற தந்தை செல்வநாயகம் அவர்களது பிறந்தநாள் விழாவில் கலைஞர் மு.கருணாநிதி உரையாற்றுகிறார்.
(தமிழ் நாட்டிலிருந்து ஏழுமலை)

## பராமரிப்பில்லாத மின்சாரத் திட்டம்
## உடன் நடவடிக்கை கோரும் பாவனையாளர்கள்

(தினமுரசு நிந்தவூர் நிருபர்)

நிந்தவூர்ப் பகுதி மின்சாரத் திட்டத்தைப் பராமரிப்பதற்கான இலங்கை மின்சார சபையின் உப அலுவலகம் ஒன்று நிந்தவூரில் திறக்கப்படாமையால் மின் பாவனையாளர்கள் பெரும் சிரமங்களையும், அவலங்களையும் அனுபவித்து வருகின்றனர்.

நிந்தவூர்ப்பகுதிக்கான மின்சாரத் திட்டத்தை நிந்தவூர் பிரதேச சபையிடமிருந்து (முன்னைய கிராமசபை) இலங்கை மின்சார சபை பொறுப்பேற்றுப் பல வருடங்கள் கழிந்தும் நிந்தவூரில் மின்சாரசபை உப அலுவலகம் ஒன்று திறக்கப்பட ஆவன செய்யப்படவில்லை.

நிந்தவூர்ப் பகுதியில் சுமார் மூவாயிரத்துக்கு மேற்பட்ட மின் பாவனையாளர்கள் இருப்பதுடன், பெருந்தொகையில் 'அரிசி ஆலைகள், மரம் அரியும் ஆலைகள் என்பனவும் உள்ளன. 12 மின்மாற்றிகளும் உள்ளன.

எனினும் மின்சாரம் தொடர்பான சிறியதொரு கருமம் முடிப்பதற்கும் சுமார் ஐந்து மைல் தொலைவில், கல்முனையில் அமைந்திருக்கும் இலங்கை மின்சார சபை அலுவலகத்தையே நாடவேண்டிய அவலம் நீடித்துவருகின்றது.

ஒரு மின்பாவனையாளரது மின் தொடர்பில் சிறிய 'பியூஸ்' ஒன்று போட வேண்டுமானாலும் கல்முனை மின் அத்தியட்சகர் அலுவலகத்துடன் தொலைபேசியில் அல்லது நேரில் தொடர்புகொண்டு அங்கிருந்தே மின்சாரசபை தொழிலாளரை வரவழைத்து 'பியூஸ்' போடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை இருந்துவருகின்றது!

தற்செயலாக நிந்தவூர்ப் பகுதியில் மின்சார ஒழுக்கு ஒன்று ஏற்பட்டு பாரிய சேதம் ஏற்படும் நிலையிருப்பினும் கூட அத்தருணத்தில் கல்முனையிலிருந்து மின்சாரசபை தொழிலாளர்கள் வந்துதான் மின்சாரத்தை நிறுத்த வேண்டிய அவலம் இருந்து வருகின்றது.

இந்த அவலநிலை குறித்து நிந்தவூர் பிரதேச சபையின் மாதாந்த செயலமர்வின்போது, ஐ.தே.க. உறுப்பினர் ஜனாப்.எச்.எம்.றசீட் குரல் எழுப்பினார்.

"மின் ஒழுக்கு ஒன்று ஏற்பட்டால் நிந்தவூர் முற்றாக எரிந்து சாம்பலான பின்னரே மின்சார சபையினர் வந்தடைவர்" என அவர் சபையில் விசனிப்புடன் கூறினார்.

எனவே மின் கட்டணங்களை அறவிடுவதிலும், கட்டணம் செலுத்தத் தாமதமாகுமிடத்து மின் தொடர்பைத் துண்டிப்பதிலும் 'துடிப்புடன்' செயல்படும் மின்சார சபை, நிந்தவூர் மின்பாவனையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் கூடிய கரிசனை காட்ட வேண்டுமெனக் கோரப்படுகின்றது.

உடனடியாக பகல் வேளையிலும், இரவிலும் நிந்தவூரில் தங்கி கடமை புரிவதற்கு மின் கம்பி இடுபவர் சகா (லைன்ஸ்மன்)வும், மின் தொழிலாளர் இருவரும் நியமிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்றது.

அதே வேளை மின்சாரசபை உப அலுவலகம் ஒன்றை மிக விரைவில் இங்கு திறப்பதற்கும் ஆவன செய்யப்பட வேண்டுமென மின் பாவனையாளர்கள் கோருகின்றனர்.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய
நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர
வேண்டுமா? இன்னலுக்குப்
பின் இன்னலாக வரும்
தறுவாயில் எதிர் நீச்சலுக்கு
ஏணிப்படியாக பற்பல



உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி,
தீர்க்க முடியாது என
முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா
நோய், தீராத நோய்கள்
அனைத்துக்கும் அம்மனிடம்
வாருங்கள்.

கொழும்பு கொட்டாஞ்சேனையில் மகாவிகாரை, கொட்டாஞ் சேனைப் பொலிஸ் நிலையம் இவற்றின் மத்தியில் அமைந்துள்ள புதியதோர் இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, என் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.

தலைமைப்பீடம்

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பில்- இல. 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 078-71592, 078-71243

வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.
FAX: 0094 2508, 0094 3093


## தமிழ் சேவையில் மட்டும் அடிக்கடி ஏன் தடங்கல்?

இலங்கையின் மத்திய மாகாணமான கண்டியில் இருந்து ஒலிபரப்பாகும் "தமிழ் கண்டி." ஒலிபரப்பு மந்த நிலையை அடைந்துள்ளது.

தினம்தோறும் இரவு 6.30மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவு பெறும் இவ் ஒலிபரப்பில் ஒரு நிகழ்ச்சியைக்கூட ஒழுங்காக கேட்க முடியாத வண்ணம் இடை இடையே இரைச்சல்களும், தமிழ் பாடல்களுக்கிடையே சிங்களப் பாடலும் தனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் போதாது- என்றவாறு நுழைந்து கொண்டு தமிழ் பாடலை தூங்க வைத்து விடுகிறது.

இது மேலதிகமாக சனிக்கிழமையில் காலை 10மணிக்கு ஒலிபரப்பாகும் "தமிழ் கண்டி." ஒலிபரப்பிலும் இதே மாதிரி இடையூர்களே ஏற்படுகின்றன. ஒலிபரப்பு முடிந்த பின் ஒலிபரப்பாகும் 'சிங்கள' ஒலிபரப்பில் எந்தவித இடையூறுகளும் இல்லாமல் செயற்படுகிறது. தமிழ் சேவைக்கு மட்டும் இடையூறுகள் ஏன்?

சம்பந்தப்பட்ட வானொலி அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் எடுத்து திருத்துவார்களா?

'முரசு' மூலம் கோரும் 'தமிழ் சேவை' வானொலி நேயர்கள்.

றைகம ஸ்ரீகாந்தன்-இங்கிரிய.

## தங்க இடமில்லாத இறங்கு துறை!

(திருமலை நிருபர்)

திருகோணமலை பிறிமா இறங்குதுறையில் இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்கள் தங்குவதற்கு எவ்வித இட வசதியும் செய்துகொடுக்கப்படவில்லை.

சீனக்குடாவில் அமைந்துள்ள பிறிமா இறங்கு துறையில் தரித்து நிற்கும் கப்பல்களுக்கு வேலைக்குச் செல்லும் அதிகாரசபை ஊழியர்கள் கடமை முடிந்ததும் கப்பலிலிருந்து இறங்கி வெய்யிலிலும் மழையிலும் திறந்த வெளியில், தங்களை ஏற்றிச் செல்ல வாகனம் வரும்வரை காத்து நிற்க வேண்டியிருக்கிறது. இரவில் இரண்டு மணிக்குக் கடமை முடிந்து இறங்குபவர்கள்கூட அதிகாலையில் வாகனம் வரும்வரை மழையிலும், குளிரிலும் நடுங்கியபடியே தான் காத்திருக்க வேண்டியுள்ளது.

ஆண்டாண்டு காலமாகத் தொடரும் இந்த அவலம் தொழிலாளர்களை மட்டுமல்ல, அதிகாரிகள் தரத்தில் உள்ளோரையும் பாதித்து வருகிறது. பல தடவைகள் மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லியும் பலன் கிட்டவில்லை என்று ஊழியர்கள் முரசுக்குத் தெரிவித்தனர்.

## அக்குறணையில் ஒரு குறை

அக்குறணை ஆறாம் கட்டைச் சந்தியில் இருந்து திரும்பி புளூ கொஹதன்னை ஊடாக கஸாவத்தை போகும் சுமார் ஒன்றரை மைல் நீளமான 'அல் அக்ஸா' பாதை கடந்த பெருமழைக்குப் பின் இப்பொழுது மூன்று மாதங்களுக்கு மேலாகியும் செப்பனிடப்படாமல் குன்றும் குழியுமாக சீரழிந்து கிடக்கிறது.

மேற்படி பாதையால்த்தான் அக்குறணை ஸாஹிராக் கல்லூரிக்கும் போக வேண்டும். இப்பொழுது எறிக்கும் வெய்யிலில் காய்ந்த பாதைப் பூமியில் இருந்து அதிகமான தூசி காற்றோடு கிளம்பி பாடசாலை மாணவர்களின் சீருடைகளையும் அழுக்காக்குகின்றது. வாகனங்கள் செல்ல முடியாமல் ஆகிவிட்ட நிலையானதால் ஏற்கனவே இ.போ.சவின் இரண்டு பஸ்கள் போய் வந்ததை இப்போது ஒன்றாகக் குறைத்தும் விட்டார்கள். இதனால் பிரயாணிகள் பயணம் செய்வதும், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கும் பெரும் சிரமமாக இருக்கின்றது. எனவே அக்குறணை பிரதேச சபை வாரியாக பாதைகள் செப்பனிடப்படுவதைப் போன்று சம்பந்தப்பட்டவர்கள் 'அல் அக்ஸா' வீதியையும் கவனிக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

## மீளக்குடியேறியவர்களின் மீளாத் துயரம்
## பாடசாலையை பகிஷ்கரித்து மாணவர் போராட்டம்!

திருகோணமலை மாவட்டம் - ஆலங்கேணி, ஈச்சந்தீவு மக்கள் சுமார் மூன்று ஆண்டுகாலம் கிளிப்பன்பேக் அகதி முகாமில் அல்லல்பட்டு, மீண்டும் சென்ற வருட நடுப்பகுதியில் மீளக் குடியேற்றப்பட்டவர்களாகும். அப்போது எமக்கு பல்வேறு உறுதிமொழிகளும், உதவிகளும் வழங்கப்பட்டன. அவை தற்போது புறக்கணிக்கப்பட்டுள்ளன. இன்று நாம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றோம்.

1. பாடசாலைக்கும் ஊருக்குமான பஸ்சேவை 12.04.94ம் திகதி தொடக்கம் நிறுத்தப்பட்டுள்ளது. நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கிளப்பன்பேக் அகதி முகாமிலிருந்து சுமார் 4 மைல் தூரம் கால்நடையாகப் பயணம் செய்வதால் ஏற்கனவே நொந்து போயுள்ள நம் உடல் உள வேதனைகளுக்கு ஆளாகின்றோம்.
2. பாடசாலைக்கு வந்தாலும்கூட ஆசிரியர்களைக் காணமுடியாதுள்ளது. 18க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நகரத்திலிருந்து இங்கு பஸ் சேவை இல்லாததால் தனியார் வாகனங்களில் சுமார் 45/= ரூபாய் செலவளித்து வரமுடியாமல் திண்டாடுகின்றார்கள். அவர்கள் பாடும் கஷ்டமே.
3. சென்ற வருடம் மீளக் குடியேற்றப்பட்டு நடத்தப்படும் இப்பாடசாலையில் இதுவரையில் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. இருக்கும் ஒரு கிணறும் பாழடைந்த - மனித உலும்புக்கூடுகள் பொறுக்கி எடுக்கப்பட்ட கிணறாகும்.
4. மாணவர்கள் நெருக்கமான வகுப்பறையிலே கல்வி கற்றுக்கொண்டிருக்கின்றனர். 700க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயிலும் இப்பாடசாலையில் கட்டிடப் பற்றாக்குறை நிலவுகிறது. இது தீர்க்கப்பட வேண்டும்.
5. விடுதி வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.
6. பஸ்சேவை விடயம் சம்பந்தமாக ஏற்கனவே பிரதேச செயலாளர், கோட்ட, மாவட்ட, மாகாண, கல்வி அதிகாரிகள், கல்வி அமைச்சு, ஆளுனர், இணைப்பதிகாரி, போக்குவரத்துச் சபை முகாமையாளர், பாராளுமன்ற உறுப்பினர், அமைச்சர், பொலிஸ் அதிகாரி ஆகியோருக்கு அறிவித்திருந்தும் எவ்வித பலனும் கிட்டவில்லை.

எனவே மேற்கூறிய கோரிக்கைகள் யாவும் நிறைவேற்றி வைக்கப்படுவதுடன் உடனடியாக பஸ்சேவையை நடாத்தி, எம் கல்விக்கு தடங்கல் ஏற்படுத்தாமல் தொடர்ந்தும் கற்பதற்குரிய வசதியை ஏற்படுத்தித்தர ஆவன செய்யப்பட வேண்டும், அல்லது தொடர்ச்சியாக பகிஷ்கரிப்பில் ஈடுபடுவோம்.

மாணவர் ஒன்றியம்- ஆலங்கேணி, ஈச்சந்தீவு

## புகார் பெட்டி

## திருப்பணி வேண்டி நிற்கும் அம்பாள் ஆலயம்



கொழும்பு-அவிசாவளை பிரதான வீதியில் புவாக்பிட்டிய நகரையொட்டி அமைந்திருக்கும் எலிஸ்டன் தோட்டம் மேல் டிவிஷனில் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம் உள்ளது. இக்கோயில் சுவர்கள் உறுதியாக இல்லை. கூரையும் பழுதடைந்து சரிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது.

ஆகம நியமங்களின் பிரகாரம் இவ்வாலயத்தை புனரமைத்து கும்பாபிஷேகம் நடாத்த பரிபாலன சபையினர் திருப்பணியினை ஆரம்பித்துள்ளனர்.

சைவப் பெரு மக்களும், தாராள சிந்தை கொண்டவர்களும் திருப்பணி கைங்கரியத்தில் ஆர்வம் கொண்டவர்களும் பணமாகவோ, பொருளாகவோ கொடுத்து திருப்பணியை நடத்த உதவும்படி திருப்பணிச் சபையினர் அன்புடன் கேட்டுக்கொள்கின்றனர்.

அப்படி அனுப்ப விரும்புபவர்கள் திருப்பணிக்காக அவிசாவளை இலங்கை வங்கியில் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவில் (கணக்கு இலக்கம் 10090) கணக்கு இலக்கத்திற்கோ அல்லது பொருளாளர் எம்.இராமசாமி, ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம். எல்ஸ்டன் தோட்டம் மேல் டிவிஷன், புவாக்பிட்டிய எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

## பிறந்தநாள் வாழ்த்து

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
"செல்வி ரேச்சல் சிந்தியா"

முந்தல் கீரிமட்டாவைச் சேர்ந்த திரு-திருமதி நவலிங்கம்-பாக்கிய ராணி தம்பதியினரின் செல்வம் புதல்வி ரேச்சல் சிந்தியா தனது முதலாவது பிறந்த தினத்தை தனது முந்தல் இல்லத்தில் 05.06.1994ஆம் திகதி சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அம்மா, அப்பா, மாமன்மார்களான சேகர், வன்டோ, குமார, திநேஷ் மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சகல கலைகளும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

முத்தளம் வீதி, கீரிமட்டா, முந்தல்.


## முகவர்கள் தேவை

காலி, மாகந்துற, தண்டகமுவ, குளியாப்பிட்டிய, பியகம, கொட்டியாகும்புர, பிங்தெனிய, இங்கிரிய, மோரகல, பிட்டிகல, தல்கஸ்பே, எல்பிட்டிய, லுனுவில.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு—
விநியோக மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05.

CIRCULATION MANAGER
NO: 88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 820265

விளம்பரம் செய்யுங்கள்
வியாபாரத்தைப் பெருக்குங்கள்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## எக்ஸ்ரே ரிப்போர்ட் எக்ஸ்ரே ரிப்போர்ட் எக்ஸ்ரே ரிப்போர்ட் எக்ஸ்ரே ரிப்போர்ட்

கடந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமா கொல்லப்பட்டபோது ஆட்சியின் கடிவாளம் பிரதமராக இருந்த டி.பி. விஜேதுங்காவின் கைக்கு வந்தது.

அவராகக் கேட்கவும் இல்லை. அதற்காக முயலவும் இல்லை. மறைந்த ஜனாதிபதி அதற்குரிய இடத்தில் அவரை வைத்து விட்டுப்போக, இயல்பாகவே கடிவாளம் கைக்குப் போனது.

அடியாட்களின் மூலமாக கட்சிக்கு ஏற்பட்ட கெட்ட பெயரை சரிப்படுத்துவதும், இனி அவ்வாறானவர்களுக்கு இடமில்லை என்று வெளிப்படுத்துவதுமே 'சொத்தி உபாலி' விவகாரத்தை பகிரங்கப்படுத்திய காரணமாகும்.

மறு பக்கத்தில் கட்சிக்குள் சிறிசேன குரேயின் மூலம் எவ்வித இடையூறும் ஏற்படாமலும் பார்த்துக்கொண்டார்கள்.

'தனிமரமாகிவிட்டதாக' சிறிசேன குரே

வீரசூரியா கொள்கை திட்டமிடல் செயலாளராகவும், ஜனாதிபதியின் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அதிகாரியாக இருக்கும்போதும் அரசியல் அனுபவம் உள்ளவர் அவர்.

அரசாங்கத்தின் ஏரிக்கரை பத்திரிகைகளின் புதிய தலைவராக நியமிக்கப் பட்டுள்ளவரும் காமினியின் நெருங்கிய நண்பர்.

ஒரு வருடத்திற்கு முன்னர்

வெளியிட்டு வருகிறார்.

பிரேமா காலத்தில் சிக்கனமில்லாமல் செலவுகள் நடந்துவிட்டதாக கூறி கஜானாவைப் பூட்டி கையில் சாவியை எடுத்துக்கொண்டவர், இப்போது கஜனாவைத் திறந்துவிட்டுள்ளார்.

நிதி நெருக்கடி ஏற்படப் போவதாக எதிர்க்கட்சிகள் எழுந்து துள்ளத் தொடங்கிவிட்டன.

தென் மாகாண தேர்தலில் பெற்ற வெற்றி என்பதை துடுப்புச் சீட்டாக

நடத்தியிருக்கின்றன.

இந்தியாவை தொடர்ந்தும் அந்நியப் படுத்திக்கொண்டிருப்பதும், அதிருப்தியை அதிகமாக்குவதும் யாருக்கு நஷ்டம்?

புலிகள் அமைப்பினருக்கு சார்பான வர்களே ஊர்வலம் நடத்தியிருக்கிறார்கள்.

இந்தியப் பிரதமருக்கு எதிராக அமெரிக்காவிலும் ஊர்வலம் நடத்த முடியும் என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள

# ஆளும் கட்சி அரசியலில் அடித்தாடவரும்

## புதிய அணி



இந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிசேன குரேயின் ராஜினாமாவோடு கட்சியின் முழுக் கட்டுப்பாட்டையும் ஜனாதிபதி டி.பி.தன் கையில் எடுத்துக் கொண்டார்.

அதற்காக அவர் சில முயற்சிகளை செய்ய வேண்டியிருந்தது. [illegible]

[illegible] புதிய [illegible] அரசியல் [illegible]

[illegible] புதிய [illegible] இறக்கப் [illegible] காட்டும் நிகழ்ச்சி [illegible] வந்துவிட்டது.

ஆளும் கட்சியின் முதல்வராக ஜனாதிபதி டி.பி.விஜேதுங்க இருக்கும் போதும், தென்மாகாண சபைத் தேர்தல் தோல்விக்கான பழி குரே மீதுதான் விழுந்திருக்கிறது.

தென் மாகாண தோல்விக்கு பின்னர் அப்போது குரே விடுத்த அறிக்கைகளும் ஜனாதிபதியை மறைமுகமாக குற்றம் சாட்டியிருந்தன.

கட்சியின் பொதுச் செயலாளராக இருக்கும் ஒருவர் தலைமை தவறுவிட்டதாக கூறிக்கொண்டு பதவியில் இருப்பது சாத்தியமானதல்ல.

முன்னாள் ஜனாதிபதி பிரேமாவால் கட்சியின் பொதுச் செயலாளராக்கப்பட்டவர் சிறிசேன குரே.

பிரேமாவின் கொள்கைகளுக்கு மாறாக அரசாங்கம் செல்கிறது, கட்சி போகிறது என்று நினைத்திருந்தால் அவர் திருத்த முயன்றிருக்கலாம்.

முடியாது என்று கண்டால் தனது பதவியை உடனே துறந்திருக்கலாம்.

மாறாக தேர்தல் தோல்விக்குப் பின்னர் தலைமை மீது தவறு சொல்லி உடனடி அறிக்கை விட்டமை 'குரேயின்' அரசியல் முதிர்ச்சியில் ஒரு சறுக்கல் என்றே நினைக்கத் தோன்றுகிறது.

எனினும், தோல்விக்கான பொறுப்பில் இருந்து தான் மட்டும் நழுவிக்கொள்ள முற்படாமை மூலம் திரு.சிறிசேன குரே அரசியல் நாகரிகத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.

குரேயின் இராஜினாமாவின் பின்னர் பொறுப்பேற்றுள்ள புதிய பொதுச் செயலாளர் கட்சிக்கு புத்துயிர் ஊட்டப் போவதாக கூறிவருகிறார்.

[illegible] அவகாசம் போதுமானதல்ல [illegible] அவர் புரிந்துகொண்டு [illegible]

'சொத்தி உபாலி' மற்றும் பாதாள [illegible] என்று அழைக்கப்படும் [illegible]

[illegible] முறையானவர்களை [illegible] ஆளும் கட்சி [illegible] என்றும் நம்பிக்கையை [illegible] அந்த [illegible]

ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்கு ஒரு கட்டத்தில் துணை புரிந்த, பின்னர் ஆளும் கட்சியின் பெயரால் சட்டத்தை தம் கையில் எடுத்துக் கொண்டவர்களை அதே கட்சியே சட்டத்திடம் ஒப்படைத்துள்ளது.

கூறியிருக்கிறார். மரத்தில் இருந்த கிளைகள் கூட சந்தடியே இல்லாமல் வெட்டப்பட்டு விட்டன. தற்போதைக்கு மீண்டும் கிளைகள் தழைக்க வழியில்லை.

'சொத்தி உபாலி' விவகாரத்தில் சிறிசேன குரேயும் இறுக்கப்படக்கூடும். கட்சிக்குள் அவர் பிரச்சனை கிளப்பினால், உபாலி விவகாரம் ஒரு அம்புபோல அவரை நோக்கி பாய்ந்து வரும். எனவே குரேயின் பின்னால் நிற்க ஆளும் கட்சிக்குள் எவருக்கும் துணிவு வராது.

'சிறிசேன குரே' போன்றவர்கள்தான் அடியாட்களின் அத்துமீறல்களுக்கு காரணம் என்று ஆளும்கட்சி அறிவிக்கவில்லை.

ஆனால், உபாலியை ஆதரித்து குரே விடும் அறிக்கைகள் அவருக்கே பாதகமாகி விடுகின்றன. அதனால் புதிய தோற்றம் காட்டும் ஆளும் கட்சியின் உத்திக்கு அது சாதகமாக இருக்கிறது.

எதிர்வரும் தேர்தல் களத்தில் இறக்கி விடப்பட புதிய அணி தயாராக்கப்பட்டு வருகிறது.

அந்த அணிக்கு திரு.காமினி திசாநாயக்காவே கப்டனாக செயல்படுவார் என்று தெரிகிறது.

காமினி ஒரு அனுபவமுள்ள கப்டன். ஆளுமையும் இருக்கிறது.

சமீபத்தில் அரசாங்க மட்டத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள் காமினிக்கு சாதகமான ஆடு களத்தை உருவாக்கியுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் பதவி காமினி காலூன்றி நிற்பதற்கு கைகொடுக்கும். அமைச்சர் பதவிதான் மட்டை. எதிரணிகள் வீசும் பிரசார பந்துகளை அந்த மட்டையால் ஓங்கி அடித்து விரட்டிவிட காமினி தயாராகி வருகிறார்.

காமினியின் மைத்துனர் டாக்டர் விக்கிர

திரு.காமினியை வசைபாடிய அரச பத்திரிகைகள் இன்று அவருக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டன. படத்தோடு முதற்பக்கத்தில் செய்திகள் தருகின்றன. காலத்தின் கோலம் என்பது இதுதான்.

யானைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கு ஒரு காலம் வரும். ஆனால் காமினி பூனையல்ல. தட்டிவிட்டால் பாய்ந்து செல்லும் குதிரை. டி...பி.. தட்டிக்கொடுத்துவிட்டார்.

காமினி வந்ததோடு பிரதமர் ரணிலின் பெயர் அடிபடுவது குறைந்துவிட்டது. எந்த வம்பிலும் மாட்டிக்கொள்ளாத பிரதமராக அவர் இருந்துகொண்டிருக்கிறார். பிரேமா இருந்தபோது டி.பி.விஜேதுங்கா இருந்தது மாதிரி ரணிலும் தானுண்டு தன் பொறுப்புண்டு என்று இருப்பதாகவே தெரிகிறது.

ரணிலை தினம் சந்திப்பவர்களுக்குக்கூட அவர் என்ன நினைக்கிறார் என்பது தெரியவில்லை.

என்றாலும் புனரமைக்கப்பட்டுள்ள புதிய அணிக்கு அவர் எதிரியல்ல என்பது தெரிகிறது. புதிய அணியும் கட்சிக்குள் போட்டியை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்படவில்லை.

யார் குத்தியும் அரிசியானால் சரி என்பது மாதிரியான எண்ணம் வந்துவிட்டது. திரு.காமினியால்தான் முடியும் என்றால் விட்டுத்தான் பார்ப்போமே, தேர்தலில் வெற்றி பெறுவதுதான் முக்கியம் என்பதே ஆளும் கட்சியினரின் மனோபாவமாகும்.

எனவே-புதிய அணியை அதிகாரமுள்ள அணியாக்கி களத்தில் இறக்கி விட்டபடி வாக்காளர்களை கவரும் நிவாரண அறிவிப்புக்களை ஜனாதிபதி தினமும்

வைத்துத்தான் எதிர்க்கட்சிகள் தமது அரசியலை நடத்துகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி செய்த மிகப் பெரிய தவறு தென்மாகாண சபையை கலைத்து அவசரமாக தேர்தல் நடத்தியதுதான்.

சந்திரிக்கா அலை வீசத் தொடங்கி விட்டதாக காட்டிக்கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு அது ஒரு வாய்ப்பாகிவிட்டது.

அடுத்த தேர்தலில் ஐக்கியதேசியக் கட்சிக்கு நெருக்கடி காத்திருக்கிறது என்றும் மனோபாவம் பொதுவாகவே ஏற்பட்டிருக்கிறது.

அந்த மனோபாவம் ஆளும் கட்சியின் நிரந்தர வாக்கு வங்கிகளை பாதிக்கா விட்டாலும்கூட, கட்சி சார்பற்ற வாக்கு வங்கிகளில் தாக்கம் செலுத்தக்கூடும்.

இப்போது அந்த மனோபாவத்தை உடைப்பதுதான் ஆளும் கட்சிக்குரிய முக்கிய சவாலாக இருக்கிறது.

ஆளும் கட்சியின் அரசியல் களத்தில் இறங்கியுள்ள புதிய அணி அந்த மனோபாவத்தை உடைப்பதில்தான் பெரும் கவனம் செலுத்தவேண்டி இருக்கும்.

புதிய அணி எதிரணிகளின் பிரச்சார சுழல் பந்துகளை எப்படி அடித்தாடப் போகிறது என்பதுதான் தென்னிலங்கை அரசியலில் புதிய சுவாரசியமாக இருக்கப் போகிறது.

■


பிரான்சில் பாரிஸ் நகரில் மீண்டும் நம்மவர்களுக்குள் இரத்தம் சிந்தல்கள்.

## நாரதர்

பாரிஸ் பொலிசார் வெறுப்பாகி விசாரணைகளை தீவிரப்படுத்துகின்றனர்.

கொல்லப்படுபவர்கள் புலிகளுக்கு எதிரானவர்களாகவே இருக்கிறார்கள்.

புலிகளோ மறுத்துக்கொண்டிருக்கிறார்கள். வெளியுலகத்தில் இலங்கைத் தமிழர்கள் மீது மிகவும் பாரிய வெறுப்புக்கள் ஏற்படுவது மட்டும் நிச்சயம் என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.



இந்தியப் பிரதமர் நரசிம்மராவ்

"வெளியே போ" என்று சொல்ல வைத்துவிட்டு, "வெளியேற்றாதே" என்று கண்டனங்கள் எழுப்புவதில் அர்த்தமில்லை.

■

இந்தியப் பிரதமர் திரு.நரசிம்மராவ் அமெரிக்காவுக்கு போய் இருந்தார்.

இலங்கைத் தமிழர்களைக் கொண்ட அமைப்புக்கள் அவருக்கு எதிராக ஊர்வலம்

முடியும். அதைத் தவிர வேறு ஆதாயம் ஏதாவது கிடைக்கப்போவதில்லை.

"மேற்குலக நாடுகளின் சமாதான முயற்சிகளை இந்தியா தடை செய்யக் கூடாது." என்று கோரிக்கையும் முன்வைத்துள்ளார்கள்.

மேற்குலக நாடுகளை திருப்தி செய்ய நினைத்து இந்தியாவை பகைத்துக் கொள்வதால், மேற்கு நாடுகள் ஓடிவந்து தலையிடப் போவதில்லை.

இலங்கைத் தமிழர்களைவிட இந்தியாவின் உறவுதான் மேற்கு நாடுகளுக்கு முதன்மையானது என்பதை மறந்து போவது அரசியல் விவேகமல்ல.

அருகில் உள்ள இந்தியா நமது பிரச்சனையில் தலையிட்டதுவும், தலையிடுவதும் சுயநலம் என்று புலிகள் சொல்கிறார்கள்.

அதில் உண்மை இல்லாமல் இல்லை. தனது தேசிய நலன் குறித்து இந்தியா அக்கறைப்படும்-

எமது பிரச்சனையில் இந்தியாவின் அணுகுமுறையில் அதன் நலன் பற்றி அக்கறை கலந்திருக்கும் என்பதும் உண்மைதான்.

எனினும், இந்தியாவைத் தவிர உலகில் வேறெந்த நாட்டுக்கும் எமது பிரச்சனையில் கூடிய ஈடுபாடு ஏற்படமுடியாது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தியாவின் தேசிய நலன் குறித்த அக்கறையை எமக்கு பாதகமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாறாக பகைத்துக்கொள்ளும் அணுகுமுறை நமக்கே பாதகமாக அமையும்.

இந்தியா மட்டுமல்ல, வேறு எந்தவொரு நாடும் தனது நலன்களை நமக்காக தாரை வார்த்து விடுமன்றோ, நமது விருப்பப்படி எல்லாம் நடந்துகொள்ளும் என்றோ எதிர்பார்ப்பது பொருத்தமானதல்ல.

ஆர்ப்பாட்டங்களைவிட அரசியல் விவேகம்தான் இன்று அவசியப்படுகிறது.

புலிகளும் சரி, ஏனைய தமிழ் அமைப்புக்களும் சரி தமது சொந்த இயக்க நிலையில் இருந்து சகல பிரச்சனைகளையும் அணுகப் பார்க்கிறார்கள்.

அதன்மூலம் தனி ஒரு அமைப்பின் விருப்பு வெறுப்புக்கள் தமிழ் பேசும் மக்களது விருப்பு வெறுப்புக்களாக மாறவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

அதன் விளைவாகவே மாற்றுக் கருத்துள்ளவர்கள் ஒழிக்கப்படுகிறார்கள்.

நண்பர்கள் எதிரிகளாகிறார்கள். இரத்தம் சிந்தி பெற்றுக்கொண்ட உலக அனுதாபமும் அதிருப்தியாக மாறுகின்ற விபரீதமும் ஏற்படுகிறது.

ஒற்றுமையின்மை உள்பகையாக பலவீனம் செய்து கொண்டிருக்கும்போது, அரசியல் விவேகமின்மை வெளியுலக ஆதரவையும் இழக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கைகளில் புலிகளுக்குள்ள திறன் வியப்புக்குரியது.

அதனை அரசியல் விவேகமின்மை பழுதாக்கிவிடும் என்பதை புலிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

■

## அதிரடி அய்யாத்துரை



யாழ்ப்பாணம் போட்டு வந்த எழுத்தாளர் கோமலாருக்கு சந்திரமண்டலத்துக்கு போட்டு வந்த மாதிரியான உற்சாகம். தமிழ்நாட்டுக்குப் போய் பக்கம் பக்கமாய் எழுதிக்கொண்டிருக்கிறார். எங்கடை நாட்டு எழுத்தாளர் பலரின் பெயர்களும் அதிலை அடக்கம். இப்படி எழுதுவார் எண்டு தெரிஞ்சிருந்தா நாலும்போய் சந்திச்சிருக்கலாம். பெயர் வந்திருக்குமல்லோ. அது கிடக்க அவர் ஒரு தவறான தகவலை வெளியிட்டிருக்கிறார். மறைந்த பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக வேண்டும் எண்டு மதம் மாறினவராம். ஜனாதிபதிக்கு அதிகாரமுள்ள சிஸ்டமே ஜே.ஆருக்குப் பிறகுதானே வந்தது. பிழையான தகவல் கிடைச்சிருக்கும்.

கிடைச்ச பதவிக்கு பென்சன் வாற வாய்ப்பும் இருக்குது. இடையிலை ஏன் வம்பை எண்டு ரெண்டு எழுத்தாரை தாஜா பண்ணும் வேலையிலை ஒரு புதிய பிரதிநிதி குதிச்சிருக்கிறார். "போர் எண்டால் போர், சமாதானம் எண்டால் சமாதானம்." எண்டு பேசறது பெயர் தரும் எண்டு ஆசை. ரெண்டு எழுத்தார் போர் செய்ய, அதைச் சொல்லிப் பிழைக்கினம். காட்டிக்கொடுப்பும் ஒண்டுதான். காட்டிப் பிழைப்பும் ஒண்டுதான். வெறும் வாயை மெல்லுறது நல்லதில்லைப் பாருங்கோ.

கனடாவிலை இருந்து வாற 'தாயகம்' பத்திரிகையிலை ஒரு சுவாரசியமான சங்கதி இருந்தது பாருங்கோ. அங்கை உலகத் தமிழ் பெண்கள் அமைப்பெண்டு கோலாகலமாக ஆரம்பிச்சவையாம். தலைவியாக தெரிவு செய்யப்பட்ட பெண்மணி அறிக்கை வாசிக்க வெளிக்கிட்டு இடையிலை கட் பண்ணிப்போட்டாவாம். ஏன் எண்டு கேட்டால், ஐ கான்ட் ரீட் தமிழ் எண்டு கூலாக சொல்லிப்போட்டாவாம். தமிழ் தெரியாத தமிழ் பெண் தலைவி. தலையிலை அடிச்சுக்கொள்ள வேண்டியதுதான். கஸ்டகாலம் பாருங்கோ.

உலக ரிவி துவங்க நினைச்சவரைப் பற்றி முரசிலை செய்தி வந்தது. உடனடியாக ஜெர்மனிலை இருந்து அவர் முரசோடை தொடர்பு கொண்டவராம். தன்னைப் பற்றி பிழையாய் விளங்கின மாதிரி இருக்கு எண்டு கவலைப்பட்டு அவர் ஒரு உண்மையைச் சொன்னவராம். "நான் ஒரு வியாபாரி. கலாசாரம் பரப்பிறது வளர்க்கிறது எல்லாம் என்ரை வேலையில்லை. இங்கை வந்து எங்கடை ஆட்கள் பெட்டிக்கடை போடுகினம். எனக்கு அது விருப்பம் இல்லை. ரிவி. நிகழ்ச்சி வியாபாரம் செய்யப் போறன். காசு போட்டுத்தான் (காட் சிஸ்ரம்) நிகழ்ச்சி பார்க்கலாம்." அவர் உண்மை சொன்னது நல்ல விசயம். அவர் கலாசாரம் பரப்பப் போறதா அவசரப்பட்டு அறிக்கை விட்ட தலைவரை நினைச்சா... சிவ...சிவா! அரசியலில் மீண்டும் சூடாய் குதிச்ச வேகத்திலை அதுக்கும் போய் அவசரப்பட்டு அறிக்கைவிட்டு..... 'மூத்தவர்களே நிதானம்' மறந்தால் இளசுகள் என்ன செய்யிறது? சிவ...சிவா!

கொழும்பிலை தேடுதலில் சிக்கி ஸ்ரேசனிலை இருந்தவர் தன்ரை வீட்டுக்கு செய்தி சொல்லச் சொன்னவராம். செய்தி சொல்லப் போனவர் அந்த வீட்டுக்குப் போய், பெயரைச் சொல்லி, விசயத்தை சொல்லாமல், உங்கடை மகனோ எண்டு கேட்க, அம்மா உடனடியாக கேட்டாவாம். "என்ன பிடிபட்டுப் போனானோ?" அந்தளவுக்கு சகஜமான விசயமாய்ப் போச்சுது பாருங்கோ.

ஈரோடு தமிழன்பன் நல்ல கவிஞர். அவர் சொன்ன கவிதை அனுபவம் ஒண்டு கேளுங்கோ.

*"விடியலில் இவள் கண்*
*விழிப்பதில்லை.*
*இவள் கண்களிலேயே விடியல்*
*விழிக்கும்.*
*கார்காலம் வந்தால் கலாபம் ஆடும்*
*இவள் ஆடினாள் கார்காலமே வரும்*
*வசந்தம் வந்தால் குயில்கள் பாடும்*
*இவள் பாடினால்....*

என்று கவிதையை நிறுத்த,
*"வசந்தமே வரும்"* என்று கவியரங்கத்தில் இருந்தவர்கள் பதில் சொல்ல,
*"வசந்தம் வராது"* என்றாராம் தமிழன்பன்.
அரங்கமே திகைத்து, தவித்ததாம்.
தமிழன்பனே பதிலும் சொன்னாராம்.
*"வசந்தமும் அவள்தான்."*

பாத்தியளோ கவிதையிலும் புதிர் முடிச்சுப் போட்டு, நோகாமல் அவிழ்க்கலாம். ரசிக்கவும் வைக்கலாம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# கறுப்பு சூரியனின் எதிர்கால பொறுப்புக்கள்

# மனம் திறந்து பேசுகிறார் மண்டேலா

**நெல்சன் மண்டேலா 'நியூஸ் வீக்' சஞ்சிகைக்கு பேட்டி அளித்திருந்தார். தன் எதிர்கால இலக்குகள் பற்றி தயக்கமில்லாமல் அவர் சொன்னவை இங்கே........**

கேள்வி: நீங்கள் சோஷலிசக் கொள்கைகளை நாடுகிறீர்களா? அல்லது முதலாளித்துவ சித்தாந்தத்தினை விரும்புகிறீர்களா?

மண்டேலா: நான் இரண்டுக்கும் உடன்பாடானவனல்ல. நான் எப்போதும் சோஷலிசக் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தந்தவனல்ல. எமது சுதந்திர யாப்பில் ஒரு சரத்து - நிலத்துக்குக் கீழுள்ள செல்வம் அனைத்தும் மக்களின் சொத்து என்றுள்ளது. கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இம் முறையே அனுசரிக்கப்படுகிறது. வங்கி மற்றும் சில தனி உடமைகளை தேசியமயமாக்க வேண்டும் என்ற முன்பு நாம் கொடுத்தோம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் இதனை எதிர்த்து எழுந்த குரலுக்கு மதிப்பளித்து அந்த அறைகூவலை நிறுத்திவிட்டோம்.

கேள்வி: 14 வயதானவர்களுக்கு வாக்குரிமை வழங்குவது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

மண்டேலா: இனப்பாகுபாடுகள் உச்சக் கட்டத்திலிருந்த காலகட்டத்தில் 11 வயது முதல் 16 வயதுவரையான இளம் சமுதாயத்தினர் ஆயுதப் பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர். ஆகவே அவர்களும் நாட்டின் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அறிவினைப் பெறும் வாய்ப்பினைப் பெற்றார்கள். இருப்பினும் 14 வயதாக வாக்களிக்கும் வயதைக் குறைப்பதைப்பற்றி மக்கள் தான் தீர்மானிக்க வேண்டும்.

கேள்வி: ஆபிரிக்க தேசிய காங்கிரசிலுள்ள வன்முறை ஆதரவாளர்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக...

மண்டேலா: நாட்டில் நடைபெறும் சம்பவங்களிலிருந்து ஆபிரிக்க மக்களைப் பாகுபடுத்திப் பிரித்துக்காட்ட முடியாது. படிப்பின்மை, வறுமை, பசிக்கொடுமை, தொழிலின்மை, உறைவிடமில்லாமை என்பவைதான் இன்று எம் முன்னுள்ள பிரச்சனைகள். அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு விரோதமான எதிரிகள் இவை. இவற்றிலிருந்து மீள மக்கள் அளிக்கும் ஆதரவைப் பொறுத்திருக்கிறது எமது வெற்றி. என்னைப் பின்பற்றுபவர்கள் என்னுடைய அறைகூவலுக்கு செவி சாய்த்து வந்துள்ளனர். எடுத்துக் காட்டாக ஒரு சம்பவத்தைக் கூறுகிறேன். ஜனாதிபதி எஃப்.டபிள்யூ டி.கிளேர்க் கறுப்பின மக்கள் வாழும் சொவேட்டோ பகுதிக்குச் சென்ற போது எமது ஆ.தே.கா.வின் உபதலைவர் திரு.சிசுலுவிடம் ஒரு பொறுப்பினை ஒப்படைத்தேன். திரு.கிளேர்க்கின் கூட்டங்களுக்கு எத்தகைய இடையூறும் இருக்கலாகாதென அவரிடம் கோரியிருந்தேன். அதுபோல் எந்த அசம்பாவிதமும் இடம்பெறவில்லை.

கேள்வி: பொதுஉடமைவாதிகளை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டிருக்கிறீர்களே?

மண்டேலா: பொதுவுடமைவாதியோ பழமைவாதியோ என்பது முக்கியமல்ல. அவர்கள் ஆ.தே.காவின் கொள்கைகளை-நடைமுறைகளை ஏற்று இணைந்தவர்கள். காங்கிரசின் கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாகவே அவர்கள் நடந்து கொள்வார்கள்.

கேள்வி: வெள்ளையர் இதுவரை அனுபவித்து வந்த தனிச் சலுகைகள் நீக்கப்படுமா?

மண்டேலா: எந்த ஒரு தனி இனத்தைச் சார்ந்த எவரையும் குறிப்பிட்டு நான் தியாகம் செய்யுங்கள் என்று கேட்கப் போவதில்லை. நாட்டின் பொது மேம்பாட்டுக்காக பேதமற்ற வகையில் குடிமக்கள் அனைவரும் தியாகங்களைப் புரிய முன்வர வேண்டும். குறிப்பிட்ட அளவு வரியினை சகலரும் நாட்டுக்குத் தரவேண்டும். முதலீடுகளுக்கு முக்கியத்துவமும் ஊக்கமும் தருவதற்காக மிகவும் குறைந்த வரியினையே விதிக்க உத்தேசித்துள்ளோம். கடந்த காலத்தில் நாட்டின் பெரும்பான்மை மக்கள் அனுபவித்த கொடுமைகளுக்காக வெள்ளைக்காரர்கள் இன்று தாமாகவே வருந்துவதுடன் பிராயச்சித்தமும் செய்ய முன்வருகின்றனர். தாங்களாகவே முன் வந்து செய்யும் பணிகள் சட்டத்தால் நடைமுறைப்படுத்துவதைவிட நல்ல பலனளிக்கவல்லன.

கேள்வி: புதிய தென்னாபிரிக்கா, அமெரிக்கா தொடர்பாக எவ்வாறு நடந்து கொள்ளும்?

மண்டேலா: நான் சிறை மீண்டதும் முதன் முதலில் என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அமெரிக்காவுக்கு வரும்படி அழைப்புவிடுத்தவர் முன்னாள் ஜனாதிபதியான ஜோஜ் புஷ். அன்னாரை 3 தடவைகள் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. இனப் பாகுபாட்டை நீக்கி அமைதியான முறையில் சனநாயகத்தை நிலை நாட்ட அனுதாபத்துடன் செயற்பட்டவர் அவர். இதில் தற்போதைய ஜனாதிபதி பில் கிளின்ரனும் ஒத்தாசை புரிந்துள்ளார். ஜனநாயகத்தில் நாட்டம் கொண்ட நாடு அமெரிக்கா. எமது நாட்டிலும் அதே ஜனநாயகப் பண்பு மேலோங்க அமெரிக்காவின் உதவிகள் மென்மேலும் கிடைக்க வேண்டும். கிடைக்கும் என்ற நம்பிக்கை நிரம்ப உண்டு.

டி.கிளார்க் உபஜனாதிபதியாக முன்னாள் ஜனாதிபதி | நெல்சன் மண்டேலா அதிகாரத்தை வெள்ளையரோடு பகிரச் சம்மதம் | சிவேலித்தினி சூலு இனத்தலைவர் | புத்தலேசி உபஜனாதிபதி-அதிகாரத்தில் பங்கு



# விடாது தொடரும் கொலைவெறி வேட்டை! இரத்த ஆற்றில் மிதக்கும் பிணங்கள்!!



அதிகாரத்தை கையில் எடுக்க ஆயுதம் ஏந்தியுள்ள அரசாங்க விரோத குழுவின் உறுப்பினர்கள்

ருவாண்டா நாட்டில் இரு இனங்களுக்கிடையிலான ஆதிக்க மோதல்களினால் ஏற்படும் கோரக் கொலை வெறித் தாக்குதலைப் பற்றி எமது 49வது இதழ் 'உலக ரவுண்டப்'பில் சுட்டிக்காட்டியிருந்தோம். இந்தக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி இடப்படாமல் தொடர் கதையாகத் தொடர்வது பற்றி அன்றாடம் செய்திகள் வந்து குவிகின்றன.

ருவாண்டாவுக்கும் தான்ஸானியாவுக்குமிடையில் எல்லையாக ஓடுவது ககேரா நதி. இந்த நதி கடந்த இரு மாதங்களாக இரத்த ஆறாகவே ஓடுகிறது என்று வர்ணிக்கப்படுகிறது. இது வெறும் மிகைப்படுத்தப்பட்ட வர்ணனையல்ல என்பது வெளிப்படை. இந்த நதியில் பிரேதங்களும் பல்லாயிரக்கணக்கில் மிதந்து செல்கின்றன.

ருவாண்டாவிலிருந்து ககேரா நதியைக் கடந்து தான்ஸானியாவுக்குள் இதுவரை 250,000 அகதிகள் தஞ்சம் புகுந்துள்ளனர். இவர்கள் ஹூட்டு இனத்தைச் சேர்ந்தவர்கள். டட்சி ருவாண்டன் விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் அகதிகள் வெளியேற்றத்தைத் தடுப்பதற்காக எத்தனையோ தடைகளை விதித்தும் அகதிகள் வெளியேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. மழையோ வெய்யிலோ கொடுமையாக வாட்டியபோதும் இத்தனை அகதிகளுக்கும் உறைவிடம் கொடுக்கவோ அரை வயிற்றுக்கான உணவினை வழங்கவோ முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. இவர்களனைவரும் திறந்த வெளி முகாம்களிலேயே தவிக்கின்றனர். மே மாதம் ஆரம்பத்தில் இந்த அகதிகளுக்கான உதவிகளை ஆக 75 தொண்டர்களே வழங்கி வருகின்றனர். போதுமான கவனிப்பு இல்லாமையினால் அகதிகளில் குழந்தைகள், வகை தொகையின்றி இறந்து போகக்கூடிய அபாயம் சூழ்ந்துள்ளது.

ஹூட்டு இனத்தவர்களுக்கும் டட்சி இனத்தவர்களுக்குமிடையிலான முரண்பாடுகள் இன்று நேற்று ஏற்பட்டவையல்ல. மிகப் பழங் காலத்திலேயே இவர்களுக்கிடையில் ஆதிக்க வெறி இருந்து வந்தது. சில காலம் அமைதி நிலவியபோதும் கடந்த ஏப்ரல் மாதம் 6ம் திகதி ருவாண்டா ஜனாதிபதியான ஜுவேனால் ஹபியாரிமனாவும் அயல் நாடான புறுண்டியின் அதிபரும் பயணம் செய்த விமானம் சந்தேகத்துக்கிடமான முறையில் விபத்துக்குள்ளாகி, ஹூட்டு இனத்தைச் சேர்ந்தவர்களான இருவரும் இறந்ததைத் தொடர்ந்தே பயங்கரமான வன்முறைகள் வெடித்து உள்நாட்டுப் போராக உருவெடுத்துள்ளது. நாடு இரண்டுபட்டு படுகளமாகிவிட்டுள்ள நிலையில் அதன் தலைவர்களும் அதிகாரிகளும் பத்திரமாக வெளியேறி அயல் நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.



# கறுப்பு அதிகாரமும் வெள்ளையர் வன்முறையும்

தென்னாபிரிக்க வெள்ளையர்கள் பெரும்பாலானோர் கறுப்பு அதிகாரத்தின் நியாயத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். இதுவரை கால ஒடுக்கு முறைகளுக்கு வருந்துகின்றனர்.

எனினும், வெள்ளையர் தீவிரவாத குழுக்கள் கறுப்பு அதிகாரத்திற்கு சவால் விடுக்கின்றன. ஆயுதம் ஏந்திய வன்முறையை நாடியிருக்கின்றன. வெள்ளையர்களுக்கு 'தனிநாடு' என்ற கோஷமும் எழுப்பப்படுகிறது.

வெள்ளையர் தீவிரவாத குழுக்களை சுலபமாக அலட்சியம் செய்துவிட முடியாது. ஆண்களும், பெண்களுமாக ஆயுதம் தரித்துள்ளனர். புதிய அரசுக்கு அவர்கள் தலையிடியைக் கொடுக்கப் போகிறார்கள்.

உப ஜனாதிபதியாக முன்னாள் ஜனாதிபதி டி.கிளேர்க்கை நியமித்துள்ள மண்டேலா வெள்ளையர்களை எவ்வாறு திருப்தி செய்யப் போகிறார் என்பதைப் பொறுத்தே வெள்ளையர் தீவிரவாத குழுக்களது வன்முறையின் வளர்ச்சியும் தேய்வும் தங்கியிருக்கிறது.

# தமிழகப் பத்திரிகையாளரின் யாழ் பயண அனுபவம்

# கிளாலிக் கடல் பயணமும் சிவாஜி படப் பாடலும்

**சமீபத்தில் யாழ் சென்று திரும்பி தமிழகம் சென்றுள்ள 'சுபமங்களா' இதழ் ஆசிரியரும், இலக்கியவாதியுமான திரு. கோமல் சுவாமிநாதன் தனது பயண அனுபவங்கள் பற்றி தனது சஞ்சிகையில் எழுதியுள்ளதின் சுருக்கம் இது:-**

ஒரு பஸ்ஸில் அடைக்கப்பட்டோம். நடத்துனர் எங்கள் அனுமதிச்சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார். கிளாலி கடலுக்குச் செல்ல 5 மணி நேரம் ஆகுமாம். 60 மைல் என்றனர். ஒரு ஆளுக்கு 400 ரூபாய் டிக்கட் விலை. பஸ் மேடுபள்ளங்களில் சென்றது. குலுங்கிக் குலுங்கிச் சென்றது. வவுனியா காடுகளைத் தாண்டிச் சென்றது. இருட்ட ஆரம்பித்துவிட்டது. இடையில் இரண்டு இடத்தில் டயர் பஞ்சர். இரவு பத்தரைக்கு கிளாலி கடற் பகுதிக்கு வந்து சேர்ந்தது. அங்கு பல கொட்டகைகள் போடப்பட்டு இருந்தன. எங்கும் அரிக்கன் லைட் அல்லது பெட்ரோமாக்ஸ். ஒரு கொட்டகையின் முன்நின்று எங்கள் அனுமதி சீட்டுக்களைத் திரும்ப பெற்றுக் கொண்டோம்.

அங்கிருந்து படகுத்துறைக்கு மணற்பாங்கான சாலையில் டிராக்டரில் செல்ல வேண்டும். டிராக்டரில் ஏறி உட்கார்ந்தோம். ஒன்னரை மைல் போவதற்குள் இந்த மரண அவஸ்தையிலிருந்து எப்போது விடுபடப் போகிறோம் என்று ஆகிவிட்டது. ஆனால் தினம் தினம் மக்கள் இப்படித்தான் செல்கிறார்கள். டிராக்டர் ஒரு இடத்தில் நின்றது. பிறகு படகுகளை நோக்கி கொஞ்ச தூரம் நடை. ஏராளமான விசைப் படகுகள் நின்று கொண்டிருந்தன. 5 மைல் கிளாலி கடல் ஏரியைக் கடக்க வேண்டும். படகுக் கட்டணம் 200 ரூபாய். ஒரு படகில் 15 பேர் செல்லலாம்.

படகில் ஏறினோம்.... படகில் மட்டைத் தேங்காய்கள் ஏற்றப்பட்டிருந்தன.

வியாபாரத்திற்குப் போகிறது என்று நினைத்துக்கொண்டிருந்தேன். இல்லை, படகு கவிழ்ந்தால் கட்டப்பட்ட தேங்காயை மாட்டிக் கொண்டால், அது Life Boat ஆகி, நாம் கடலில் மிதக்கலாம்! 'ஆபத்தை எதிர்பார்க்கிறார்கள் இவர்கள்' என்பதை அறிந்து பயம் பிடித்துக் கொண்டது. பௌர்ணமி சென்ற இரண்டாம் நாள், வானில் நிலா பனிச்சிட கடல் ஒளிவெள்ளத்தில் அலையடித்தது. படகு சீறிப் பாய்கிறது. பல இடங்களில் மணல் தட்டுகிறது. மக்கள் இறங்கி படகைத் தள்ளித் தள்ளி ஆழ்கடலுக்குள் சென்றவுடன், அந்தஸ்து கிடைத்துவிட்ட அடிமை போல் படகு உற்சாகமாகச் செல்கிறது. கிளாலிக் கடல் அமைதியாக இருக்கிறது. கடலில் இந்தப் படகுப் பயணம் மேற்கொண்டவுடன் எனக்கு நினைவுக்கு வந்தது. 'சிந்து நதியின் மிசை நிலவினிலே' பாடல்தான். 'கை கொடுத்த தெய்வம்' என்ற படத்தில் சிவாஜி பாடும் இந்தப் பாட்டைப் படமாக்க கேரள வேம்ப நாட்டுக் காயலில் படகில் அலைந்து திரிந்தது நினைவுக்கு வந்தது. ஆனால் அது பகல். இது இரவுப் பயணம். மேலே ஹெலிகாப்டர் பறக்கிறதா என்று கவனிப்பதில் கண் உறக்கம் இல்லை. இந்த கிளாலிக் கடல் பயணத்தில் இராணுவத் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த அப்பாவி மக்கள் எத்தனையோ பேர். வேறொரு படகில் வந்து கத்தியால் வெட்டிக் கொல்லப் பட்டவர்கள் பல பேர். கிளாலி சொல்லும் சோக வரலாறு கணக்கிலடங்காது. அதிகாலை மூன்று மணி அளவில் எதிர்க்கரையை வந்தடைந்தோம். அது யாழ் மாவட்டம். அங்கிருந்து மீண்டும் ஒரு மைல் மணல் சாலையில் நடைப் பயணம். அங்கே யாழ்ப்பாணம் போக பஸ்கள் நின்று கொண்டிருந்தன. மக்கள் கூட்டம் குழுமியிருந்தது. ஆங்காங்கே இரண்டொரு அரிக்கன் லைட்டுகள். முண்டி அடித்துக்கொண்டு ஒரு வேனில் ஏறினோம். மீண்டும் குண்டும் குழியுமான சாலையில் பயணம். டிக்கட் 100 ரூபாய். காலை ஆறு மணிக்கு யாழ் பஸ் நிலையம் வந்து சேருகிறோம்.

சுபாஷ் ஹோட்டலை நடத்துபவர் சங்கரன். குருவாயூர்காரர். ஐம்பது வருஷமாக யாழ்ப்பாணத்திலிருக்கிறார். அவர் ஹோட்டலில் ஐம்பது அறைகள் உண்டு. இரண்டு அறைக்குதான் ஆட்கள் வருகிறார்கள். நாற்பது வேலையாட்கள் இருந்தனராம். இப்போது இரண்டு பேர்தான்.

இருபத்தைந்து மாடுகள் வைத்திருந்தாராம். ஐ.பி.கே.எப். காலத்தில் ஒரு முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அந்த மாடுகளை அவிழ்த்து விட்டாராம். திரும்பி வரும்போது ஒரு மாடும் இல்லை. அறையில் மின்சார விசிறி இல்லை. பனை ஓலை விசிறியைக் கொடுத்தார்.

மின்சாரம் இல்லாத அந்த ஊரில் மூன்று தினப்பத்திரிகைகள் வருகின்றன. ஈழ நாதம், ஈழநாடு, உதயன். ஜெனரேட்டரைப் பயன்படுத்தியும், டிரெடில் இயந்திரத்தைப் பயன்படுத்தியும் அச்சடிக்கப்படுகின்றன. அச்சடிக்க பேப்பர் கிடைப்பதில்லை. கையால் காகிதம் தயார் செய்யப்பட்டு அச்சடிக்கப்படுகின்றன. சில பத்திரிகைகள் மாணவர்களின் காபிநோட் தாளில்.

எரிக்கப்பட்ட யாழ் நூல் நிலையம், தகர்க்கப்பட்ட மருத்துவமனை. நொறுக்கப்பட்ட ஸ்டேடியம்.' கட்டடங்கள், மாதா கோவில்கள்.

யாழ்குடா நாடு பாழ்பட்டு நின்ற கோலத்தைப் பார்க்க முடிந்தது. இராணுவத்தின் குண்டு வீச்சுக்களுக்கு எதுவும் தப்பவில்லை. கட்டிடங்கள் கீழே விழுந்து சிதிலங்களாகச் சிதறிக் கிடக்கின்றன. ஆனால் மக்களின் மனங்கள் சிதறவில்லை.

"நீங்கள் இங்கிருந்து போவதற்குள்ளேயே ஷெல்லடியும், வெடிகுண்டு வீச்சும் பார்க்கலாம்" என்றார் சண்முகதாஸ், பார்த்தேன். அடுத்த நாள் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நான் பேசிக்கொண்டிருக்கும்போது மூன்று குண்டுகள் வெடித்ததைக் கேட்டேன். மக்கள் பதட்டமடையவில்லை, சிரித்தனர்.

"இது எங்களுடைய அன்றாட வாடிக்கை. ஏதாவது கட்டிடங்கள் தாக்கப்பட்டிருக்கலாம். இரண்டொரு உயிர்கள் கூடச் சேதமாயிருக்கலாம்" என்கின்றனர். வெளியே குண்டு சத்தம், உள்ளே 'தமிழனுக்கான இசை எது' என்பது பற்றி ஆய்வு! இந்த முரண் அணியை யாழ்ப்பாணம் முழுவதிலுமே பார்க்கலாம். ஒடுக்கு முறையை எதிர்த்து ஆயுதமேந்தி போர்க்களங்களில் உயிர் நீத்த ஆயிரம் ஆயிரம் மாவீரர்களின் நினைவுச் சின்னங்களைப் பார்க்கிறோம். ஒவ்வொரு வீரனின் பிறந்த தேதி, மாவீரனான தேதி, அவன் ஊர், அவன் மரித்த போர்க்களம் எல்லாமே எழுதி வைக்கப்பட்டுள்ளன. பதினைந்து வயதிலிருந்து இருபது வயதுக்குட்பட்டவர்கள்தான் எத்துணைபேர்!

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# மர்மங்கள் நிறைந்த தலைநகர அரசியல்!

அலசுவது – இராஜதந்திரி

புத்தபகவானின் பிறப்பு, ஞானோதயம், மறைவு என்பனவற்றை ஒருங்கே குறிப்பதாகவே 'வெசாக் பௌர்ணமி' விளங்குகின்றது.

இலங்கையில் புத்தமதம் நன்கு வேரூன்றியிருக்கின்றது. பல நூற்றாண்டுகால விகாரைகள், மற்றும் புத்தசமயச் சின்னங்கள் என்பன இலங்கையில் பல்வேறு இடங்களிலும் காணப்படுகின்றன.

மானிடரிடையே பாகுபாடுகள் இருக்கக்கூடாது; ஏழை-எளியவர்கள், நோய்-நொடியினால் துன்பப்படுபவர்கள் மீது அன்பு கொள்ள வேண்டும் என்று புத்தரின் போதனைகள் தெரிவிக்கின்றன.

ஆனால் இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான்மையானவர்களாக இருப்பதுடன் பௌத்தமதத் துறவிகளும் ஆயிரக்கணக்காக இருக்கின்றபோதிலும், புத்தரின்

நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான முஸ்தீபுகளே முனைப்படைந்திருக்கின்றன.

கடந்த மாதம் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் மொஹான் சமரசேகரா ஆயுதக் கொள்வனவு குறித்த பேரப்பேச்சுக்களை நடத்த சீனா சென்றிருந்தார்.

அங்கே புதிய யுத்தக் கப்பல்களை வாங்குவதற்கான ஏற்பாடுகளையும் செய்த பின்னர் அவர் நாடு திரும்பியிருந்தார்.

கையாட்களை வைத்திருப்பதுடன், இக் கையாட்களுக்கு நவீன ஆயுதங்களையும், வாகன வசதிகளையும் வழங்கியுள்ளனர்.

ஆட்சியதிகாரங்களில் இருப்போரின்

கோணங்களிலிருந்தும் ஆட்சியாளர்கள்மீது கண்டனக் கணைகள் பிரயோகிக்கப் பட்டிருந்தன.

டென்ஸில் கொப்பேகடுவவின் மரணம்

இலங்கையில் தேவநம்பியதீசனின் ஆட்சியின்போது புத்த மதம் அறிமுகமாகியிருந்தது. இந்தியாவின் அசோகச் சக்கரவர்த்தியின் பிள்ளைகளான மஹிந்தனும், சங்கமித்தையுமே புத்த மதத்தை இலங்கையில் வேரூன்றச் செய்தனர்.

இவர்கள் புத்தபகவான் ஞானோதயம் பெற்ற வெள்ளரச விருட்சத்தின் கிளையொன்றையும் இலங்கையில் அநுராதபுரத்தில் நாட்டியிருந்தனர்.

புத்தபகவான் அவதரித்த நாடான இந்தியாவைவிட இலங்கையிலேயே புத்தமதத்தின் செல்வாக்கு செறிந்திருக்கக் காணப்படுகின்றது.

புத்தபகவானின் போதனைகளை, புத்த சமய துறவிகள் காலத்துக்குக்காலம் விரிவான முறையில் போதித்து அம்மதத்தின் விழுமியங்களைப் பாதுகாத்திருந்தனர்.

ஆனால் இந்தியாவின் அசோகச் சக்கரவர்த்தி புத்தமதத்தைத் தழுவி, அதன் மகத்துவங்களை உலகறியச் செய்தவிதமே குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது.

யுத்தங்களை மேற்கொண்டு தனது சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்தி வந்த அசோகச் சக்கரவர்த்தி, ஒருதடவை கலிங்க தேசத்தில் இடம்பெற்ற யுத்தமொன்றில் பெருமளவு அழிவைக் கண்டிருந்தார்.

இந்த யுத்த அழிவுகள் மனத்தில் ஏற்படுத்திய தாக்கத்தையடுத்தே அசோகச் சக்கரவர்த்தி பௌத்த சந்நியாசி ஒருவர் மூலமாக, பௌத்த மதத்தைத் தழுவினார். தொடர்ந்து அம்மதத்தின் போதனைகளையும் விரிவானமுறையில் நிலைபெறச் செய்வதில் அசோக சக்கரவர்த்தி தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

'அசோக ஸ்தூபிகளை' நிறுவி அந்த


போதனைகளின் பிரதி பலிப்பை எந்தவொரு விடயத்திலும் முழுமை யாகக் காணமுடியா திருக்கின்றது.

நாட்டின் அரசியல் முதற் கொண்டு, அனைத்து விடயங்களிலும் புத்த சந்நியாசிகளின் தலை யீடுகள் பெரும் இடையூறுகளாக இருக் கின்றன.

கூடவே காவி உடை தரித்த புத்த சந்நியாசி (சோமராம) ஒருவரினாலேயே இலங்கையின் முன்னாள் பிரதமரான திரு.எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாரநாயக்கா சுட்டுக் கொல்லப்பட் டிருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர இலங் கையில் இன, மத ரீதியிலான தீவிரவாத அரசியலிலும் புத்த சந்நியாசிகள் பெரும் பங்கு கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் அரசியல் மற்றும் வேறு சர்ச்சைகள் குறித்த ஆர்ப்பாட்டங்



'ஆசிர்வாதத்துடனேயே' இந்த கையாட்கள் இயங்குவதையும் இவர்களது நடவடிக்கைகள் இன்று நாட்டின் பாதுகாப்புக்கு ஒரு பெரும் அச்சுறுத்தலாக இருப்பதையுமே கடந்த வாரங்களில் கொழும்பில் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த 'சொத்தி உபாலி' விவகாரம் விளங்கியிருந்தது.

பொலிஸார், இந்த 'சொத்தி உபாலி' என்ற சந்தேக நபர் பல்வேறுபட்ட குற்றச் செயல்களுடனும் சம்பந்தப்பட்ட ஒருவர் என்று தெரிவித்துள்ளனர்.

ஆனால், அமைச்சரும் முன்னாள் ஐக்கியதேசியக் கட்சிச் செயலாளருமான திரு.சிறிசேன கூரே, இந்த 'சொத்தி உபாலி' என்ற நபரை தமது ஒரு விசுவாசி என்று பகிரங்கமாகக் குறிப்பிட்டிருந்தார்.

ஐக்கியதேசியக் கட்சியின் நடவடிக்கைகளில் 'சொத்தி உபாலி' பெரிதும் ஒத்துழைத்திருந்தார் என்று அமைச்சர் கூரே தெரிவித்திருந்தார். கூடவே மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் 'சொத்தி உபாலி' மீது நல்லபிமானம் கொண்டிருந்தார் என்று திரு.கூரே கூறியிருந்தார்.

அவர் மேலும் 'சொத்தி உபாலி' ஐக்கியதேசியக் கட்சியின் உயர்மட்ட அங்கத்தவர்களில் ஒருவராக இருந்தார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

எனவே பொலிசார் தலைநகரில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாகக் கைது செய்துள்ள 'சொத்தி உபாலி' என்பவர் குறித்து ஆளுங்கட்சி அமைச்சரான திரு.சிறிசேன கூரே 'பச்சாதாபம்' காட்டியிருப்பது ஆச்சரியத்தையளிப்பதாகவே இருக்கின்றது.

நாட்டில் கடந்த பல வருடங்களில் வன்முறைகள் பெருகியிருக்கக் காணப்

ஒரு சதி நாசகாரவேலை என்ற தோரணையில் அன்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவராக இருந்த லலித் அத்துலத் முதலி, மற்றும் அக்கட்சியிலிருந்த காமினி திசாநாயக்கா ஆகியோர் ஆட்சியாளர்கள்மீது பழி சுமத்தியிருந்தனர்.

கூடவே டென்ஸில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக வெளிநாட்டுப் புலனாய்வாளர் ஒருவரின் உதவியையும் அன்று லலித், காமினி ஆகியோர் நாடியிருந்தனர்.

இறுதியாக டென்ஸில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக ஒரு சர்வதேச ஆணைக் குழுவும் நியமிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த சர்வதேச ஆணைக்குழு தனது முடிவை வெளியிடு முன்னரே டென்ஸில் கொப்பேகடுவ குறித்த சர்ச்சையை ஆரம்பித்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித் அத்துலத் முதலி கொலையுண்டிருந்தார்.

லலித்தின் மரணத்தையடுத்துச் சில தினங்களில் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவும் குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்டிருந்தார்.

இராணுவத்தின் வட பிராந்தியத் தளபதியாக இருந்த டென்ஸில் கொப்பேகடுவ யுத்த வலயத்தில் கொல்லப் பட்ட போதிலும் அவரது மரணம் குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டு, சர்வதேச ஆணைக்குழுவொன்றும் அம் மரணம் தொடர்பாக நியமிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த ரணசிங்க பிரேமதாச, மற்றும் முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சராகவும், பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவராகவுமிருந்த லலித் அத்துலத் முதலி ஆகியோரின் மரணங்கள்



“ கொப்பேகடுவ மரண விசாரணையில் காட்டப்பட்ட கரிசனை லலித், பிரேமா மரணங்களில் இல்லை. ”

கள் இடம்பெறும்போது காவி உடைதரித்த புத்த சந்நியாசிமாரும் அவற்றில் குதித்திருப்பதைக் காணமுடியும்.

இலங்கையில் திரை மறைவில் அரசியலிலும், வேறு 'பஞ்சமாபாதகங்களிலும்' குதித்திருக்கும் புத்த மதத்துறவிகள் குறித்து கடுமையான விமர்சனங்களுடன் கட்டுரைகள் பலவும் வெளியாகியுள்ளன.

புத்தபகவான் தமது சீடர்கள், மற்றும் தம்மைப் பின்பற்றும் சந்நியாசிகள் ஆகியோர்

கடற்படைத் தளபதியின் சீன விஜயத்தை யடுத்து இராணுவத்தலைமை அதிகாரியான மேஜர் ஜெனரல் லக்கி அல்கம கடந்த வாரம் சீனா சென்றிருந்தார். இவரும் புதிய ஆயுதக் கொள்வனவுக்கு ஏற்பாடுகளைச் செய்த பின்னர் நாடு திரும்பியிருந்தார்.

இது தவிர படைகளில் ஆட்சேர்ப்பு மற்றும், படையணிகளின் விஸ்தரிப்பு தொடர்பாகவும், ஆட்சியாளர்கள் படை அதிகாரிகளுக்கு 'பச்சைக் கொடி'

படுகின்றன.

வடக்கு-கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆனால் தென்னிலங்கையில் தனிநபர் கொலைகள், கொள்ளைகள், ஆட்கடத்தல்கள், மற்றும் மிரட்டல்கள் என்பன தினமும் தொடர்ந்தவண்ணமிருக்கின்றன.

ஒருசில வருடங்களுக்கு முன்னர் கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும் இடம்பெற்ற வன்முறைகளுக்கு ஜே.வி.பி.



## 'எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ தெரியவில்லை' என்ற நிலையில் இலங்கை அரசியல்!

“ மறைந்த ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் நல்லபிமானம் பெற்ற 'சொத்தி உபாலி' ”

ஸ்தூபிகளில் புத்தரின் கொல்லாமை, மற்றும் உரிய வாழ்க்கை நெறிகளைப் போதிக்கும் வாசகங்களை அசோகச்சக்கரவர்த்தி இடம் பெறச் செய்திருந்தார்.

அசோக ஸ்தூபியில் இடம்பெறும் வாசகங்கள் காலத்தால் அழியாத உன்னத வாழ்க்கை நெறிகளை மானிடர்களில் அனைத்துத் தரப்பினரும் கைக்கொள்ள வேண்டியவைகளாக இருக்கக் காணப் படுகின்றன.

மக்கள் நலன் கருதிய- யுத்தங்களற்ற அரசாட்சியை வலியுறுத்துவதுடன், மானிடர்களிடையே எதுவித பாகுபாடுமற்ற வாழ்க்கை முறையைப் போதிப்பதாகவே புத்தரின் போதனைகளைத் தாங்கிய அசோக ஸ்தூபிகள் காணப்படுகின்றன.

இலங்கையில் இன்று புத்தமதம் வேரூன்றி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகியுள்ளன. ஆனால் இம் மதத்தின் போதனைகள் எவ்வளவுதூரம் இலங்கையில் நடைமுறைச் சாத்தியமானதாக இருக்கின்ற தென்பது கேள்விக்குரியதாகவே இருக்கின்றது.

புத்தபகவான் கொல்லாமையை வலியுறுத்தினார். சகல உயிரினங்களின் மீதும் கருணை காட்டப்படவேண்டும்;

தம்மைப் போன்றே உயர்ந்த மனப் பக்குவத்தை அடையும் வழிமுறைகளைப் போதித்திருந்தார்.

ஆனால் இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் புத்த சந்நியாசிகளாக இருக்கின்றனர். ஆனால் 'இவர்களில் எவருமே புத்தரின் போதனைகள் வழி நின்று உயர்ந்த ஞானநிலையை அடையவில்லை' என்று கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் இன்று வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் யுத்தக் கெடுபிடிகளினால் சூழப்பட்டிருக்கின்றன. தினமும் பலர் இந்த யுத்தத்தினால் மரணத்தைத் தழுவுகின்றனர். மேலும் பலர் பல்வேறு பாதிப்புகளுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

யுத்தப் பிரதேசங்களில் நோய்கள், பசி-பட்டினி என்பன மிகவும் பாரதூரமான சூழ்நிலையை ஏற்படுத்திவிட்டுள்ளன.

ஆனால் இலங்கையை ஒரு பௌத்தமத நாடென்று குறிப்பிட்டு வரும் ஆட்சியாளர்கள் போர்க்கொடுமைகளை நீக்கி, யுத்தப் பிரதேசங்களில் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்களைப் போக்குவதில் எதுவித காத்திரமான பங்களிப்புகளையும் மேற் கொண்டிராதவர்களாகவே இருக்கின்றனர்.

இலங்கையில் யுத்தத்தைத் தணிப்பதற்கான முயற்சிகளைவிட புதிய யுத்த

காட்டியுள்ளனர்.

இதேவேளை, இலங்கையின் சட்ட பூர்வமான பாதுகாப்புப் படைகள் தவிர ஆட்சியதிகாரங்களில் இருப்போர் தத்தமக்கென பிரத்தியேகமாகவும்



“ லலித்தின் மரணத்தின் போது 'ஒப்பாரி' வைத்தோர் இன்று கட்சி மாறிய நிலை. ”

தீவிரவாதிகளே பொறுப்பாளிகள் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் ஜே.வி.பி. தீவிரவாதம் தென்னிலங்கையில் முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ள நிலையில், கொழும்பில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகள், மற்றும் அரசியல் தலைவர்களின் கொலைகள் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளையே அரச தரப்பினர் சாடியிருந்தனர்.

இருந்தபோதிலும் தற்போது 'பாதாள உலக ஜாம்பவான்' என்று வர்ணிக்கப்பட்டுள்ள 'சொத்தி உபாலி' குறித்து வெளிவரும் தகவல்களை அவதானிக்கும்போது தலைநகரில் இதுவரைகாலமும் இடம் பெற்ற அரசியல் கொலைகள், மற்றும் வன்முறைகளில் கொழும்பின் 'பாதாள உலக'த்தினருக்கும் தொடர்பிருந்திருக்கலாம் என்றே கருதவேண்டியுள்ளது.

இரு வருடங்களுக்கு முன்னர் வடக்கே தீவுப் பகுதியில் தரைக் கண்ணிவெடித் தாக்குதலுக்குள்ளாகி வட பிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவும், அவரது சக உயரதிகாரிகள் ஒன்பது பேரும் கொல்லப்பட்டிருந்தனர்.

மேஜர் ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவவின் மரணம் தொடர்பாக பல்வேறு

குறித்து இதுவரை பரிபூரண விசாரணைகள் எதுவும் இடம்பெற்றிராத நிலை காணப்படுகின்றது.

இம் மரணங்கள் தொடர்பாக பூர்வாங்க விசாரணைகள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்ட நிலை காணப்படுகின்றது.

தலைநகரில் இன்று இடம்பெறும் மாற்றங்களை அவதானிக்கும்போது அனைத்து அரசியல் நடவடிக்கைளும் மர்மம் நிறைந்தவையாகவே காணப்படுகின்றன.

ஆளுங்கட்சியில் மறைந்த ஜனாதிபதி ஆர்.பிரேமதாசாவுக்கு விசுவாசமாக இருந்தவர்கள் ஓரங்கட்டப்பட்டுள்ளனர்.

மறுபுறத்தே ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் லலித் அத்துலத் முதலியுடன் ஒன்றாக இருந்து, அவரது மறைவையடுத்து 'மார்பிலடித்து ஒப்பாரி வைத்தவர்கள்' லலித்தினால் சாடப்பட்டிருந்த ஆளுங் கட்சியில் இன்று சேர்ந்திருக்கக் காணப்படுகின்றனர்.

எனவே, 'எந்தப் புற்றில், எந்தப் பாம்பு இருக்கிறதோ தெரியவில்லை' என்ற நிலையிலேயே இலங்கையின் அரசியல் தற்போது காணப்படுகின்றது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# வெளிநாடுகளில் பரவிவரும் மோகம்!

# பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையும் பெண்களும்!

லேடீஸ் ஸ்பெசல்



உதடுகளை அழகுபடுத்தும் சிகிச்சை நடக்கும் போது

இலண்டனைச் சேர்ந்த அய்லீன் மக்னமாரா என்ற 34 வயது மங்கை தன்னை அலங்காரம் செய்து கொள்ளவேண்டும் என்று தோன்றினால் அழகலங்கார நிலையங்களுக்குப் போவதில்லை. பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை நிலையங்களைத்தான் நாடுவார்.

கடந்த 10 ஆண்டுகளில் அய்லீன் ஏழு தடவைகள் பிளாஸ்ரிக் சிகிச்சைகளை மேற்கொண்டார். இதற்காக அவர் 20,000 டொலர் வரை செலவு செய்துள்ளார். இவருடைய 24வது வயதில்தான், இவருடைய கண்களுக்குக் கீழ் தொங்கிய வண்ணம் அழகைக் கெடுத்த சதையினை அகற்ற பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சை முதன் முதலில் மேற்கொண்டார். அன்றிலிருந்து இந்த சிகிச்சையில் அய்லீனுக்கு ஓர் அலாதிப் பிரியம் ஏற்பட்டுவிட்டது என்றே சொல்லலாம்.

"நான் இள மங்கையாக உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் காலத்தில் என்னைப் பார்ப்பவர்கள் 'ஏன் இரவில் தூக்கமில்லையா?' என்று கேட்பார்கள். அந்த அளவுக்கு என் கண்களுக்கு அடிப்புறத்தில் சதை தொங்கிக் கொண்டிருக்கும். இதனால் நான் மிகவும் வேதனை அடைந்தேன். இந்த சிகிச்சைக்கு 1,500 டொலர் செலவானது. எனது முகத்தில், இந்த சிகிச்சைக்குப் பின் ஏற்பட்ட மாற்றம் வியப்பை அளித்தது.

"அப்போதெல்லாம் என்னைப் பார்த்தவர்கள் 'எங்காவது விடுமுறையைக் கழித்து விட்டு வருகிறாயா? மிகவும் பூரிப்புடன் காணப்படுகிறாயே' என்று கேட்க ஆரம்பித்து விட்டனர்" இவ்வாறு அய்லீன் கூறுகிறார்.

முதல் சிகிச்சையில் ஏற்பட்ட வெற்றி அய்லீனை தொடர்ந்து பல பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சைக்குத் தூண்டியது. இவருடைய தொடைகள் மிகவும் பெருத்துக் காணப்பட்டமையினால் இரண்டாவது பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சையை மேற்கொண்டார். தொடர்ந்து அடி வயிற்றில் காணப்பட்ட வேண்டாத சதை நீக்கப்பட்டது. அடுத்த சிகிச்சை அவருடைய மார்பகங்களைப் பெரிதாக்குவதற்கு நடத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தனது உடலில் எந்த உறுப்பு அலங்கோலமாக இருக்கிறதோ அங்கெல்லாம் சத்திரசிகிச்சையினை மேற்கொண்டார்.

"நான் இன்று-34வது வயதிலிருக்கும் போது 24 வயதில் நான் இருந்ததைவிட மிகவும் அழகாக இருக்கிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார் அய்லீன்.

உடலை அழகாக வைத்திருப்பதற்கு உணவுக் கட்டுப்பாடும் தேகப் பயிற்சியும் உதவும்போது இந்த வகையில் உடலை அறுத்துச் செய்யும் சிகிச்சையினை ஏன் நாடவேண்டும் என்று கேட்டபோது "இந்த முறையிலான சிகிச்சைக்கு பணம் அதிகச் செலவான போதும், வேதனை தரும் போதும் - இம்முறையே எனக்குப் பூரண திருப்தியைத் தருகிறது" என்று கூறுகிறார்.



உள்ளே இருப்பது சிகிச்சைக்குமுன், மற்றையது பின்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### உருளைக்கிழங்கு மசாலாக்கறி

**தேவையானவை:**

உருளைக்கிழங்கு- 1/2 கிலோ
தக்காளிப்பழம் -1/4 கிலோ
பம்.வெங்காயம்- 2
தேங்காய்த்துருவல் -1/2 கோப்பை
கொத்தமல்லி- 1 மேசைக்கரண்டி
சீரகம்- 1/2 தேக்கரண்டி
மிளகாய் வற்றல்- 6 அல்லது 8
கருவாப்பட்டை- சிறியதுண்டு
ஏலக்காய்- 4
கச்சான்- 1 மேசைக்கரண்டி
பொட்டுக்கடலை- 1 மேசைக்கரண்டி
மஞ்சள் பொடி- 1/2 தேக்கரண்டி
பூண்டு- 4 பல்
நெய்- 2 மேசைக்கரண்டி
இஞ்சி - பெரியதுண்டு
உப்பு - தேவையான அளவு.

**செய்முறை:**

- உருளைக்கிழங்கின் தோலைச் சீவி துண்டுகளாக நறுக்கிக்கொள்ளவும்.
- தக்காளிப்பழத்தைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
- வெங்காயம், தேங்காய்த் துருவல், மிளகாய் வற்றல், கொத்தமல்லி, சீரகம் முதலியவற்றைத் தனித்தனியாக வறுத்துக்கொள்ளவும்.
- இஞ்சி, பூண்டு இரண்டையும் தனியாக அரைத்துக்கொள்ளவும்.
- எண்ணெயில் வறுத்த பொட்டுக்கடலை, கச்சான், கறுவாப்பட்டை, ஏலக்காய் எல்லாவற்றையும் அரைத்துக் கொள்ளவும்.
- மசாலாவை ஒரு கோப்பை தண்ணீரில் கரைத்து வைத்துக்கொள்ளவும்.
- நறுக்கிய உருளைக்கிழங்குத் துண்டுகளை 1 கோப்பை தண்ணீரில் கொதிக்க விடவும். மஞ்சள் பொடி, இஞ்சி, பூண்டு முழுவதையும் போடவும்.
- கிழங்கு பாதி வெந்தவுடன் உப்பும், அரைத்த விழுதும் போட்டு 5 நிமிடம் வரைக்கும் கொதிக்க விடவும்.
- தக்காளிப் பழத்தைப் போட்டு அடுப்பிலிருந்து இறக்கவும்.

## உதட்டுச் சாயத்தை உபயோகிப்பது எப்படி?



லிப்ஸ்டிக் என்றவுடன் சிவப்பு சாயத்தை உதடுகளில் தடவுவது மட்டுமே எனப் பெரும்பாலானோர் நினைக்கின்றனர். ஆனால் லிப்ஸ்டிக் உபயோகிப்பதில் ஒரு கலையே இருக்கிறது.

முதலில் சகட்டு மேனிக்கு உதட்டில் பூசுவதை விட்டு விட்டு அழகாக வெளிக்கோடு போட வேண்டும்.

அதன் பிறகு அந்தக் கோடுகளுக்குள் உதட்டுக்குத் தேவையான வண்ணத்தைப் பூச வேண்டும். இறுதியில் உதட்டின் இடது பக்கத்திற்குச் சற்று மேல் அதே கலரில் ஒரு சிறு புள்ளி வைக்க. அடடா! அழகோ அழகு.

சற்று கறுப்பு நிறமுடைய பெண்கள் சிவப்பு நிற உதட்டுச் சாயத்தையும், சிவப்பு நிறப் பெண்கள் ஊதா கலந்த சிவப்பு நிற உதட்டுச் சாயத்தையும் உபயோகிப்பது மென்மேலும் அழகு சேர்க்கும்.

## எண்ணியதுண்டா நீங்கள்?



தலையில் இருக்கும் முடிகளை எண்ணிவிட முடியுமா? எண்ணி இருக்கிறார்களே! சராசரியாக ஒரு மனிதனின் தலையில் 80 ஆயிரத்தில் இருந்து ஒரு இலட்சத்து இருபதினாயிரம் முடிகள் வரை இருக்கிறது.

நாம் இந்த முடிகளைத் தக்க வைத்துக் கொள்ளலாமே தவிர அதன் எண்ணிக்கையை உயர்த்திவிட முடியாது.

## நீங்களும் தைக்கலாம்

சுதா-சந்திரா


### பெண் குழந்தைகளுக்கான சட்டை

**சட்டையின் மேற்பகுதி (பின்பகுதி)**


**சட்டையின் நீளம்- 7''**
**சட்டையின் அகலம்- 6 1/2''**
**கழுத்தின் அகலம்- 1 1/2''**
**பின் கழுத்தின் நீளம்- 1''**
**முன் கழுத்தின் இறக்கம்- 2 1/2''**


இரண்டாக மடிக்கப்பட்ட 7'' நீளமும் 9'' (6 1/2''+1 1/2'') அகலமுமான துணியை எடுத்துக்கொள்ளவும். Aயிலிருந்து 1 1/2''Fவரையும் பின் கழுத்துக்கு Aயிலிருந்து 1''Eவரையும் குறித்துக் கொள்ளவும். Fஇலிருந்து 2 1/2''Gவரை தோள் நீளத்திற்கென குறிக்கவும். Gஇலிருந்து 1/2'' பதிவாக Jவரையும் குறித்துக்கொள்க. Cயிலிருந்து 3'' அங்குலம் பதிவாக Hஎன குறித்துக் கொள்ளவும். குறித்துள்ள J H பகுதியை இணைத்து வளைவாக வரையவும். Dயிலிருந்து 1'' உள்நோக்கி I என குறித்துக் கொண்டதும் H I பகுதியை மென் சரிவாக வெட்டவும். Eயிலிருந்து Kவரை 1/2'' மேலதிகமாக பின் பூட்டிற்காக விட்டுக் கொள்ளவும்.

இதேபோல் 7'' நீளமும் 6 1/2'' அகலமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்து முன்புற பகுதிக்கு ஆயத்தமாகுவோம். (இதற்கு மேலதிக 1 1/2'' தேவையில்லை) முன் கழுத்து Eயிலிருந்து கீழ்நோக்கி 2'' பதிவாகவும் Lஎனக் காட்டுக. FL வெட்டிக்கொள்ளவும். பின் பகுதிக்கென எடுத்த பகுதியைப் போன்று மற்றும் பகுதியை வெட்டலாம். கழுத்துமட்டுமே பதித்து வெட்ட வேண்டும். வேறுமாற்றமில்லை.



### கீழ் பாவாடை





(பிள்ளையின் இடுப்பை அளவு நாடாவினால் அளந்து 1/4'' பகுதியை குறித்து வெட்ட வேண்டும். (உ-ம்- 24'' ஆயின் 6'' எடுத்தல்)

15'' நீளமும் 30'' அகலமுமான துணியை எடுத்து இரண்டாக மடித்துக்கொள்வும். இப்போ 15'' அகலமும் நீளமுமான சதுர வடிவில் இருக்கும். இதனை மூலையாய் சேரும் வண்ணம் மடிக்கவும். பின்னர் மேல் நுனியிலிருந்து 6'' பதிவாக (நுனியிலிருந்து துணியின் அனைத்து இடங்களில்) குறித்து வெட்டவும். அதேபோல் நுனியிலிருந்து 15'' பதிவாக குறித்து வெட்டவும். இப்போ உங்களுக்கு குடை வெட்டு வடிவில் பாவாடை வந்துள்ளது.

வெட்டப்பட்ட மேல் பகுதியுடன் கீழ் பாவாடையும் இணைத்துக்கொள்ளவும்-பின்னர்,

படத்தில் காட்டியவாறு 4'' நீளம் 5'' அகலமுமான துணியை எடுத்துக்கொள்ளவும். Aயிலிருந்து 1 1/2'' பதிவாக Eவரையும் Cயிலிருந்து 1/2'' உள்நோக்கி Fவரை குறித்து வெட்டவும். மேற்பகுதியை இணைக்கும்போது சிறு சிறு சுருக்கிட்டும் கீழ் பகுதிக்கு 1/2'' மடிப்பிட்டும் சிறு இலாஸ்ரிக்கு இட்டும் அழகுக்கு ஏற்ற மாதிரி அமைத்துக் கொள்ளவும்.

பரிசுத் திட்ட கூப்பன் இல-14

தினமுரசு-அருள் ஜூவல்லர்ஸ்
இணைந்து வழங்கும்
தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.

ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## பெண் பொலிஸ்படை தயார்!

## கிண்டல் செய்வோர் ஜாக்கிரதை!!


இந்தியாவின் தலைநகரான புது டில்லியில் புதிதாக சிறப்பு பெண் பொலிஸ் படை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இதற்கென ஆட்சேர்ப்புப் பணி துரிதமாக மேற்கொள்ளப்பட்டு பயிற்சிகளும் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

பெண்களை கிண்டல் செய்வது, பெண்கள் பள்ளிக்கூடங்களுக்கு அருகில் நின்று மாணவிகளை விமர்சிப்பது, பொதுப் போக்குவரத்துச் சாதனங்களான பஸ், மற்றும் ரயில்களில் பெண்களுக்கு இம்சை கொடுப்பது போன்ற செயல்களில் ஈடுபடும் ஆண் இளவட்டங்களின் கொட்டத்தை அடக்குவதே இந்த சிறப்பு பொலிஸ் படையின் பிரதான கடமையாகும். அத்துடன் கணவர்களால் துன்புறுத்தப்படும் பெண்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கவும் இந்தப் பெண் பொலிசார் தலையிடுவார்கள்.

இத்தகைய சிறிய குற்றச் செயல்கள் புது டில்லியில் அதிகரித்து வருவதே சிறப்புப் பொலிஸ் படை ஒன்றினை நிறுவுவதற்குக் காரணம் என்று டில்லியில் லெஃப்டினன்ற் கவர்ணர் பி.கே.தேவ் கூறினார்.



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



கன்றுக்கு
நாலு கண்கள்
கண்டவர்களுக்கு
ஆச்சரியக் கண்கள்

# அதிசயமான கன்று!

## தலை இரண்டு—
## கண் நான்கு!!

அவுஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் என்னும் இடத்தில் உள்ள பண்ணையில் ஒரு மாட்டுக்கன்று பிறந்தது.

பண்ணையில் உள்ளவர்கள் அதனை ஆச்சரியத்தோடு பார்த்தனர்.

அந்த மாட்டுக்கன்று அவர்களையெல்லாம் நாலு கண்களால் பார்த்தது.

அது ஒரு அதிசய பிறவி. தலை இரண்டு. கண் நான்கு.

நீண்டகாலம் வாழ முடியவில்லை. இரு தலைகளோடு அது பட்ட அவஸ்தையைத் தாங்க முடியாமல் மிருக வைத்தியர் ஊசி மருந்தை செலுத்தி கன்றைக்கொலை செய்துவிட்டார்.

ஆனால் பண்ணை உரிமையாளருக்கு அந்த அதிசயப் பிறவிமீது பிடிப்பு ஏற்பட்டுவிட்டது. அதனால் அதன் உடலை கெட்டுப்போகாமல் பாடம் பண்ணி தன் வீட்டின் முன் மண்டபத்தில் வைத்திருக்கிறார். உயிருடன் இருப்பதுபோல காட்சி தருகிறது.

# தகவல் பெட்டி

## கொம்போடு வாழும்
# கொக்கரக்கோ!

கொம்போடு பிறந்த மனிதன் பற்றிய தகவல் ஏற்கனவே முரசில் வெளியாகியிருந்தது.

இப்போது கொம்போடு பிறந்த கொக்கரக்கோ சேவலை அறிமுகப்படுத்துகிறோம்.

அமெரிக்காவில் உள்ள உணவு விடுதியான 'வைற் ஓவ்ல் கஃபே'யில் இந்த மதிப்புக்கும் வியப்புக்குரிய சேவலார் காணப்பட்டார்.

உணவு விடுதிக்கு வரும் வாடிக்கையாளர்களுக்கு உற்ற நண்பனாகிவிட்டாராம். ஹோட்டல் உரிமையாளர் பெயர் ரீ.பாக்கர். கொண்டைச்சேவல் சண்டைக்கு தயங்காது. இந்த கொம்புச் சேவலும் வலிய வம்புக்கு போனால் விட்டு வைக்காது. என்கிறார் பெருமையோடு உரிமையாளர்.



## உண்ணாமல் வாழும்
# மெய்ஞான மனிதர்!



10 நாட்கள் சாப்பிடாமல் இருந்தாலே உடல் வாடிவிடும். உயிர் போகவோ விடவோ என்று கேட்டுக்கொண்டிருக்கும்.

ஆனால் தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள லட்சுமிபுரம் என்ற ஊரில் ஒரு சாமியார் இருக்கிறார்.

அவர் வயிறு உணவு கண்டே 11 மாதம் ஆகிறது. இடைக்கிடையே கொதிக்க வைத்த சீரக நீர் குடிப்பதுண்டு.

படுக்கையாகக் கிடக்கும் அவரை பார்வையிட தினந்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரளுகின்றனர்.

சாமியார் கண்மூடிப் படுத்திருப்பார். அவர் கண் திறந்து கொள்ளும்வரை பக்தர்கள் காத்திருக்க வேண்டியதுதான். சில சமயங்களில் இரண்டு மூன்று நாட்களுக்கு கண்ணே திறக்காது. பக்தர்கள் பாடு வேதனைதான்.

பார்வை பட்டால் நல்லது நடக்கும் என்பது பக்தர்களது நம்பிக்கை.

வெளிநாட்டவர்களும் சாமியாரை பார்வையிட வருகிறார்கள்.

சாப்பிடாமல் கிடப்பதால் வாத நோய் தாக்கியிருக்கிறது. வைத்தியம் செய்ய பல டாக்டர்கள் முன்வந்தார்கள். சாமியார் அசைந்து கொடுக்கவில்லை. ஒரேயடியாக மறுத்துவிட்டார்.

சாமியார் முன்னர் கல்லூரிப் பேராசிரியராக கடமையாற்றியவர். இப்போது வயது 70.

11 மாதம் சாப்பிடாமல் இருப்பது பிரமாதமான சாதனைதான்.

# ஆசையால் வந்த அவதி



"என்னை எவராலும் அடையாளம் கண்டுபிடிக்க முடியாதே" என்ற இறுமாப்புடன் பவனி வரும் இந்தக் கடல் நாரைக்கு ஐஸ்கிறீம் மீது ஆசை!

கடற்கரையில் ஐஸ்கிறீம் சாப்பிட்டுவிட்டு வீசி எறியப்பட்ட கோனை தன் சொண்டினால் தட்டிப்பார்த்தது. கோனுக்குள் சொண்டு புகுந்துவிட்டது. அதனை எடுக்க முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்க, அதை ஒருவர் 'கிளிக்' பண்ணிவிட்டார்.

# உலாப் போகும் நேரம்



ஒன்பது குழந்தைகளை ஒரே நேரத்தில்
பராமரிக்க வேண்டும்.
தாதியின் வேலை அப்படி.
ஒரே இடத்தில் வைத்திருந்தால் அழுது
அடம் பிடிப்பார்கள். என்ன செய்யலாம்
என்று யோசித்தார்.
உடனே மூளையில் ஒரு ஐடியா
உதயமாகிவிட்டது.
அந்த ஐடியா உபயத்தில் உருவான
தொடர் வண்டி வாகனம்தான் படத்தில்.
கனடா ரொறான்ரோ நகரைச் சேர்ந்த
இந்த தாதியின் பெயர்
லெலிஸ் மொன்ரேசிகோஸ்.
தனி ஒரு குழந்தையை வெளியே
அழைத்துச் செல்லும் வண்டி போன்று
ஒரே நீள வண்டியில் 9 இருக்கைகளை
அமைத்து அவற்றில் குழந்தைகளை
அமர்த்தி ஆனந்தமாக அழைத்துச்
செல்கிறார். தந்திரமுள்ள தாதி!
நீங்களும் முயன்று பார்க்கலாமே!

www.padippakam.com



அவரும் புதுமுகம்தான்.

## சாதி. ஐந்து வருடத்திற்கு...மூச்!

நடிகர் சரத்குமார் முன்னர் படத்தயாரிப்பாளராக இருந்தவர் என்பது நினைவிருக்கலாம். தற்போது இயக்குநராகப் போகிறீர்களாமே என்று கேட்டால், ஐந்து வருடத்திற்கு 'மூச்' அந்த நினைப்பே இப்போது இல்லை என்கிறார். சரத்குமார் நடித்துவரும் பதினைந்து படங்களும் முடிந்து வருகிறது.

## ராம்கியின் புதிய படம்

ராம்கி கதாநாயகனாக நடிக்க வினிதா நடித்து வரும் புதிய படம் 'சாம்ராட்'. ராம்கி-வினிதா ஜோடி நடித்துவரும் மற்றொரு படம் 'உளவாளி'. ராசியான ஜோடி என்று பெயரெடுக்கப் போகிறார்களோ?

## கல்நாயக் மூன்றாவது துருவமானது

இந்தி 'கல்நாயக்' படம் இப்போது தமிழில் தயாராகி வருவது தெரிந்த சமாச்சாரம். ரஹ்மான்-கன்னடா ஜோடி நடிக்கிறார்கள். 'மூன்றாவது துருவம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

## குஷ்பு வீட்டில் டும்.டும்.

## பயணிகள் கவனிக்கவும்

## "வெற்றி பெற்றால் சுதவைத் தட்டுவார்கள்!" அனுபவத்தோடு சுகன்யா சொல்கிறார்!



## பெயர் மாறிய நட்சத்திரம்

'ஒரு வீடு இரு வாசல்' படத்தில் கதாநாயகியாக நடித்தவர் யாமினி. பாலச்சந்தரின் அறிமுகம். இடையிலே காணாமல் போன யாமினி இப்போது கல்யாணி என்ற பெயரில் 'காளியம்மா' என்னும் படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

இடையில் காணாமல் போன காரணம் படிப்பில் காட்டிய ஆர்வம் என்கிறார். நம்பினால் நம்புங்கள்.

## தப்பியது எப்படி?

## தம்பி நீயும் நானுமா?

பிரபுதேவா முதலில் நடனம் சொல்லிக் கொடுத்தார். பின்னர் தானே ஆடினால் என்னவென்று யோசித்து ஆடவந்தார்.

வரவேற்பு பிரமாதம். உடனே கதாநாயகனாக மாறிவிட்டார். இப்போது பிரபுதேவாவின் அண்ணனும் படங்களில் ஆட வருகிறார்.

இதுவும் எதிர்பார்த்தவரை வராமல் போனதால், 'காதலன்' படத்தை நம்பியிருக்கிறார் பிரபுதேவா. 'காதலன்' படத்தில் வடிவேலுவுக்கும் பெயர் சொல்லக்கூடிய பாத்திரம்.

## விஜயகாந்த் போதும்

## ஆட்டுக்கார அலமேலு

## சந்திரபோஸ் மறு...

## இனிமேல்லாம்

## படம் வரும் பின்னே!-பாடல் வந்தது

'செந்தமிழ்ச் செல்வன்'

பிரசாந்த்-சிவரஞ்சனி ஜோடியோடு விஜயகுமார், சுஜாதா, உதயபிரகாஷ், செந்தில், சார்லி, கவுண்டமணி ஆகியோரும் நடிக்கிறார்கள்.

## மொட்டையர் பட்டியல்



## காதோடு சொல்லுகிறோம்

www.padippakam.com

# சினி விசிட் 52

## வாழ்க சனநாயகம்

ஒரு சாதாரண மனிதனை தவறான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பொங்கியெழ வைக்கின்றன. அதுதான் தனது புதிய படமான 'வாழ்க சனநாயகம்' சொல்லும் கதையின் கரு என்கிறார் மன்சூரலிகான்.

'தாழ்த்தப்பட்டவன்', 'மாமனாரா மருமகனா' என்னும் இரு படங்களையும் மன்சூரலிகான் தயாரிக்கிறார். முதலில் வரப்போவது 'வாழ்க சனநாயகம்'

## 5 சதவிகிதம் தமிழ்

'காதலன்' படத்தில் பிரபு தேவாவுக்கு ஜோடியாக நடித்து வருபவர் நக்மா.

தமிழில் குஷ்புவுக்கு கிடைத்த இரசிக வரவேற்புப் போன்று தெலுங்கில் நக்மாவுக்குப் படு வரவேற்பு. பம்பாய் நட்சத்திரமான நக்மாவுக்கு தமிழ் 5 சதவிகிதம்தான் தெரியுமாம். என்றாலும் என்ன? தமிழ் படவுலகில் அவரும் கொடி கட்டிப் பறக்கலாம். டப்பிங் இருக்க பயமேன்?



அபிஷேக்
படம்-மோகமுள்



ரேவதி
படம்-சிறையில் பூத்த சின்ன மலர்

## சினிமா விமர்சனம்

### அதர்மம்

நீண்ட இடைவெளிக்குப் பின் முரளிக்கு கை கொடுத்திருக்கும் படம் 'அதர்மம்'. திரைப்படக் கல்லூரி மாணவர்களது படம். முரளிக்கு முதல் சினிமாஸ்கோப்.

தமிழ் நாட்டில் வருதுக்கு பாதகம் இல்லாமல் ஓடுகிறது.

இடைவேளைவரை படத்தில் நாசரின் ஆக்கிரமிப்பு.

ஏதாவது அதர்மம் செய்யப்போகிறாரோ என்று நாம் யோசித்துக் கொண்டிருக்க, மனுசன் அதர்மத்தை எதிர்த்து உயிர் விடுகிறார். மனதிலும் ஏறி இருந்து விடுகிறார்.

சந்தனக் கடத்தல் வீரப்பனை நினைவூட்டும் தருமன் பாத்திரம் நாசருக்கு. வீரப்பனின் தம்பிக்கு அருச்சுனன் என்று பெயர். படத்தில் நாசரின் தம்பியாக வரும் முரளிக்கும் அதே பெயரைச் சூட்டியிருக்கிறார்கள்.

தலைவாசல் விஜய் வில்லனாகிவிடுவாரோ என்று நினைக்கவைத்து வில்லனாகாமல் உயிர்விடுகிறார். நல்ல நடிகர்.

ரஞ்சிதாவுக்கு கவர்ச்சி காட்ட சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள்.

சண்டைக்காட்சிகள் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளன. இறுதியில் முரளியை கைது செய்யாமல், முரளியின் தரப்பில் உள்ள நியாயத்தை புரிந்து கொள்ளும் பொலிஸ் அதிகாரியாக விஜயகுமார். 'கிளைமாக்ஸ்' வித்தியாசம்தான். அதிலும் எதிர்ப்பவன் கையில் விலங்கு போடாமல் படத்தை முடித்திருப்பதை பாராட்டலாம். இசை-இளையராஜா. இயக்கம்- புதியவர்-ரமேஷ் கிருஷ்ணன். புதியவர் என்றாலும் வளரக் கூடியவர். திறமை பளிச் பளிச்.

## கறு கறு கோடம்பாக்கம்

இந்தி நடிகை மீனாட்சி சேஷாத்திரி 'டூயட்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக நடித்திருக்கிறார். இந்தியில் இருந்து தமிழுக்கு வந்த மீனாட்சிக்கு கோடம்பாக்கம்-அதுதான் தமிழ் திரையுலகம்-பிடித்து விட்டதாம். காரணம், தமிழ் திரையுலகில் உள்ளவர்கள் கறுகறுப்பானவர்கள் என்கிறார். கோடம்பாக்கம் கொலரைத் தூக்கி விட்டுக்கொள்ளலாம்.

## கன்ன ரகசியம்

ரோஜாவின் கன்னத்தை புகழ்ந்து தள்ளிவிட்டார் மதுபாலா.

ரோஜாவின் கன்னம் பற்றி மதுபாலா சொன்னது இதுதான்:

'ரோஜாவின் கன்னம்மீது எனக்கு பொறாமை. அந்த கன்னம் சிக்கானது அப்படியா?

## ரேவதி சொன்னது

ரேவதியை பார்க்கும் [illegible] படத்தை இயக்க [illegible] ரேவதி சொல்கி[illegible] [illegible]



முரளி-ரஞ்சனி
படம்-அதர்மம்

## விரிந்த முல்லை

விலகியதெப்படி
வெப்பம்?
விளவிய காளை
திரும்பிப் பார்த்தான்
தென்றல்
சிரித்துக் கொண்டிருந்தது!
இதழ்களில்
முல்லை விரித்துக்கொண்டிருந்தது!

## கஸ்தூரிக்கு யோகம்

இந்தியாவிலேயே [illegible] அது கஸ்தூரியேதான். இப்போது புதுமுக நடிகர் ஒருவன் கஸ்தூரிக்கு [illegible] வந்திருக்கிறார். [illegible]



பிரசாந்த்-சிவரஞ்சனி
படம்-செந்தமிழ்ச் செல்வன்

## -ஹிட்லர் ஒரு தேச பக்தன்-

### இயக்குநர் பவித்ரன் சொல்கிறார்

'ஜென்டில்மேன்' படத்தை இயக்கிய பவித்ரன் இயக்கப் போகும் படம் 'ஹிட்லர்'.

அந்தப் படத்திற்கான ஆரம்பதான் விளம்பரத்தில் 'ஜெர்மனியில் ஒரே ஒரு ஹிட்லர். இந்தியாவில் 80 கோடி ஹிட்லர்கள்' என்று வாசகங்கள் இருந்தன. பார்த்தவர்களுக்கு அதிர்ச்சி. பவித்ரன் சிரித்துக்கொண்டு பளிச் சென்று சொன்ன பதில் இது:

'என்னைப் பொறுத்தவரை ஹிட்லர் தேச பக்தர். நம் நாட்டு குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் தேசப்பற்று இருப்பதைச் சொல்லவே அப்படி வாசகம் அமைத்தேன்'. அட, இப்படியும் ஒரு கண்ணோட்டம் இருக்கிறதாக்கும்.

## முகப்பில் முகச் செழிப்போடு சிவரஞ்சனி

படம்- செந்தமிழ்ச் செல்வன்



## தேடித் தீர்ப்போம் வா! எழுதியிருக்கிறார் கமல்!

கமலஹாசன் எழுதி சமீபத்தில் ஒரு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. புத்தகத்தின் பெயர் 'தேடித் தீர்ப்போம் வா'. அரசியல்-சினிமா, மனித நேயம் என்று பல துறைகள் பற்றி அலசியுள்ளார். எம்.ஜி.ஆர் மாதிரி மாற முடியும் என்று கனவு காணும் சமகால நடிகர்களையும் தன் எழுத்தில் சாடியுள்ளார் கமல்.

## சாகுல் உயர்கிறார்

'திருடா-திருடா' படத்தில் 'ராசாத்தி என் உசிரு என்னுதில்லே' பாடலைப் பாட [illegible] ஏ.ஆர்.ரகுமான் சாகுல் [illegible] அதுதான் சாகுலின் முதல் பாடல். ஆனால் அதற்கு முன்னரே அவர் 'ஜென்டில்மேன்' படத்தில் பாடிய 'உசிலம்பட்டி பெண்குட்டி' பாடல் பிரபலமாகிவிட்டது. [illegible] படத்தில் வருகிற 'பொண்டாட்டி' பாடலும், சிந்து நதியின் மிசை நிலவினிலே 'ஆத்தாடி என்ன உடம்பு' பாடலும் இப்போது சாகுலை [illegible]

## 'ரகுமானை விடமாட்டேன்'

'ரோஜா' இந்தியில் படு சூப்பர் ஹிட். பாடல்களும் படு பிரபலம். இந்தி தயாரிப்பாளர்கள் ஏ.ஆர். ரகுமானை மொய்க்கத் தொடங்கிவிட்டார்கள். ஹீரோ போன்ற வெற்றிப் படங்களை தயாரித்த [illegible] சென்னைக்கு வந்து ரகுமானைச் சந்தித்தார். [illegible]

## கொடுத்தால் நடிக்கலாம்

பாரதிராஜா என்று ஒரு இயக்குநர் இருக்கிறார் [illegible]

### அன்னா முதல் இன்றுவரை!

இயக்குநர் [illegible] ஒரு பேட்டியில் சொன்னது இது: 'அண்ணா அவர்கள் முதல் இன்றுவரை தமிழக அரசியலை சினிமாதான் [illegible]'



நதியா
படம்-சின்ன மேடம்



"சாதிப் பிரிவுகள் சொல்லி- அதில் தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார். நீதிப் பிரிவுகள் செய்வார்- அங்கு நித்தமும் சண்டைகள் செய்வார்."
–சுப்பிரமணிய பாரதியார்–



## பாப்பா முரசு சிறுகதை

# பொய்ச் சண்டை

காசிப்பட்டணம் நகரை மன்னர் சாலிவாகனன் நீதி தவறாமல் ஆட்சி புரிந்தான். நகரில் மக்களுக்கு எந்த விதமான குறையும் இல்லாமல் அரசர் கவனித்துக் கொண்டார். மக்கள் எந்த அளவு நாணயமாக நடந்து கொள்கிறார்கள் என அறிய மன்னர் ஆசைப்பட்டார். அதற்காக மாறுவேடம் அணிந்து மந்திரியுடன் நகர்வலம் வந்தார்.

ஊர்க்கோடியில் ஒரு குடிசைவீட்டில் சண்டையும், சச்சரவுமாக இருந்தது.

"மந்திரி! இந்தக் குடிசை வீட்டில் இருப்பவர்கள் எதற்காகச் சண்டை போட்டுக்கொள்கிறார்கள் எனப்போய் அறிந்து வாருங்கள்" என்றார் அரசர்.

உடனே மந்திரி ஒரு வழிப்போக்கன் மாதிரி குடிசைக் கதவைத் தட்டினார். கணவரும், மனைவியுமான இருவர் வந்து கதவைத் திறந்தார்கள்.

"ஐயா! நான் ஒரு வழிப்போக்கன். பசியோடு இருக்கிறேன். உண்ண ஏதாவது கிடைத்தால் மகிழ்ச்சி அடைவேன்," என்றார் மாறுவேடத்தில் இருந்த மந்திரி.

கதவைத் திறந்தவருக்குக் கோபம் கோபமாக வந்தது. 'பிச்சை எடுத்ததாம் அனுமார். அதைப் புடுங்கித் தின்றதாம் பெருமாள்,' என்று பழமொழி சொல்லுவதுபோல, "நாங்களே பசியால் வாடிக்கொண்டிருக்கிறோம். உனக்குப் போட எங்கே போவது? போ...போ..." என்று கோபமாகப் பேசினார்.

உடனே அவர் மனைவி நிதானமாக, "ஐயா! உங்களைப் பார்த்தால் நல்லவர் மாதிரித் தெரிகிறது. என் கணவர் ஒருமாதிரி. பக்கத்து வீட்டில் உள்ளவர்களுக்கு நான் உதவுவது அவருக்குப் பிடிக்கவில்லை. அது விஷயமாகத்தான் எங்களுக்குள் சண்டை வரும். நீங்கள் கொஞ்சம் பொறுத்திருங்கள். சூடாக சாதம் வடித்து உங்களுக்குப் போடுகிறேன்," என்றாள்.

அவள் அப்படிச் சொன்னதும், அவளது கணவருக்குக் கோபம் வர மீண்டும் அவர்களுக்குள் சண்டை எழுந்தது.



மந்திரி, "நான் சற்று தாமதித்து வருகிறேன் அம்மா," என்று கூறிவிட்டு வெளியேறி அரசரிடம் நடந்தவற்றைக் கூறினார்.

அரசருக்கு ஒரு பக்கம் அப்பெண்ணை நினைத்து மகிழ்ச்சியாக இருந்தாலும், அவளுடைய கணவருடைய நடத்தையைக் கண்டு வருத்தமாக இருந்தது.

"நம் நாட்டில் ஈவு, இரக்கம் இல்லாதவர்களே இருக்கக்கூடாது." என்றவர், மறுநாளே இரண்டாயிரம் பொற்காசுகளைப் பையில் போட்டு ஒரு தூதுவர் மூலம் அப்பெண்ணிடம் கொடுக்கச் சொன்னார்.

"தூதுவரே! இப்பணத்தை நான் கொடுத்ததாகச் சொல்லிக்கொடு. நேற்று நான் மாறுவேடத்தில் வந்ததையும் சொல்லு. இப்பணத்தைப் பிறருக்கு உதவும் வகையில் செலவு செய்யச் சொன்னதாகவும் சொல்லவும்," என்றார் அரசர்.

அரசர் சொன்னதை அப்படியே சொல்லி பொற்காசுகளைக் கொடுத்தபோது அப்பெண்மணி மிகுந்த மகிழ்ச்சியுடனும், நன்றியுணர்வுடனும் பெற்றுக்கொண்டாள்.

"இப்பணத்தில் மற்றவர்களுக்கு உதவுவேன் என்று அரசரிடம் சொல்லுங்கள். எங்களது நன்றியையும் தெரியப்படுத்துங்கள்," என்றாள் அப்பெண். அவளது கணவரும், "என் மனைவி உதவுவதை நான் தடுக்க மாட்டேன்," என்று நன்றியுடன் பேசினார்.

தூதுவர் திரும்பிய கொஞ்ச நேரத்தில் பக்கத்துக் குடிசையில் வசிக்கும் நாச்சியம்மா வந்து, தன் பெண்ணின் கல்யாணத்திற்கு ஆயிரம் பொற்காசுகள் குறைவதைச் சொல்லிக் குறைபட்டுக்கொண்டாள். தனக்குத் தூதுவர் மூலம் பணம் வந்தது நாச்சியம்மாவுக்குத் தெரிந்திருக்குமோ என முதலில் நினைத்தாலும், சற்று நேரத்தில் நாச்சியம்மா பேசப் பேச உண்மையாகவே கேட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டாள். அதனால் அவளுக்கு உதவுவது எனத் தீர்மானித்து அவளுக்கு ஆயிரம் பொற்காசுகளைக் கொடுத்துவிட்டாள்.

"உனக்கு ஏது இவ்வளவு பணம்?" என்று வியப்புடன் கேட்டாள் நாச்சியம்மா.

தனக்குத் தூதுவர் மூலம் பணம் கிடைத்த விபரங்களைச் சொன்னாள். 'அடடா! என் வீட்டில் நானும் என் கணவரிடம் சண்டை போட்டிருந்தால் இரண்டாயிரம் பொற்காசுகள் கிடைத்திருக்குமே, என நாச்சியம்மாள் நினைத்தாள்.

அன்றுமுதல் தினமும் மாலை நேரத்தில் வேண்டுமென்றே தன் கணவரை வம்புக்கு இழுத்து சண்டை போடத் தொடங்கினாள் நாச்சியம்மா. அரசர் காதில் விழ வேண்டும் என்பதற்காக ஜன்னல் கதவுகளைத் திறந்து வைத்தாள்.

அரசர் தினமும் மாறுவேடத்தில் வரமாட்டார் என்பது அவளுக்குத் தெரியாது.

ஒருநாள் அவள் தன் கணவனிடம் வழக்கம்போல சண்டை பிடித்துக்கொண்டிருந்தபோது, ஜன்னலருகே யாரோ நிற்பது தெரிந்தது. ராஜாதான் மாறுவேடத்தில் வந்து தான் சண்டை பிடிப்பதை ஒட்டுக்கேட்கிறார் என நினைத்த நாச்சியம்மா தனக்கு மறுநாள் இரண்டாயிரம் பொற்காசுகள் கிடைக்கும் என எண்ணி மகிழ்ந்தாள். ஆனால் நடந்ததோ வேறு.

பக்கத்து வீட்டுக்காரி கொடுத்த ஆயிரம் பொற்காசுகளையும் திறந்த ஜன்னல் வழியாக யாரோ திருடிக்கொண்டு போய்விட்டார்கள்.

புலியைப் பார்த்துப் பூனை சூடு போட்டுக்கொண்ட கதை மாதிரி.

## வினோதச் சொற்கள்

பின்வரும் சொற்களை, இடமிருந்து வலமாகவும், மேல் இருந்து கீழாகவும் வாசிக்கும்போது வினோதச் சொற்களின் விசித்திரம் புரியும். இதோ:



| | | |
|---|---|---|
| க | ர | டி |
| ர | யி | ல் |
| டி | ல் | லி |



ஆக்கம்:
எஸ். ஜவாத்-கடவத்தமடு.

## விடுகதைகளும் விடைகளும்

1. எல்லோரும் சேர்ந்து சுத்தினாலும் சுத்துப்படாது. அது என்ன?
2. கொழும்பில் இருந்து வந்த மாமாவுக்கு உடம்பெல்லாம் மயிர். அது என்ன?
3. வெள்ளை றோட்டில் கறுத்தக் கார் ஓடுகிறது. அது என்ன?
4. யாராலும் எண்ணவோ அணைக்கவோ சேர்த்து வைக்கவோ முடியாது. அது என்ன?
5. வெள்ளைக்காரனுக்கு கறுப்புத் தொப்பி. அது என்ன?
6. வயிறு பெருத்து வெடித்த மாமியின் வயிறு நிறைய சிவப்பு முத்துக்கள். அது என்ன?
7. வீட்டுக்கு அழைக்காத விருந்தினர்களாக எப்போதும் வீட்டுக்கு வந்து போவார்கள் அவர்கள் யார்?
8. அள்ளி அள்ளி வைப்பார். ஆனால் தான் உண்ணமாட்டார். அவர் யார்?

### விடைகள்

1. வீதி 2. றம்புட்டான் பழம்
3. கண் 4. மணல்
5. தீக்குச்சி 6. மாதுளம்பழம்
7. ஈ,நுளம்பு 8. அகப்பை.

மாலதி சின்னத்தம்பி
இந்துக்கல்லூரி-வாழைச்சேனை.

1. வீட்டுக்குள் வீடு கட்டி, வீட்டையே கொள்ளையடிப்பான். அவன் யார்?
2. ஓட்டு வீட்டை உடன் கொண்டு செல்வான். அவன் யார்?
3. காட்டிலும் மேட்டிலும் முளைக்காத பனை. என்ன பனை?
4. கொசவன் செய்யாத பானை. தவளை குடிக்காத தண்ணீர். அது என்ன?
5. பூவிலே சிறந்தபூ, உலகிலே சிறந்தபூ, பெண்கள் சூடாத பூ. என்ன பூ?

1. எலி 2. ஆமை
3. கற்பனை 4. இளநீர் 5. அன்பு

நடேசன் சிவசந்திரன்
அட்டாம்பிட்டிய எஸ்டேட்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 04.06.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 42
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 39

பரிசுக்குரியவர்-
... புனித சூசையப்பர் கல்லூரி கொழும்பு-13.

பாராட்டுக்குரியவர்கள்-
... புனித மிக்கேல் கல்லூரி மட்டக்களப்பு.
... இந்து கல்லூரி-வாழைச்சேனை.
... புனித அந்தோனியார் கல்லூரி வத்தளை.
... காத்தான்குடி-06.

அ.முஹம்மத் அஸாம்
அஹதியா சன்மார்க்க போதனா பீடம் புத்தளம்.
கி.அமிர்தவாகினி
விக்னேஸ்வரா வித்தியாலயம்-கரவெட்டி.
பாத்திமா ஷாமிலா
ஸாஹிரா மத்திய கல்லூரி-மாவனல்லை.
எனிரஜிதா
திருக்குடும்ப கன்னியர் மடம்-கொழும்பு-13.
எம்.ஐ.எம்.இஃலான்
பேயாற்றுமுனை முஸ்லிம் கலவன் பாடசாலை-கிண்ணியா-07.
செல்வன்.ஜெ.ஜெகன்
...
எம்.எஸ்.எப். ரிபாயா
...

## அறிவோம் மனதில் பதிவோம்



'தங்கத்தவளை' என்ற ஒருவகைத் தவளையின் தோலில் இருந்து எடுக்கப்படும் விஷம் மிகக் கொடியது. ஒரு தவளையின் விஷம் 1500 பேரைக் கொல்லும் அளவுக்குக் கடுமையானது.



ஜேர்மனியைச் சேர்ந்த கிறிஸ்டா லடிங் என்ற பெண் 1988ம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் நடகள போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 1984, 1988ம் ஆண்டுகளில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் 'ஸ்பீட் ஸ்கேட்டிங்' என்ற உருளைச் சறுக்குப் போட்டியில் தங்கம், வெள்ளி பதக்கங்களும் பெற்றார். கோடைகால, குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற முதல் பெண் இவர்தான்.



அமெரிக்காவைச் சேர்ந்த போல் எம். கிமெல்லன் என்பவர் 215 நாட்களில் 162 கிலோ உடல் எடையைக் குறைத்துச் சாதனை புரிந்துள்ளார். 1967ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி 221 கிலோ எடையாக இருந்த இவர், அதே ஆண்டு, ஓகஸ்ட் 3ம் திகதி 59 கிலோ எடைதான் இருந்தார். அந்த அளவு கடும் முயற்சி செய்து எடையைக் குறைத்துள்ளார்.

இலண்டனைச் சேர்ந்த யூஜின் அகஸ்டின் என்பவர் மவுனப் படத்துடன் இசை சேர்க்கும் கருவியை 1910ம் ஆண்டு கண்டுபிடித்தார்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஷர்லி பார்பரா என்ற பெண்தான் ஒலிம்பிக் பந்தயங்களிலேயே அதிக பதக்கங்களைப் பெற்ற பெண் வீராங்கனை. இவர் 1948,1952,1956 ஒலிம்பிக் பந்தயங்களில் பங்குகொண்டு 3 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றிருக்கிறார்.

## கணித விநோதம்

கீழ் காணும் எண் வரிசையின் தனித்தன்மை என்ன?

1,3,5,7,9,11,13,15,17,19,21,23,25.....

விடை-முதல் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு....எண்களின் கூட்டுத் தொகை முறையே 1,2,3,4....ஆகிய எண்களின் வர்க்கங்களாகும்.

உதாரணம்:

1=1×1
1+3=4=2×2
1+3+5=9=3×3
1+3+5+7=16=4×4
1+3+5+7+9=25=5×5
1+3+5+7+9+11=36=6×6
1+3+5+7+9+11+13=49=7×7
1+3+5+7+9+11+13+15=64=8×8
1+3+5+7+9+11+13+15+17=81=9×9
1+3+5+7+9+11+13+15+17+19=100=10×10

எம்.தில்லை ராஜா
பது/பசறை தமிழ் மகா வித்தியாலயம்.

## நவதானியங்கள்

1. நெல் 2. கோதுமை
3. துவரை 4. உழுந்து
5. பயறு 6. மொச்சை
7. கடலை 8. எள்ளு
9. கொள்ளு

## நவரத்தினங்கள்


1. முத்து 2. பவளம்
3. புஷ்பராகம் 4. நீலம்
5. மரகதம் 6. மாணிக்கம்
7. கோமேதகம் 8. வைடூரியம்
9. வைரம்

## நவலோகங்கள்

1. பொன் 2. இரும்பு
3. தாமிரம் 4. ஈயம்
5. வெள்ளி 6. துத்தநாகம்
7. நாகம் 8. பித்தளை
9. கஞ்சம்.

எஸ். சித்ராதேவி
மூதூர்.

## உலகில் இரண்டாவது பெரிய தீவு




- உலகிலேயே மிகப் பெரிய தீவு கிறீன்லாந்து. இரண்டாவது பெரிய தீவு எது?
  பசிபிக் கடலில் உள்ள நியூகினியா.
- இது எவ்வளவு பெரியது?
  எட்டு இலட்சத்து பதினெட்டாயிரம் சதுரகிலோ மீற்றர் பரப்பளவு உடையது இந்தத் தீவு.
- இது சுதந்திர நாடா?
  இது கிழக்கு மேற்கு என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கிழக்கு நியூகினியா, பப்புவா நியூகினியா என அழைக்கப்படுகின்றன. 1975ம் ஆண்டுவரை அவுஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. பின் சுதந்திரம் அடைந்தன.
- மேற்குப் பகுதி எப்படி உள்ளது?
  மேற்குப் பகுதி 'இரியன் ஜயா' என அழைக்கப்படுகின்றது. இது இந்தோனேசியா நாட்டின் கீழ் உள்ளது.
- நியூகினியா தீவு மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள்?
  இவர்கள் 'மலனேசியர்'கள் என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் கறுப்பாக, கம்பளி போன்ற அடர்த்தியான முடியுடன் இருப்பார்கள். இந்த நாட்டில் கிராமங்கள்தான் அதிகம். 5 கோடி மக்கள் உள்ளனர்.

## ஸ்போர்ட்ஸ்

# இடி மின்னல் அலன் போடர்
# ஓயவிடாது துரத்தும் கிரிக்கெட் உலகு!



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் கப்டன் அலன் போர்டர் ஓய்வு பெற்றுவிட்டது பழைய செய்தி.

பதினோராயிரம் ஓட்டங்களை டெஸ்ட் போட்டிகளில் எடுத்து சாதனை படைத்த இடி மின்னல் ஆட்டக்காரர் அலன் போர்டர்.

[illegible] வயதில் அந்த இடி மின்னல் ஓய்வு நாடியிருக்கிறது.

மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதில்லையா? அலன் போர்டரின் கதையும் அதுதான்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் உலகம் போர்டரை விடுவதாக இல்லை. ஓய்வு பெற்றவரை துரத்திப்போய் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபையின்... என்ற பதவியைக் கொடுத்திருக்கிறது.

அலன் போர்டரின் நிர்வாகத்தின் கீழ் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி துடிப்பாகச் செயல்படும் என்று எதிர்பார்க்கலாம்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியில் உள்ளவர்கள் பற்றி அலன் போர்டருக்கு திருப்தி இல்லை. ஊக்கம் குறைந்தவர்களாக இருக்கிறார்களே என்று கப்டனாக இருந்தபோது கவலை தெரிவித்திருந்தார்.

ஊக்கம் குறைந்ததுதான் பல தோல்விகளுக்கு காரணம் என்றும் சொல்லியிருந்தார்.

"பல சந்தர்ப்பங்களில் தலை சிறந்த ஆட்டக்காரர்கள் கூட காலை வாரிவிடுகின்றனர். இறுதியில் டேவிட் பூனும், அலன் போர்டரும்தான் கைகொடுத்து மானத்தை காப்பாற்றுகிறார்கள்." இப்படித்தான் அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் கிம் [illegible] முன்னர் ஒருமுறை கூறியிருந்தார்.

இப்போது அலன் போர்டர் களத்தில் இல்லை. டேவிட் பூன் மட்டுமே கையில் மட்டையோடு தனித்து பொறுப்பேற்க வேண்டும். பூனுக்கும் வயது 33 ஆகிவிட்டது. கப்டன் பதவிக்கு அவரது பெயரும் அடிபட்டது. ஆனால் வயது காரணமாக வாய்ப்பு பறிபோய்விட்டது.

கப்டன் பதவிக்கு வரக்கூடியவர்கள் என்ற பட்டியலில், மார்க் ரெய்லர், இயான் ஹீலி, ஸ்ரீவ் வோவ், டீன் ஜோன்ஸ் ஆகியோரின் பெயர்களும் அடிபட்டன. இறுதியில் மார்க் ரெய்லர் கப்டனாகியிருக்கிறார்.

பத்து வருடமாக கப்டனாக இருந்த அலன் போர்டரின் இடத்தை புதிய கப்டனால் நிரப்ப முடிகிறதா என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

அலன் போர்டர் கப்டனாக இருந்த காலத்தில் நடந்த ஒரு சம்பவம்- அலன் போர்டரே பேட்டியொன்றில் சொன்னது இது:

"ஒருநாள் எனது மகன் வந்து என்னிடம் கேட்டான்- 'அப்பா! அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்களில் மிகச் சிறந்த வீரர் யார்?' நான் எவ்வளவோ சாதனைகளை ஏற்படுத்திய போதும் எனது மகன் முன் சின்னவனாக மாறிவிட்டேன்."

இன்னொரு சம்பவம்- நடுவர்களோடு பிரச்சனைப்படும் கப்டன் என்று பெயர் எடுத்த போர்டர், ஒருமுறை நடுவர்களோடு ஏற்பட்ட பிரச்சனை காரணமாக 2000 டொலர் அபராதம் கட்டினார்.

## போர்டரின் உலக சாதனைகள்!

| | |
|---|---|
| பங்குகொண்ட டெஸ்ட் போட்டிகள்- | 153 |
| விளையாடிய இன்னிங்ஸ்- | 260 |
| கூடுதலாகப் பெற்ற ஓட்டங்கள்- | 11022 |
| கூடுதலாகப் பெற்ற அரைச் சதங்கள்- | 63 |
| கூடுதலாகப் பிடித்த காச்சுகள்- | 152 |
| தொடர் டெஸ்டுகள்- | 44 |

கப்டனாகவிருந்து கூடுதலாக ஆடிய டெஸ்டுகள்-90

### டெஸ்ட்டுகளில் எதிர்த்தாடிய நாடுகளின் விபரம்:

| நாடுகள் | ஆடிய டெஸ்டுகள் | எடுத்த ஓட்டங்கள் |
|---|---|---|
| இங்கிலாந்து | 47 | 3548 |
| பாகிஸ்தான் | 22 | 1666 |
| மேற்கிந்தியத்தீவுகள் | 31 | 2052 |
| (வெஸ்ட் இண்டீஸ்) | | |
| இந்தியா | 20 | 1567 |
| நியூஸிலாந்து | 23 | 1500 |
| இலங்கை | 7 | 543 |
| தென்னாபிரிக்கா | 3 | 146 |
| | 153 | 11022 |

## காதலுக்காக ஒரு கடிதம்

### திரையரங்குகள் கவனிக்கவும்

திரையரங்குகளே!
வணக்கம்!
நாங்கள்
தெய்வீகக் காதலர்கள்.
பூமி இன்னும்
சுற்றிக் கொண்டிருப்பது
எங்கள்
புனிதமான காதலால்தான்!

ஆனால்
காதலுக்கு இன்று
நீதியில்லை...
வீட்டாலும் எதிர்ப்பு.

சாலையோரங்களில்
சீருடை மரங்கள்.
ஒதுங்கிக்கொள்ள
ஓரங்களில்லை.

காலிமுகத்திடலிலும்
திடீர் சுற்றி வளைப்புகள்...
தவித்துபோன எமக்கு
மறைவிடம் தருவது
நீங்கள் மட்டும்தான்...

எங்களால்
திரைப்பட காதலர்களைப்போல
யாரும் பார்க்காமல்
'டூயட்'
பாட முடிவதில்லை...

இப்போதெல்லாம்
நாங்கள்
காதலை கௌரவிப்பது
திரையரங்குகளின்
இருட்டுகளில்தான்...

அங்கும்
சில தடைகள்
காதலர்களுக்கு...

அவற்றைப் போக்க
இரண்டு தீர்மானங்கள்
கொண்டு வரவேண்டும்
கவனியுங்கள்...!

ஒன்று:
காதலர்களுக்கென
விஷேட ஆசனம்
ஒதுக்க வேண்டும்.

இரண்டு:
இடைவேளை
இல்லாத படங்கள் வேண்டும்.

வாழ்க உண்மை காதல்!!

இப்படிக்கு,
தெய்வீகக் காதலர்கள்.
சசிகலா சுப்பையா
கிழக்கு வளாகம்.





## பழக்கம்

அடித்துக்கொள்வோம்
வெட்டிக்கொள்வோம்
முகத்தில் உமிழ்வோம்
காலால்கூட
எத்தி நிற்போம்
மாலை போட்டுக்
கை கோர்த்துக் கொள்வோம்
நாங்கள்
அரசியல்வாதிகள்!

-அஸ்வதி-

## அன்பின் நெல்சனுக்கு...!



அன்பின் நெல்சனுக்கு;
ஆயிரம் வாழ்த்துக்கள்!

✦

உங்களின் வெற்றி
இந்த உலகை
இன்னுமொருமுறை
உயிர்ப்பிக்க செய்துள்ளது!
வணக்கங்கள்!

✦

கருமையை நிறமாகக்கூட
ஏற்க மறுத்தவர்கள்;
இன்று!
கன்னத்தில் விரல்வைத்து;
கட்டுண்டு நிற்கிறார்கள்.
மகிழ்ச்சி!

✦

'அடிமைகள்' என்று;
ஆட்சிப்படுத்தியவர்களை
உங்களின்;
அவசரமில்லாத அகிம்சையால்
ஆணிவேருடன் அகற்றி விட்டீர்கள்
நன்றி!

✦

இறந்த காலங்கள்;
உங்களை!
இமைகளை மட்டுமே திறக்க வைத்தது.
ஆனால் தேசத்தின்
எதிர்கால கதவையும்;
நாளை;
நீங்களே திறக்க வேண்டும்;
அபாரம்!

✦

நூற்றாண்டுகள் தோற்றதை
ஈரவியர்வையால்;
உணர்வுகளின் உத்வேகத்தில்
உரிமை உடமையை
உயிர்ப்பித்தீர்கள்
அற்புதம்!

✦

கரிக்கோடுகளை;
சரித்திரமாக்கிய
எங்களின்;
அன்பின் நெல்சனுக்கு
ஆயிரம் வாழ்த்துக்கள்!

வெ.குணா
பூண்டுலோயா.

## உடன் பதில் தா!

நில்...!
இப்போதெல்லாம்
உயிர்-
எப்போது பிரியுமென்று
உத்தரவாதமளிக்க
ஒண்ணுவதில்லை!
அதற்குள்-
அன்பே...!
என்-
வழுக்கிய
வாலிபத்திற்கு(ப்)
பதிலைத் தா...!
உன்-
இளமையில்.

அட்டாளைச்சேனை
யூயெல்.மப்றாக்

# தேன் கிண்ணம்

### பூப்போன்ற நீ எங்கே?

என் தேவதையே!
நிலவு கால
செழுமையின்
இருப்புப் போல நீ.

✧

நீ தினம்
அர்ச்சிக்கப்பட வேண்டியவள்.
தேவ லோகத்து
ரம்பை என்பதாய்
நான் என்னளவில்
உன்னைப் பிரகடனப்படுத்திய
போதுதான்,
நீ எனக்குள்ளே
பஸ்பமானாய்.

✧

உன் பாதங்களின்
சுவடுகள் பாய்ந்த
அந்த
வயல் வரம்பும்
உன் வீட்டு முற்றத்தின்
செவ்விளனி மர
நிழலும்.
உன் வாசனையான
அறையும்
இன்னும் இன்னும்
எனக்கு கண்ணீரைத்தான்
நிறைக்கின்றன.

✧

பூப்போன்ற நீ
எங்கே?
நீ பாடம் படிக்கும்
உன் மேசையின்
நாற்காலிகள் எங்கே?

✧

மோதிர அளவெடுத்து
எனக்காய்
உனது ஆடைகளைப்
போர்த்துவிட
நீயில்லை...
ஆனால் நானிருக்கிறேன்.

✧

கடுமைப்பட்ட
காலங்களின்
உதயம் போல
என் வாழ்வும்
உன் மறைவும்
நீயில்லாமல்
நான் ஒரு இருள்தான்.

✧

இன்னும் சீதை தேடிய
அனுமாராய்
ஒவ்வொரு பயணிப்புகளிலும்
உன்னைத் தேடிய வாறேதான்
நீ கிடைப்பாய்
அல்லது நான்
மரணிப்பேன்

✧

என் தேவதையே!
நிலவுகால
குளிர்மையின் இருப்புப்போல
என்னுள்ளே நீ.

அக்குறணை
இளைய அப்துல்லாஹ்.

### இன்னும் ஈனம்

விழி வான்
சோக மேகம்
இருண்டு தூறும்
இரண்டு கோடாய்...

இந்த நித நீர் வீழ்ச்சி
வெள்ளம் போட்டு
அசைத்து அழிப்பது
அவள் ஆசைப்பயிரை!

மூலை மனசிலும்
மோசம் நினைக்காத
ஆசைக் காதலன்
அடிபட்டுப்போன
அராஜகக் கொடுமை...

சாதம் பிசைந்து
ஊட்டிப் பார்க்க
ஆசைப்பட்டதும்
ஆசைப்பட்டதாய்...

சட்டக் கழுத்தை
எட்டி நெரிக்கும்
காந்திச் சட்டை போட்ட
சமாதிக் கரங்கள்
அவனையும் எட்டி...

இன்னும் இன்னும்
ஈனம் ஈனும்
எமது பூமி...

சிகப்பாய்...சிகப்பாய்...
தீவின் வாசலில்
கோலம் போடும்
கொள்கைக் குன்றங்கள்?

இரவும் பகலும்
சோறும் சுருட்டும்
சுவைக்க உழைத்தவன்...
கொஞ்ச நாளாய்
காதலியின் கண்களுக்குள்ளே
காலம் கழித்தவன்...
தீவில் நீதியாய்
வீதியில் குப்புற...

தலைகள் உருட்டி
தலைமை காக்கும்
நிலைமை தீவில்
தொலைந்து போக
இணைந்து எழுக
இளமை எல்லாம்.

-எஸ்.புஸ்பானந்தன்-



### கோபம்

எங்கிருந்து கிளம்புகின்றது
இந்தச் சூறாவளி?
மூலம் என்ன மூளையா...?
உடலெங்கும் நொடியில்
வியாபித்து விடுகிறதே!

✣

மனச் சமுத்திரத்தில்
கருக்கொள்ளும்

தாழ் அமுக்கங்கள்
மனிதக் கரைகளை
தாண்டும்போது
உறவுச் சங்கிலிகள்
உடைந்து போகின்றன.

✣

கோழைகளின் கேடயம்!
ஏழைகளின் அடிமை!
கணவர்களின் நண்பன்!
மனைவிக்கோ எப்போதாவது
வரும் விருந்தாளி!

காத்தான்குடி-சுபைர்கான்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(29.05.94 முதல் 04.06.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| இடபம் | - சூரியன் |
| மிதுனம் | - புதன், வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மேடம் | - செவ்வாய், கேது |

சந்திரன் — மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மறைமுக எதிர்ப்பு, செய்தொழில் நட்டம். | காலை 9 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்-காரியத்தடை, மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- உறவினர் உபத்திரவம், பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், தாரசுகம். | காலை 8 மணி |
| வெள்ளி- கௌரவம், உயர்ந்த எண்ணம். | பகல் 1 மணி |
| சனி- துயர் நீங்கும், செய்தொழில் விருத்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணக்கஷ்டம், மனக்கவலை. | காலை 10 மணி |
| திங்கள்- வீண் மனஸ்தாபம், செய்தொழில் பிரச்சனை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- காரியசித்தி, பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி மேன்மை. | பகல் 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நோக்கம், கௌரவம். | காலை 8 மணி |
| வெள்ளி- திடீர் பயணம், செலவு மிகுதி. | பி.ப 1 மணி |
| சனி- மனமகிழ்ச்சி, உறவினர் உதவி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பணவரவு, மனமகிழ்ச்சி. | காலை 9 மணி |
| திங்கள்- செய்தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் உதவி, காரியானுகூலம். | காலை 6 மணி |
| புதன்- கடன் உபாதை, முயற்சி வெற்றி. | பி.ப 1 மணி |
| வியாழன்- துயர் அதிகம், தேகசுகம் பாதிப்பு. | காலை 8 மணி |
| வெள்ளி- வைத்தியச் செலவு, அலைச்சல். | பி.ப 3 மணி |
| சனி- பெரியோர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிடப் பிரயாணம், உயர்ந்த நிலை. | காலை 7 மணி |
| திங்கள- பணக்கஷ்டம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, தொழில் மேன்மை. | பி.ப 2 மணி |
| புதன்- காரியானுகூலம், மகிழ்ச்சி. | காலை 10 மணி |
| வியாழன்- வீண் பிரயாணம், அலைச்சல் மிகுதி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, முயற்சி மேன்மை. | காலை 8 மணி |
| சனி- தனலாபம், தெய்வானுகூலம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனபந்து கிலேசம், பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| திங்கள்- புதிய ஸ்தானம், தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளிவிட வாழ்க்கை, மனக்கஷ்டம். | காலை 7 மணி |
| புதன்- பணவரவு, காரியசித்தி. | பி.ப 2 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- தேககக் குறைவு, வைத்தியச் செலவு. | பி.ப 3 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், மனக்கவலை நீங்கும். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முயற்சி மேன்மை. | காலை 6 மணி |
| திங்கள்- பணவரவு, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 8 மணி |
| புதன்- பயனற்ற செயல், மனச் சஞ்சலம். | காலை 10 மணி |
| வியாழன்- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், காரியத்தடை. | காலை 6 மணி |
| சனி- செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- காரியசித்தி, கௌரவம். | காலை 7 மணி |
| திங்கள்- மறைமுக எதிர்ப்பு, பிரயாச மிகுதி. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- துன்ப நிலை நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- பணவரவு, காரியானுகூலம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப 2 மணி |
| திங்கள்- தனலாபம், உழைப்பு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- பயனற்ற செயல், செலவு. | காலை 10 மணி |
| புதன்- துன்பம் அதிகம், வைத்தியச் செலவு. | காலை 9 மணி |
| வியாழன்- வீண் தொல்லை நீங்கும், உயர்ந்த எண்ணம். | காலை 10 மணி |
| வெள்ளி- தனவிருத்தி, நற்செய்கை. | பகல் 12 மணி |
| சனி- ஆடம்பரச் செலவு, பணக்கஷ்டம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தெய்வ நம்பிக்கை, முயற்சி பலிதம். | காலை 10 மணி |
| திங்கள்- கௌரவம், உறவினர் உதவி. | காலை 7 மணி |
| செவ்வாய்- செய்தொழில் விருத்தி, பணவரவு. | பகல் 11 மணி |
| புதன்- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | காலை 9 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 9 மணி |
| சனி- தெய்வானுகூலம், உயர்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம் -2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- செய்தொழில் மந்தம், பணவரவுத்தடை. | பி.ப 2 மணி |
| திங்கள்- உயர்ந்தநிலை, கௌரவம். | காலை 7 மணி |
| செவ்வாய்- முயற்சி வெற்றி, தனலாபம். | பகல் 12 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 7 மணி |
| வியாழன்- திடீர் பிரயாணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரியசித்தி. | பகல் 12 மணி |
| சனி- துயர் நீங்கும், பெரியோர் நட்பு. | காலை 8 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -1

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உறவினர் உதவி, மனக்கவலை குறையும். | காலை 6 மணி |
| திங்கள்- பெரியோர் நட்பு, முயற்சி வெற்றி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- காரியானுகூலம், பணவரவு. | காலை 7 மணி |
| புதன்- அந்நியரால் தொல்லை, மனவேதனை. | பி.ப 2 மணி |
| வியாழன்- உயர்ச்சி நிலை, ஆடம்பரச் செலவு. | காலை 8 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, பணக்கஷ்டம். | காலை 10 மணி |
| சனி- செலவு மிகுதி, இனசனக் கொண்டாட்டம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 3

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்கலக்கம், குடும்பத்தால் கஷ்டம். | பி.ப 2 மணி |
| திங்கள்- உறவினர் பகை, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, மனக்கவலை நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- பெரியோர் சகவாசம், கவலை மறைவு. | பகல் 11 மணி |
| வியாழன்- உறவினர் சகவாசம், பயனற்ற செயல். | பி.ப 1 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| சனி- அந்நியர் நட்பு, பொருள்வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 5

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# மருத்துவ + விந்தைகள்

## ஒட்டிப் பிறந்த இரட்டையர்

## இதயமும்–ஈரலும் ஒன்றே ஒன்று!

இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப் பிறப்பது ஒன்றும் புதுமையல்ல. பல ஆண்டுகளாக ஒட்டிய நிலையில் இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இவர்களை சத்திரசிகிச்சை மூலம் வெட்டிப் பிரித்து வேறாக்கி விடும் வித்தையை மருத்துவர்கள் சிறப்பாக முடித்து விடுகின்றனர். உள்ளுறுப்புக்கள் பிரிக்கப்படாத நிலையில் இருக்குமானால் பிரிக்கப்படாமலே பல்லாண்டு காலம் வாழ்வோருமுனர்.



அமெரிக்காவில் இண்டியானா மாநிலத்தைச் சேர்ந்த ரெய்த்தா லேக் பேர்க்

என்ற பெண்மணி 1992ம் ஆண்டின் பிற்பகுதியில் கருவுற்றார். தனது 6 வயது மகளுக்கு ஒரு தம்பியோ தங்கையோ கிடைக்கப் போகிறது என்று மகிழ்ச்சியோடிருந்தாள். [illegible] வாரம் கருவுற்றிருந்த வேளையில் ரெய்த்தாவைப் பரிசோதித்த மருத்துவர்கள், இரட்டைக் குழந்தைகள் உற்பத்தியாகியிருப்பதாகக் கூறியபோது ரெய்த்தாவின் குதூகலம் இரட்டிப்பாகியது. ஆனால் மருத்துவர்கள் அடுத்து வெளியிட்ட தகவல் பெரும் வேதனையை ஏற்படுத்தியது. இரு குழந்தைகளுக்கும் ஒட்டிய நிலையில் ஒரே இருதயமும் ஒரே நுரையீரலுமே கொண்டிருப்பதாகவும் தெரிவித்த மருத்துவர்கள் கருச் சிதைவினை ஏற்படுத்த வேண்டும் என்று கூறினர்.

இத்தகவலைக் கேட்ட ரெய்த்தா வேதனையின் உச்சிக்கே போய்விட்டார். இருப்பினும் கருச்சிதைவுக்கு சம்மதமளிப்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

கருச் சிதைவுக்கான திகதி குறிப்பிடப்பட்டது. ஆனால் திடீரென்று அறுவை சிகிச்சைக்கு ரெய்த்தா மறுத்துவிட்டார்.

கடந்த ஜூன் 29ம் திகதியன்று சிக்காகோவிலுள்ள லோயலா மருத்துவ மையத்தில் இரட்டைக் குழந்தைகள் ஒட்டிப்பிறந்து உயிர்காப்புப் பிரிவில் வைக்கப்பட்டன. இருப்பினும் இரு குழந்தைகளுமே சாவை நெருங்கிக்கொண்டிருந்தமையினால் ஒரு குழந்தையையாவது தப்ப வைத்து விடலாமோ என்ற கருத்து மருத்துவர்களிடம் தோன்றியமையினால் ரெய்த்தாவும் இதற்கு ஒத்துக்கொண்டார். இருந்த போதும் அந்த ஒரு குழந்தையும் பிழைப்பது ஒரு சதவிகிதம்தான் சாத்தியம் என்றும் மருத்துவர்கள் எச்சரித்தனர்.

பிலடெல்பியாவிலுள்ள சிறுவருக்கான மருத்துவமனையில் ஆகஸ்ட் 20ம் திகதி குழந்தைகள் இரண்டையும் மருத்துவர்கள் வெட்டிப் பிரித்தனர். 6 மணி நேரம் நீடித்த அறுவை சிகிச்சையின் பின்னர் ஆன் என்ற பெண் குழந்தை இறந்தது. அஞ்சலா என்ற பெண் குழந்தை மட்டும் உயிருடன் காப்பாற்றப்பட்டது.

இக்குழந்தை பல மாதங்களாக மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த பின்னர், பிறந்து ஏறத்தாழ ஒரு வருடத்தின் பின்னர் அதன் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இருப்பினும் செயற்கை சுவாசக் குழாய் இன்னும் அகற்றப்படவில்லை. இறந்துபோய்விடும் என்று கருதப்பட்ட இக்குழந்தையானது தன்னிடம் உயிருடன் வந்து சேர்ந்ததையிட்டு தாயாரான ரெய்த்தா லேக்போர்க் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்.



# உங்கள் இல்லத்தில் –நீங்களும் ஒரு வைத்தியர்!

## –வீட்டு வைத்தியம்–

### பாதத்தில் கெட்ட வாடை

பாதணிகளை பாத உறை (சொக்ஸ்)களுடன் பாவிப்போரின் கவனத்திற்கு!

நாள் முழுவதும் பாதணி போட்டுக் கொண்டிருப்பதால் அப்பாதங்களில் காற்றோட்டமில்லாமையினால் கெட்ட வாடை ஏற்படும். பாதணிகளைவிட பாத உறைகள் சகிக்க முடியாத துர்நாற்றம் மிக்க. ஆகவே பாத அணிகள் அவ்வப்போது கழுவப்படுதல் அவசியம்.

சிலருக்கு பாதங்களில் வெண்மையான படலங்கள் ஏற்படும். பருக்களும் தோன்றலாம். இவற்றை நீக்குவதற்கு "பென்சொயில் பெறொக்சைடு" 10 வீதம் கலந்த களிம்பினை (0x4–10) பாவிக்கலாம். இவ்வாறு நெப்ரெஸ்கா பல்கலைக்கழக மருத்துவபீட பேராசிரியர் டாக்டர் ரொட்னி பாஸ்லர் கூறுகிறார்.

கேஸ் வெஸ்டேர்ண் றிசேர்வ் பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் பேராசிரியரான டாக்டர் ஜெரோம் ஸற்.லிற், நம் நாட்டுக்கு ஏற்ற மருத்துவ முறையினைத் தந்துள்ளார்.

நம் நாட்டு தேயிலையே இதற்குச் சிறந்த மருந்தாம். தேயிலைத் தூளை 15 நிமிடம் வேகவைத்த பின்னர் பெறப்படும் சாயத்தில் குளிர்ந்த நீரைக் கலந்து பாதிப்புக்குள்ளான பாதங்களை 30 நிமிடங்கள்வரை அந்தச் சாயத்துள் வைத்திருக்க வேண்டும். தொடர்ந்து 10 நாட்கள் இதனைச் செய்தால் வெண்மைப் படலங்கள், பருக்கள் நீங்குவதுடன் துர்நாற்றமும் தோன்றாது. பாதங்களிலுள்ள ஏனைய தொற்றுகளும் நீங்கிவிடும்.

### நெஞ்செரிவு

நெஞ்செரிவு ஏற்படுவதற்கு பல காரணங்கள் உள. அளவுக்கு மிஞ்சிய அழுத்தம், மன உளைச்சல், கொழுப்பு மற்றும் ஒத்துக்கொள்ளாத உணவும் நெஞ்செரிவினை ஏற்படுத்தக்கூடும். இதனைத் தடுப்பதற்கு சில மார்க்கங்கள் உள்ளன. அவற்றை முதலில் கவனிக்கலாம்.

• காப்பி, மதுபானம், வாசனைத் திரவியங்கள் கலந்த உணவுகள், புழிப்புத்தன்மை உள்ள பழ வகைகளைக் குறைத்து விடுவது நல்லதென இயோவா மருத்துவ பல்கலைக்கழகத்தில் குடும்ப இயல் பேராசிரியரான டாக்டர் ஜோன் சூதர்லண்ட் கூறுகிறார். எண்ணையில், வதக்கப்பட்ட உணவு வகை, தக்காளி, சொக்கலேட்டுகளையும் தவிர்க்க வேண்டும் என்கிறார்.

• ஈரவெங்காயம் நெஞ்செரிவினை நீக்கும் மருந்தெனவும் கூறப்படுகிறது.

• உணவருந்தும் வேளையில் இடைக்கிடையே சற்று வெதுவெதுப்பான நீர் அருந்துவது நலமென தெரிவிக்கப்படுகிறது. இதனால் உணவுக்குழாயில் ஒட்டிக்கொண்டிருக்கும் உணவுப் பருக்கைகள் அவற்றுக்குரிய இடமான வயிற்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டு விடும்.

• உணவு உண்ட உடனே படுப்பது நல்லதல்ல. படுக்கும்போது உணவு வயிற்றுக்கு இழுபடுவதில் தாமதம் ஏற்படலாம்.

• 'அன்ரசைட்' எனப்படும் மாத்திரைகளை சப்பி விழுங்குவதும் நல்லதென ஒக்லஹாமா உணவியல் ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த டென்னிஸ் டெக்ரர் கூறுகிறார். இதனால் உமிழ் நீர் சுரப்பின் வேகம் அதிகரித்து சமிபாட்டுக்கு உதவுகிறது என்று தெரிவித்துள்ளார்.

(இதனால் தான் நம்மவர்கள் உணவின் பின் தாம்பூலம் தரிக்கப்பழகியுள்ளனர் போலும்!)

• நெஞ்செரிவு அடிக்கடியோ தொடர்ந்து ஒவ்வொரு நாளும் ஏற்படுமானால் உணவுக் குழாயில் ஏதோ தொற்று ஏற்பட்டிருக்கலாம். அல்லது குடற்புண் ஏற்பட்டிருக்கவும் வாய்ப்புண்டு. ஆகவே மருத்துவரின் ஆலோசனை பெறுவது அவசியம்.




## சிந்திக்கலாம் இங்கே...

உள்ளத்தில் உள்ளதை அறிந்து கொள்ள ஒரு வழி கிடைக்காதா என்றுதான் எல்லோரும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

தொட முடியாது என்று நினைத்த உயரங்களையெல்லாம் தொட்டுவரும் விஞ்ஞானத்தால் உள்ளத்தில் இருப்பதைக் கண்டறியும் கருவி ஒன்றை கண்டு பிடித்துக்கொடுக்க முடிந்தால், நன்றி சொல்வதற்கு நிறையப்பேர் காத்திருக்கிறார்கள்.

அப்படி ஒரு கருவி கிடைத்தால் காவல் துறையில் உள்ளவர்கள் முதல் காதல் துறையில் கால் வைத்திருப்பவர்கள்வரை அத்தனை பேருமே மெத்தப் பெரிய மகிழ்ச்சியடைவார்கள்.

உறவாடிக் கெடுத்தவர்களால் உள்ளம் உடைந்து கிடைப்பவர்களும் கள்ளமற்ற உறவுகளை கண்டறிய கருவி கிடைத்துவிட்டதே என்று ஆறுதலடைவார்கள்.

இயற்கையில் ஒளிந்து கிடந்த எத்தனையோ இரகசியங்களை விஞ்ஞானம் கண்டுபிடித்து வெளிப் படுத்திபிருக்கிறது.

இதயத்தில் இருக்கும் இரகசியம் அறிய வழி என்ன என்பதற்கு அந்த விஞ்ஞானத்தாலும்கூட விடை சொல்ல முடியவில்லை.

விஞ்ஞானத்தாலும் முடியாது என்கிறபோது மெய்ஞானம் அந்த இடத்திற்கு வருகிறது.

உள்ளத்தை ஊடுருவி அறிய மெய்ஞானிகள் கருவி எதனையும் கண்டுபிடித்து சொல்லவில்லை.

ஆனால் உள்ளத்தில் நல்ல உள்ளம் எதுவென்று அறியக்கூடிய கருத்துக்கள் பலவற்றை தொகுத்துத் தந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.

"அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது முதுமொழி.

அன்று எப்படியோ தெரியவில்லை. ஆனால் இன்று அகத்தின் அழகை முகத்தில் காண்பது முடியாத காரியமாகிவிட்டது.

அந்தளவுக்கு அகத்தின் அழுக்கை முகத்தில் தெரிந்துவிடாதபடி நடிக்கத் தெரிந்தவர்கள் புற்றீசல்கள்போல பெருகிக்கொண்டிருக்கிறார்கள்.

அதனால்தான் அகத்தை அறியும் கருவி ஒன்று கிடைக்காதா என்று அப்படியானவர்களால் காயப்பட்டவர்கள் தேட வேண்டியதாகிவிட்டது.

இன்று ரீ.வி. வாங்குவதானால் கூடவே ஒரு 'கட்லொக்' தருகிறார்கள்.

அதனை எப்படி இயக்குவது, உள்ளே என்னவெல்லாம் இருக்கின்றன- என்ற விபரமெல்லாம் அந்த 'கட்லொக்'கில் இருக்கிறது.

திருவள்ளுவர் தந்துவிட்டுப்போன திருக்குறள் இருக்கிறதே அதுவும் 'கட்லொக்' மாதிரி நமக்கு கைகொடுத்து காரியம் யாவிலும் கூடவரும்.

யாரோடு நட்பு கொள்ள வேண்டும்; யாரோடு நட்புக்கொள்ளக்கூடாது என்று விசாரித்துக்கொண்டிருப்பவர்கள் வேறெங்கும் போக வேண்டாம்.

கையில் ஒரு திருக்குறள் எடுத்துக் கொள்ளுங்கள்.

அருமையான அனுபவங்களை திரட்டி சாறு பிழிந்து குறளாகத் தந்திருக்கிறார் நம் முன்னவர் -சகலகலாவல்லவர்- திருவள்ளுவர்.

நீ செய்வதை எல்லாம் நல்லதே என்று பாராட்டிக் கொண்டிருப்பவர்களிடம் விழிப்பாக இருக்க வேண்டும்.

உன் முகம் மலர்ந்தேயிருக்க வேண்டும் என்பதற்காக மனதாரப் பாராட்டுவதுபோல் அவர்கள் நடித்துக் கொண்டிருப்பார்கள்.

அரசியலில் இதற்கு நிறைய உதாரணங்களை அனைவரும் அறிந்திருக்க முடியும்.

அதிகார பலம் உள்ள தலைவரை நான் நீ என்று போட்டி போட்டுக் கொண்டு புகழ்ந்து கொண்டிருப்பார்கள்.

அதிகாரபலம் ஆட்டம் காண்கிறது என்றால் எதிர்பக்கத்தில் போய் நின்று "நான் அன்றே சொன்னேன் அவர் கேட்கவில்லை" என்பார்கள்.

"கொள்கை முரண்பாடு அதுதான் அவர் கோட்டையை விட்டு வெளியே வந்துவிட்டேன்" என்றும் கூறிக்கொண்டிருப்பார்கள்.

அந்தத் தலைவரின் தவறுக்கு இவர்களும்தான் காரணம் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அவர் தவறு செய்யும் போதெல்லாம் தட்டிக்கொடுத்து உச்சி குளிர உதடு திறந்து பாராட்டியவர்கள் யாரோ அவர்கள் எல்லாம் தவறுக்கு காரணமானவர்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

கொலை செய்தவனைவிட கொலைக்கு தூபமிட்டவனும், கூட இருந்து துணை செய்தவனும்தான் கூடுதலாக தண்டிக்கப் பட வேண்டும்.

பலம் உள்ளபோது பாராட்டிக் கொண்டிருப்பவன் உள்ளத்தில் கள்ளம்தான் நிறைந்திருக்கும்.

அவனுக்கு முகம் மலர பேசத் தெரியலாம். ஆனால், நெஞ்சம் மலர நட்பு என்னும் சூரிய ஒளி கொடுக்க ஒருபோதும் முடியாது.

அதனைத்தான் திருவள்ளுவர் திட்டவட்டமாகத் தெளிவித்தார்:

"முக நக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அக நக நட்பது நட்பு"

கள்ளமான உள்ளம் உள்ளவன் உன்னை தற்காலிகமாக சிரிக்க வைக்கலாம்.

அது வாடகை கொடுத்து வாங்கிக் கொள்ளும் உடல் சுகத்தை ஒத்ததாக இருக்கும்.

கலவி நிறைவாக இருக்க வேண்டுமானால் உடல்கள் மட்டுமல்ல உள்ளங்களும் ஒன்று சேர வேண்டும்.

நட்பு என்னும் உறவு செழிக்க வேண்டுமானால் உள்ளங்களில் ஒத்த உணர்ச்சி இருக்க வேண்டும்.

ஒத்த உணர்ச்சி என்று சொல்லும் போது நூற்றுக்கு நூறு என்று எண்ணி விடக்கூடாது.

குறைந்த பட்சம் எழுபது வீதமாவது ஒத்த உணர்ச்சி உள்ளவர்கள்தான் நீடித்த நட்பை நிலை நிறுத்த முடியும்.

அதற்காக காகம் வெள்ளை நிறம் என்று நீ சொன்னால் அதனை அடுத்த பேச்சே இல்லாமல் அங்கீகரிப்பதுதான் ஒத்த உணர்ச்சி என்று எண்ணிவிடக் கூடாது.

அப்படி அங்கீகரிப்பவர்களும் ஆங்காங்கே அறிமுகமாகிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

அவர்களுக்கு தெரியும் காகம் கறுப்பு நிறம் என்று.

உண்மையைச் சொன்னால் உன் முகம் சுருங்கிவிடும் என்று உனக்கு 'ஆமாம்' போட்டுக் கொண்டிருப்பார்கள்.

உன் முதுகுக்குப் பின்னால் உன் தவறான கணிப்பைச் சொல்லி சிரித்துக் கொண்டிருப்பார்கள்.

உன்னை சுலபமாக ஏமாற்ற முடியும் என்றும் தம் மனதில் கணக்குப் போட்டு விடுவார்கள்.

ஆகவேதான் முகம் மலர உதட்டு மொழி சிந்துவது மட்டுமே உயர்ந்த உள்ளத்திற்கு உதாரணம் என்று நினைத்துவிடக்கூடாது.

உள்ளத்தில் ஒத்த உணர்ச்சியுள்ளவனுக்கு உன் பலமும் தெரியும். பலவீனமும் புரியும்.

உன்னிடம் உன் பலவீனம் சொல்லி அதனைக் களையும் அவசியம் சொல்லுவான்.

உன் விரோதியிடம் உன் பலவீனம் மறைத்து, உன் பலம் மட்டுமே சொல்லுவான்.

உன்னைப் பற்றி உன்னிடம் உயர்வாக சொல்பவனை விட,

நீ இல்லாத இடத்தில் உன்னைப்பற்றி பிறரிடம் பெருமையாகச் சொல்பவனை நம்பலாம். நம்பு!

குறைகளைச் சுட்டிக்காட்டும்போது உனக்கு கோபம் வரும் என்றால், நாடக மனிதர்களே உனக்கு நட்பாகக் கிடைப்பார்கள்.

தவறு விட்டுக்கொண்டிருக்கும்போது சுட்டிக்காட்டுபவன் நீ கீழே விழுந்து விடும் போதும் எழுந்து கொள்ள இயன்றது செய்வான்.

தவறு விடும்போது அது தவறு என்று தெரிந்தும் கை தட்டியும் முதுகில் தட்டியும் வாழ்த்திக்கொண்டிருப்பவன்-

நீ வழுக்கி விழும்போது வாரிச் சுருட்டிக்கொண்டு வாலை நீட்டிவிடுவான்.

போற்றுகின்றவன் எல்லாம் புனிதமானவனும் அல்ல, தூற்றுகின்றவன் எல்லாம் துரோகியும் அல்ல.

(மறுவாரமும் சிந்திக்கலாம்)


## கையெழுத்தும்...... தலையெழுத்தும்!

ஒருவருடைய கையெழுத்தைப் பார்த்து அவரது குணத்தைக் கூறமுடியுமா? 'கி' என்ற எழுத்தைப் போடும் விதத்திலிருந்து அவரது சுபாவத்தைக் கணித்துவிடலாம்.




'க'வில் ஒட்டாமல் தனியே நுனியில் தொடங்கி அடிமட்டம் வரை இழுப்பவர்-

விசுவாமித்திரர். நண்பர்களுக்குச் செலவழித்து கடனாளியாவார். கவிதைப் பிரியர். மரியாதை விரும்பி. கஷ்டம் தாங்காதவர். பக்தர்.




'க'வின் நுனியில் தொடங்கி நடுப்பக்கமாக இழுத்துச் சென்று கச்சிதமாக வளைத்து அடிவரை கொண்டு நிறுத்துபவர்-

அறிவுக் கூர்மை, சிக்கனம், சுத்தம், கச்சிதம், வயதுக்கு மீறிய அறிவு முதிர்ச்சி, சற்றே படபடப்பான சுபாவம். கணக்கு வழக்குகளில் கறார்.



கூட்டெழுத்தாக 'க'வின் சுழியில் இருந்தே தொடங்கி மேலே இழுத்து வீசிவிடுபவர்-

புரளி, கோள் முதலியவற்றை அக்கணமே கண்டிப்பவர். பிறர் இழைத்த தீங்கை மௌனமாகச் சகித்துக்கொள்பவர். குடும்ப பாசம் மிகுந்தவர். புதிய தலைமை அல்லது விந்தைகளை அறியத் துடிப்பவர். பிரயாண விரும்பி.



'க'வின் நுனியில் ஆரம்பித்து சுருங்கிய அளவில் மேலேயே கொக்கி போல் வளைத்து விடுபவர்-

படபடப்பு மிகுதி, உணர்ச்சிவசப்படுபவர். இரகசியமாகத் தவறு செய்தால் பாவம் இல்லை என்று நினைப்பவர்.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# எழுதுவது ரசிகன்

"கண்ணில் வைத்து இமைகள் மூடி
காவல் காத்திருப்பேன்-எதிர்
காலமெல்லாம் கைதிபோலே
கருத்தில் வைத்திருப்பேன்..."
-கவியரசு கண்ணதாசன்-

சூர்யா கதிரை தள்ளி எழுந்துகொள்ள அவள் முகத்தில் பளீர் மின்னலாய் கோபம் தெரிந்தது.

அவள் கோபம் இரசித்து, அமைதியாய் இருந்து அவள் முகத்தையே ஊடுருவிப் பார்த்துக்கொண்டிருந்தார் டி.ஐ.ஜி டென்சில்.

பொலிஸ் துறையில் உள்ளவர்களுக்கு உளவறிய மட்டுமல்ல, உளவியலும் தெரிந்திருக்க வேண்டும்.

எதிரே உள்ளவரின் முகபாவம் வைத்து அவர் பெயரை சந்தேகப்பட்டியலில் வைத்திருக்க வேண்டுமா அல்லது [illegible] அழித்துவிடுவதா என்ற தீர்மானிக்க வேண்டும்.

[illegible]

நல்ல பாம்பும் கொத்தும். பழி தீர்க்கும். [illegible]

[illegible]

டென்சில் தன் உதடுகளில் ஒரு நிமிஷம் புன்னகை காட்டிவிட்டு, அமைதியான குரலில்,

"பெற்றவளுக்குத்தான் பிரசவ வலி தெரியும் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். [illegible] அடுத்தவர் [illegible] உணர்ந்து அங்கீகரிக்க முடியும் என்று நினைக்கிறேன். இல்லை [illegible] மிஸ் சூர்யா?"

[illegible]

குத்திக்கொள்ளலாம்."

மூச்சுவிடாமல் பேசினாள். மார்புகள் எழுந்து துடித்து அடங்கி உள்ளே கொந்தளிக்கும் உணர்ச்சி சொல்லின. டி.ஐ.ஜி கோபப்படவில்லை. அவள் உணர்ச்சி புரிந்து உள்ளே பரிவு வந்தது. நெஞ்சில் உள்ளதை நேராகச் சொல்லும் அவள் துணிச்சல் மனசில் வியப்பு விதைத்தது.

"நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா மிஸ் சூர்யா? எழுந்து நின்று கோபப்பட்டது போதுமே பிளீஸ் சிட்டவுன்."

பொத்தென்று கதிரையில் அமர்ந்து,

"என்ன கேள்வியென்றாள்?"

மேசையில் கிடந்த தாள்களை ஒழுங்குபடுத்தி அடுக்கி, பேப்பர் வெயிட்டால் பாரம் வைத்துக்கொண்டு,

"தன்னைக் கொல்லவரும் பசுவையும் கொல்லலாம் என்று காந்தி சொல்லியிருக்கிறார். அதே காந்திதான் பசுவதை வேண்டாம் என்றும் சொல்லியிருக்கிறார். என்ன நினைக்கிறாய்?"

ஏன் இந்தக் கேள்வி? என்பதுபோல அவர் விழிகளை ஊடுருவிப் பார்த்தாள். [illegible] தயாராய் வைத்திருந்தது போல உடனே பதில் சொன்னாள்,

"மனித உயிரின் பெறுமதி மகாத்மாவுக்கு தெரிந்திருக்கிறது."

பிடிகொடாத பதிலாகத் தெரிந்தது. டென்சில் தனக்குள் சிரித்துக்கொண்டார்.

"மனிதர்களுக்குள் கூட மிருகங்கள் உண்டல்லவா சூர்யா? மனதில் வக்கிரம் நிறைத்து, வசீகரங்களை அழித்துவிடும். செயல்கள் புரிந்து, சட்டத்தையும், சமூகத்தையும் ஏமாற்றி கண்ணாம்மூச்சி விளையாடும் நபர்கள் இருக்கிறார்கள் அல்லவா? அவர்களை என்ன செய்யலாம்?"

டி.ஐ.ஜி கேட்க, சூர்யா அவரை ஆழமாகப் பார்த்தாள். நீண்ட ஆவேசத்தின்பின் இப்போது முதற் தடவையாக புன் சிரித்தாள்.

"காக்கி உடையில் இருந்து கொண்டு இப்படியொரு கேள்வி எதற்காக டி.ஐ.ஜி?"

"எங்கள் கைகளும் சமயங்களில் கண்ணுக்குத் தெரியாத கயிறுகளால் கட்டப்படுவதுண்டு சூர்யா."

சூர்யா மீண்டும் புன்சிரித்து,

"இப்போது உங்கள் கரம் எந்த நிலையில் இருக்கிறது டி.ஐ.ஜி?"

டென்சில் சிரித்து, இரு கைகளையும் அவள் முகம் எதிரே வீசிக்காட்டி,

"படு சுதந்திரம்."

என்று சொல்ல, மேசையின் மீதிருந்த தொலைபேசி அழைப்பு விடுத்தது.

"ஹலோ டி.ஐ.ஜி. ஹியர்."

"நலமா டி.ஐ.ஜி? பேசிக்கொண்டு பல நாட்களாகிவிட்டன. இடையில் ஏற்பட்ட தடங்கலுக்கு முதலில் மன்னிப்பு வேண்டும்."

டி.ஐ.ஜியின் முகம் மாறியதை சூர்யா கவனித்தாள்.

மறுமுனையில் பேசியது பரிச்சயமான குரல். முன்னர் தகவல் தந்த அதே பெண் குரல். டி.ஐ.ஜி உஷாராகி,

"என்ன மீண்டும் ஒரு கொலையா?" என்றார்.

மறுமுனையில் பெண் குரல் 'களுக்' என்று சிரித்துவிட்டு,

"கொலையல்ல டி.ஐ.ஜி. எங்கே வீசப்பட வேண்டும் வலை என்ற தகவல் வைத்திருக்கிறேன். ஆனால் இதற்கு ஒரு விலை வேண்டும். தருவீர்களா?"

"விலையா?"

"யெஸ். உங்களால் மட்டுமே தரமுடியும். கேட்டால் மறுக்கக்கூடாது. மறுத்தால் என் தகவல் கிடைக்காது. என்ன ஓ.கேயா?"

டி.ஐ.ஜி ஒரு நொடி. யோசித்து,

"ஓ.கே.சொல்."

மறுமுனை சொன்ன விலை வித்தியாசமாக இருக்க, சிலையானார் டி.ஐ.ஜி.

■

ராகவன் கத்தியை வெளியே எடுத்து அதன் பளபளப்பை இருபுறமும் திருப்பிப் பார்த்துக்கொள்ள-

அவனை நெருங்கிவந்த ஜவாஹர்;

"ராகவன் என்ன இது? எதற்காக இதன் அவசியம் வந்தது?"

ராகவன் ஜவாஹரைப் பார்த்து அலட்சியமாய் சிரித்தான்.

"என் அண்ணாவைக் கொன்றவனை நரகத்துக்கு அனுப்ப வேண்டாமா? அதற்குத்தான்."

"யர் கொன்றது? நிம்மி இதென்ன இது ?ராகவன் சொல்வது உண்மைதானா?"

நிர்மலா பதில் சொல்லாமல் ராகவனின் கையில் இருந்து கத்தியையே பயத்தோடு பார்த்துக்கொண்டிருந்தாள். ஜவாஹர் நிர்மலாவின் அருகில் வந்து அவள் தோளில் கைவைத்து உலுக்கினான்.

"நிம்மி சொல்லு நிம்மி. கேசவனை கொன்றது யார் என்று உனக்குத் தெரியுமா?"

மறு நொடியே முகத்தை தன் இரு கரங்களாலும் பொத்திக்கொண்டு அழத் தொடங்கினாள் நிர்மலா.

ராகவன் அவளை நெருங்கிவந்து குரலை உயர்த்திச் சொன்னான்;

"நிம்மி! என் கத்திக்கு தேவை உன் கண்ணீரல்ல. கச்சிதமான பதில். எதிரியின் இரத்தம்."

நிர்மலா கண்ணீரோடு அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஒரு முடிவுக்கு வந்தது போல தன் இடது கரத்தால் கண்ணீரைத் துடைத்தபடி, ராகவனுக்கு அருகில் வந்து அவன் கையைப் பிடித்தாள்.

"வா...ராகவன்..நான் காட்டுகிறேன் வா,"



அங்கம் 15

# கொலை விழும் நேரம்

என்றாள் குரலில் உறுதி தெரிய. ஜவாஹர் இருவரையும் குழப்பமான முகத்தோடு கவனித்துக்கொண்டிருந்தான்.

கத்தியை மீண்டும் தன் இடுப்பில் பத்திரப்படுத்திக்கொண்ட ராகவன்,

"ஜவாஹர் உன் பைக் சாவியைக் கொடு. வந்து தருகிறேன்."

ஜவாஹர் தயங்க,

"பயப்படாதே; இப்போது நான் கொலை செய்யப் போவதில்லை. முதலில் ஆள் யாரென்று அறிய வேண்டும். அடுத்த கட்டம்தான் கத்திக்கு தீனி. அதற்கு முன் உன் பைக் உன்னிடம் வந்துவிடும்."

ஜவாஹர் தயக்கம் மாறாமல், மறுக்கவும் முடியாமல், தன் ஜீன்ஸ் பொக்கற்றுக்குள் இருந்து சாவி எடுத்து நீட்டினான்.

ராகவனின் வயிற்றில் கைகளால் பிடித்தபடி அவன் முதுகில் அட்டையாக நிர்மலா ஒட்டியிருக்க, அவள் மார்புகள் தந்த மென்மையைக்கூட இரசிக்க முடியாத மனநிலையில் மோட்டார் சைக்கிளை வேகமாக்கிக் கொண்டிருந்தான்.

நில் என்று சிகப்பாய் சிக்னல் எரிய பைக்கை மஞ்சள் கோட்டின் முன்னால் நிறுத்தினான்.

அப்போதுதான் நிர்மலா தம் அருகில் வந்து சிக்னலுக்காக காத்திருக்கும் பொலிஸ் ஜீப்பை கவனித்தாள்.

பொலிஸ் ஜீப்பில் சாரதி ஆசனம் அருகே முன்னால் அமர்ந்திருந்த குலாம்ஷாவும் திரும்பி நிர்மலாவை பார்த்தார்.

காதல் ஜோடிகள் என்று நினைத்துக் கொண்டு முகத்தை திருப்ப நினைத்தவருக்கு ஏதோ உறுத்தலாய் தெரிய,

நிர்மலாவின் கழுத்துக்குக் கீழே பட்டன் போடப்படாமல் இருந்த சட்டை விலகியிருப்பது விழிகளுக்குள் பதிவாக,

பார்வையை கூர்மையாக்கி அலச,

சட்டையின் மேல் பட்டன் மட்டும் இல்லை என்பது நிச்சயமாய் தெரிந்தது.

குலாம்ஷாவின் விழிகள் தன் மார்பின்மேல் மொய்ப்பது புரிந்து சபலமோ என்று முதலில் நினைத்தாள் நிர்மலா.

நினைத்துக்கொண்டே குலாம்ஷாவை நோக்கி மீண்டும் பார்த்தவள் அவர் பார்வையில் வித்தியாசம் உணர்ந்தாள்.

குலாம்ஷா நிர்மலாவை எக்ஸ்ரே பார்வையால் துருவ,

'இவளிடம் ஏதோ ஒரு தவறு இருக்கிறது. கவனி! விடாதே!' என்று மூளையில் சிகப்பு விளக்கு எரிந்தது.

தெருச் சிக்னல் போகலாம் என்று பச்சையாய் சிரிக்க, பைக்கை உசுப்பி வேகம் உயர்த்தினான் ராகவன்.

'ராகவன்' என்று கூப்பிட்டாள் நிர்மலா.

வேகமும், இரைச்சலும் பின்னால் இருந்து அவள் அழைத்ததை கேட்காமல் செய்ய,

கோபத்தில் இருக்கிறான் என்று நினைத்த நிர்மலா, மீண்டும் அவனை அழைக்க நினைக்காமல், பொலிஸ் ஜீப்பில் இருந்து சந்தேகப் பார்வை கண்டது சொல்லாமல், பின்னால் திரும்பிப் பார்த்தாள்.

பொலிஸ் ஜிப்பை காணவில்லை. கார்கள் மட்டுமே வந்துகொண்டிருந்தன.

தேவையில்லாத பயம் என்று நினைத்துக் கொண்ட நிர்மலா பின்புறம் திரும்பிப் பார்த்தாள். ஜீப் தொடரவில்லை.நிம்மதியாக பெருமூச்சுவிட,

ராகவன் முதுகில் அழுத்திக் கொண்டிருந்த அவள் மார்புகள் அவனுக்குள் தமது அசைவுகள் சொல்லின.

■

ராகவனும், நிர்மலாவும் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை தொடர்ந்து கொண்டிருந்த காரை பிரியா செலுத்திக் கொண்டிருந்தாள். அருகில் குலாம்ஷா இருந்து,

"நீயும் ஜீப்புக்கு பின்னால் காரில் வந்தது உதவியாகிவிட்டது பிரியா,"

என்றார். அவரை திரும்பிப் பார்த்துவிட்டு, வீதியில், கவனம் வைத்தபடி,

"உங்களுக்கு உதவி செய்யக்கூடாது என்றுதான் முடிவு. இதுதான் உதவி செய்வதில் கடைசித்தடவை."

"கோபமா பிரியா?"

"உதவிக்கு வந்தவர்களையே சந்தேகப் பார்வையால் உரித்து விடுவது எனக்குப் பிடிக்கவில்லை"

"ஓ.கே ஓ.கே. உன் பெயரில் இரண்டு கார் உன் அப்பா வாங்கிவிட்டது தெரியாது. அதில் ஒரு கார் தொலைந்துவிட்டதாக உன் அப்பா இரண்டு நாட்களுக்கு முன்னரே புகார் கொடுத்ததும் எனக்குத் தெரியாது."

"எனக்கும் தெரியாது."

"என்ன தெரியாது?"

"அந்த கார் காணாமல் போனது. எத்தனை நாட்களுக்கு முன்னர் அப்பா புகார் கொடுத்தார் என்று சொன்னீர்கள்?"

"இரண்டு நாட்கள் முன்பு."

குலாம்ஷா சொல்ல பிரியாவின் கால்கள் அவள் அனுமதி இன்றியே பிரேக்கை அழுத்தின. சடுதியான பிரேக்கில் குலுங்கி நின்றது கார். புரியாமல் பிரியாவைப் பார்த்த குலாம்ஷா;

"ஏன் காரை நிறுத்தினாய் பிரியா?"

பின்னால் வந்த வாகனங்கள் பொறுமை தொலைத்து 'ஹோர்ன்' அடித்து கோபம் தெரிவிக்க,

"காரை எடு. போய்க்கொண்டே பேசலாம்."

காரை இயக்கிக்கொண்டு பிரியா சந்தேகமான குரலில் கேட்டாள்;

"நிச்சயமாக தெரியுமா ஷா புகார் தந்தது இரண்டு நாட்களுக்கு முன்னர் என்று?"

"நூறுவீத நிச்சயமாக. சரி ஏன் கேட்கிறாய்?"

பிரியா...வீதியைப் பார்த்துக்கொண்டு, இடையில் ஏற்பட்ட அதிர்ச்சியில் காரை நிறுத்தியதில் ராகவனும் நிர்மலாவும் சென்ற மோட்டார் சைக்கிள் பார்வையில் இருந்து மறைந்துவிட்டதை நினைத்து வருந்திக்கொண்டு,

"சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள் குலாம்ஷா."

"ஏற்கனவே அவர்கள் தப்பியாகி விட்டது. சொல்வதையென்றாலும் தாமதிக்காமல் சொல் பிரியா?"

"இன்று காலையில் அந்தக் கார்..."

"அந்தக் கார்."

"எங்கள் வீட்டில் நின்றதை என் கண்ணால் பார்த்தேன் ஷா."

"என்ன? உண்மைதானா?"

"கலப்படமில்லாத உண்மை."


குலாம்ஷா உடனே சொன்னார்,

"பிரியா காரை உன் வீட்டுக்கு செலுத்து!"


பிரியா செலுத்தினாள். அங்கு காத்திருக்கும் அதிர்ச்சி தெரியாமல்!

(இன்னும் வரும்)


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: க. பத்மநாதன்
முகவரி: இம்புல்பிட்டிய கீழ்ப் பிரிவு, நாவலப்பிட்டி.
பொழுதுபோக்கு: கதைப்புத்தகம் வாசித்தல், பாடல்கள் கேட்டல், ரீ.வி. பார்த்தல், கிரிக்கெட் விளையாடுதல்.



பெயர்: எம்.எம். நளீர் சர்தாரி
வயது: 17
முகவரி: 'நளீர் மன்ஸில்' சாவியா ரோட், தர்ஹா நகர்.
பொழுதுபோக்கு: கவிதை எழுதுதல், விளையாட்டு, கர்நாடக இசை கேட்டல்.



பெயர்: யக்கோபு சாந்தினி
வயது: 19
முகவரி: தெற்கிலுப்பைக் குளம், வவுனியா.
பொழுதுபோக்கு: வழமையானவை.



பெயர்: எச். சித்தி பாத்துமா
வயது: 20
முகவரி: 1156/10, கந்தளாய், முள்ளிப்பொத்தானை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.



பெயர்: ராஜ்
வயது: 22
முகவரி: P.O.BOX-86411, RIYADH 11612, K.S.A.
பொழுதுபோக்கு: கிரிக்கெட் விளையாடுதல், சினிமா பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.



பெயர்: எஸ்.எச். ஜிப்ரி
வயது: 27
முகவரி: P.O.BOX- 28878 SAFAT, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை பார்த்தல், பேனா நண்பர் தொடர்பு.

பெயர்: வீ.யோகன்
முகவரி: P.O.BOX-87032, 2942, FINCH AVE EAST, SCARBOROUGH (ONT) MIW 3 Z I CANADA.
பொ.போக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல்.

பெயர்: நிஸார் எம். ரஷீத்
வயது: 19
முகவரி: 125, பஸார் வீதி, சிலாபம்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல்.

பெயர்: த. தாசன்
வயது: 23
முகவரி: புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
பொ.போ: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்.

பெயர்: அனீஸ் எம். ஷாகிர்
வயது: 22
முகவரி: 65/1, கும்புகந்துறை, தெல்தெனிய, கண்டி.
பொ.போ: பத்திரிகை, புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர்: ஆர். ராஜா
வயது: 24
முகவரி: 74/4, லாசரஸ் றோட், நீர்கொழும்பு.
பொ.போ: பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

பெயர்: ஏ.ஏ.எம். புர்கான்
வயது: 20.
முகவரி: 352, மோதர வீதி, கொழும்பு-15.
பொழுதுபோக்கு: ரீ.வி.பார்த்தல், வானொலி கேட்டல், உதைபந்து விளையாடுதல்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# வெள்ளைப்புறா ஒன்று

கவிப்பிரியா நிஷா

> எனக்காக உயிரை விடுவேன் என்று சொன்னீங்களே– நான் உயிரைக் கேட்கல. என் தோழிக்கு வாழ்வு கொடுங்க என்று தானே கேட்கிறேன்.

தோழி அருணாவை நினைக்க விஜிக்கு அழுகை அழுகையாக வந்தது. இந்தச் சின்ன வயதிலேயே அருணா விதவையாகிவிட்டதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. கலர் கலரான ஆடைகளில் வண்ணத்துப் பூச்சியாக வலம் வந்து கொண்டிருந்த தன் தோழி, வெள்ளைப் புடவையில் ஒரு வெள்ளைப் புறாவாக வலம் வருவதை அவளால் தாங்க முடியவில்லை. தோழியின் நிலையை எண்ணி விஜி கலங்கிப்போனாள்.



அருணாவின் இந்நிலைக்கு தானும் ஒரு காரணம் என்ற எண்ணம் அவளை அணுஅணுவாக சித்திரவதை செய்தது. திருமணம் வேண்டாமென கூறிய அருணாவை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தவளே விஜிதான்! அன்று அவளை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்திருக்கா விட்டால் இன்று அவள் விதவையாகி இருக்க நேரிட்டிருக்காதே என்ற எண்ணமே விஜியை அணுஅணுவாக சித்திரவதை செய்தது. அருணாவை திருமணத்திற்கு சம்மதிக்க வைத்த நாள் அவள் கண் முன்னே நிழலாடியது.

◻◻◻

"ஏய் அருணா. நான் கேள்விப்பட்டதெல்லாம் உண்மையா?"

"என்னடி கேள்விப்பட்டே?"

"கல்யாணம் வேணாம்னு சொன்னியாமே?"

"ஆமாண்டி சொன்னேன்தான்."

"ஏண்டி அப்படிச் சொன்னே? இந்தக் கல்யாணத்தில உனக்கு இஷ்டமில்லியா?"

"ஐயோ விஜி. நீகூட என்னை புரிஞ்சிக்க மாட்டேங்கிறியே!"

"என்னடி சொல்றே?"

"விஜி எனக்கு இப்போதானே பதினெட்டு வயது. அதோட நான் இன்னும் படிப்பையே முடிக்கல. அதனாலதான் இப்போதைக்கு கல்யாணம் வேணாங்கிறேன்."

"அருணா உன்னோட மனநிலை எனக்குப் புரியுதுடி. இருந்தாலும் என்ன பண்ணுறது. உன் அம்மாவின் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறது உன்னோட கடமை இல்லியா?"

"நானென்ன கல்யாணமே வேணாம்னா சொல்றேன். இல்லியே! இன்னும் சில வருஷங்களில ஐமீன் என்னோட படிப்பு முடிஞ்சதுக்கு அப்புறமா கல்யாணம் பண்ணிக்கிறேன்னுதானே சொல்றேன்."

"அதுவரைக்கும் உங்கம்மா உயிரோட இருப்பாங்கன்னு நீ நம்புவியா அருணா?"

"விஜி."

அவளது கண்கள் கலங்கிப் போயின. இதை அவதானித்த விஜி அவளது தோள்களைப் பற்றினாள்.

"அருணா அழாதேடி. உங்கம்மாவோட நிலையை நான் சொல்லித்தான் நீ தெரிஞ்சிக்கணும் என்கிற அவசியமில்ல. ஏன்னா அவங்க நிலமை உனக்கு நல்லாவே தெரியும். இண்ணைக்கோ நாளைக்கோன்னு சாவை எதிர்பார்த்துக்கிட்டு இருக்கிற உங்கம்மா உனக்கு கல்யாணம் பண்ணிப் பார்க்கணும்னு ஆசைப்படுறாங்க. அவங்கட இந்த ஆசையை நீதானேடி நிறைவேற்றி வைக்கணும்."

"அப்படின்னா... என்னோட படிப்பை நிறுத்துவிட்டு நான் கல்யாணம் பண்ணிக்கத்தான் வேணுமா? இதைத் தவிர வேற வழியே இல்லியா?"

"நிச்சயமா வேற வழி இல்லடி. பாவம் உங்கம்மா அப்பா இல்லாத உன்னை வளர்த்து ஆளாக்க எந்தளவுக்கு கஷ்டப்பட்டாங்கன்னு இந்த ஊர் சனங்களே சொல்லுவாங்கடி. அப்படிப்பட்ட புண்ணியவதியான உங்கம்மாவோட இந்தக் கடைசி ஆசையை தயவு செய்து நிறைவேற்றிவை. உன் காலைப் பிடிச்சிக் கெஞ்சிக் கேட்கிறேன். ப்ளீஸ் அருணா."

"விஜி. எங்கம்மா மேல நான் உயிரையே வைச்சிருக்கேன். என்னோட சுயநலத்திற்காக அவங்களோட ஆசையை புறக்கணிக்கிறது எவ்வளவு பெரிய தப்புன்னு எனக்குப் புரியுதடி. அம்மாவோட ஆசையை நிறைவேற்றல்லன்னா அப்புறம் நான் அவங்களுக்குப் பிள்ளையா பொறந்ததில அர்த்தமே இல்லாம போயிரும்."

"அப்படின்னா கல்யாணத்திற்கு சம்மதம்னு சொல்றியா?"

"ம்..."

"ரியலி... இப்போதான் எனக்கு ஹெப்பியா இருக்குதடி. இந்த சந்தோஷமான விஷயத்தை முதல்ல உங்கம்மாகிட்டதான் சொல்லணும். ஏன்னா இந்த விஷயம் என்னைவிட உங்கம்மாவுக்குத்தான் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும் யா!"

ஒரே பாய்ச்சலில் அருணாவின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வீடு நோக்கி விரைந்தாள் விஜி.

◻◻◻

கண்களில் நிரம்பி இருந்த கண்ணீர் தரையில் பட்டுத் தெறிக்க, பட்டமரமாகி விட்ட தோழியின் வாழ்க்கையை எண்ணி மனமுருகிப் போனாள் விஜி. அவளால் பொங்கி வந்த அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை. ஓவென்று அழுதாள்.

சற்று நேரம்வரை அழுதுகொண்டிருந்தவள் சில வினாடிகளில் அப்படியே உறங்கிப்போனாள்.

பெற்ற தாயின் விருப்பத்திற்காக, அவளின் ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக திருமணம் செய்து கொண்ட அருணா, திருமணமான ஆறு மாதங்களிலேயே கணவனை இழந்து விட்டது பரிதாபத்திற்குரிய விடயம்தான்! ஒரு பெண் திருமணமாகி ஆறு மாதங்களிலேயே கணவனை இழந்து விதவையாகி விடுவதென்றால் அதைவிட கொடுமை வேறு என்ன இருக்கிறது? அதிலும் இந்தச் சமுதாயம் அவளை ஒரு விதவை என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது அதை அவளால் எவ்வாறு ஜீரணித்துக்கொள்ள முடியும்?

◻◻◻

"என்ன விஜி வந்ததில இருந்து ஒரு மாதிரியா இருக்கே?"

"...."

"என்னோட இந்தக் கோலத்தைப் பார்க்க உனக்கு பரிதாபமா இருக்கா? டோன்ட் வொறி. இது என்னோட விதி. நீ எதுக்கு கவலைப்படுறே?"

"நோ அருணா. இதுக்கு நானும் ஒரு காரணம் ஆகிட்டேன் பாரு. அதை நினைக்கிறப்போதான் இதயமே வெடிச்சி விடும் போலிருக்குடி."

விஜி விசும்பினாள்.

"பைத்தியம். என்னோட தலையெழுத்து அப்படி அமைஞ்சு இருக்கு. அதுக்கு நீ என்னடி பண்ணுவே?"

"இல்லடி அண்ணைக்கு உன்னை கல்யாணத்திற்கு சம்மதிக்க வைச்சதால தானே இண்ணைக்கு..." தொடர்ந்து பேச முடியாமல் விசும்பியவளை சமாதானப்படுத்தினாள் அருணா. தன்மீது அளவு கடந்த அன்பு வைத்துள்ள தோழியை நினைக்க அவள் மனதிற்கு சற்று இதமாக இருந்தது. இன்பம் துன்பம் இரண்டிலும் பங்கு கொள்பவள்தானே உண்மையான தோழி. அத்தகைய தோழி தனக்கு கிடைத்திருப்பதை யிட்டு அருணா உளம் குளிர்ந்தாள்.

◻◻◻

"ஹேய் விஜி. எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்த யோசனை?"

"ஓஹ்.. விக்ரம். இப்போதான் வந்தீங்களா?"

"ஹூம் நான் வந்து பத்து நிமிஷமாச்சு."

"ஸாரி விக்ரம்."

"ஆமா நான் வந்ததைக்கூட கவனிக்காம அப்படி என்ன யோசிச்சிக்கிட்டு இருந்தே. நம்ம கல்யாணத்தைப் பற்றியா?"

"உங்களுக்கு எப்பவுமே கிண்டல்தான்."

"சரி.சரி கோவிச்சிக்காத. நீ அப்படி என்ன யோசிச்சிக்கிட்டு இருந்தேன்னு எனக்கும் கொஞ்சம் சொல்லேன்?"

"இப்போ என்னோட யோசனையெல்லாம் அருணாவைப்பற்றியதுதான்! பாவம் அவ. நல்ல மனசுகொண்ட அவளுக்கு இப்படியொரு நிலமை வந்திருக்க வேணாம். இறைவன் அவளுக்கு இந்தளவுக்கு துயரமான நிலையை கொடுத்திருக்கக்கூடாது. அவ சுமங்கலியா இருக்கிறதைப் பார்க்க எனக்கு கஷ்டமா இருக்கு விக்ரம்."

"விஜி. அவளோட நிலையை நினைக்க எனக்கும் மனசுக்கு கஷ்டமாகத்தான் இருக்கு. பட் என்ன பண்ணுறது. அது அவளோட விதின்னு இருக்க வேண்டியதுதான்."

"என்னால அப்படி இருக்க முடியலியே! நான் அவமேல நிறைய அன்பு வைச்சிருக்கேன். அவளுக்கு ஒரு சின்ன துன்பம் என்றாலும்கூட என்னால தாங்க முடியாது. அப்படி இருக்க என்னால இதை எப்படி விக்ரம் தாங்க முடியும்?"

கவலையோடு கூறியவள் விக்ரமை ஏற இறங்க பார்த்தாள்.

"விக்ரம். நீங்க என்மேல அன்பு வைச்சிருக்கிறீங்களா?"

"என்ன கேள்வி இது?"

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்களேன்."

"நிறைய அன்பு வைச்சிருக்கேன். உனக்காக என் உயிரைக்கூட தர தயங்க மாட்டேன் போதுமா?"

"அப்படின்னா நான் என்ன சொன்னாலும் செய்வீங்களா?"

"நிச்சயமா!"

"ப்ரொமிஸ் பண்ணுங்க."

"ப்ரொமிஸ்."

"நீங்க அருணாவைக் கல்யாணம் பண்ணிக்கணும்."

"விஜி....." அவன் சூழலையும் மறந்து சப்தமிட்டான்.

"விக்ரம். முடியாதுன்னு மட்டும் சொல்லிடாதீங்க. என் தோழிக்கு வாழ்வு கொடுங்க ப்ளீஸ்."

"என்ன உளர்றே? உன்னை விட்டுட்டு இன்னொருத்தியை கல்யாணம் பண்ணிக்கிறதா...? இதுக்கு நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். என்னை மன்னிச்சிடு விஜி."

"ஏன் விக்ரம் சம்மதிக்க மாட்டேங்கிறீங்க? அவ ஒரு விதவை என்கிறதாலயா?"

"நோ.நோ அப்படியெல்லாம் எதுவுமில்ல. உன்னை உயிருக்குயிரா நேசிச்சிட்டு நான் எப்படி விஜி அருணாவைக் கல்யாணம் பண்ணிக்கிறது?"

"நீங்க மனசு வைச்சா கண்டிப்பா அவளை கல்யாணம் பண்ணிக்கலாம்."

"ப்ளீஸ் விஜி என்னை வற்புறுத்தாத. என்னால இதுக்கு சம்மதிக்க ஏலாது."

"அதான் ஏன்னு கேட்கிறேன்?"

"உன்னை நினைச்ச இந்த மனசால இன்னொருத்தியை என்னால நினைக்கவும் முடியாது. கல்யாணம் பண்ணிக்கவும் முடியாது."

"உங்களைப்பற்றி எவ்வளவோ உயர்வாக நினைச்சிருந்தேன். ஆனா...நீங்களும் ஒரு சராசரி ஆம்பிளையா இருப்பீங்கன்னு நான் நினைக்கவேயில்ல."

"என்ன சொல்றே?"

"ஒரு விதவைப் பொண்ணுக்கு வாழ்வு கொடுக்கிற துணிவு உங்களுக்கு இல்லேன்னு சொல்றேன்."

"விஜி."

"எனக்காக எதையும் செய்வேன்னு சொன்னதெல்லாம் சுத்தப் பொய். அப்படித்தானே? எனக்காக உயிரைக் கூடத் தருவதாகச் சொன்னீங்களே! நான் உங்க உயிரைக் கேட்கல. என் உயிர்த் தோழிக்கு வாழ்வுதான் கேட்கிறேன். ப்ளீஸ் அவளுக்கு வாழ்வு கொடுங்க. அவளைக் கல்யாணம் பண்ணிக்கங்க."

அவனது சேர்ட் கொலரைப் பிடித்திழுத்துக்கொண்டு விஜி விம்மி விம்மி அழுதாள். அவளைப் பார்க்க அவனுக்கு பரிதாபமாக இருந்தது. அவள் தலையை மெதுவாக வருடிக்கொடுத்தவன், அருணாவை திருமணம் செய்துகொள்ள சம்மதம் தெரிவித்தான். என்றாலும் விஜி இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அவன் கட்டி இருந்த மனக்கோட்டைகள் சரிந்து விழுந்தன. விஜியைப் பிரியப்போகும் துயர் அவனை வாட்டி வதைத்தது.

◻◻◻

"என்ன மறுமணமா?"

"ஆமாண்டி."

"என்னடி விளையாடுறியா?"

"இல்ல அருணா நான் சீரியஸாதான் சொல்றேன்."

"விஜி பைத்தியக்காரத்தனமா பேசாத. அவர்கூட வாழ்ந்த அந்த ஆறுமாத வாழ்க்கை எனக்கு வாழ்நாள் பூராவும் போதும்."

"அருணா! விபத்துக்குள்ளாகிய உன் கணவரை ஹொஸ்பிடலில் அட்மிட் பண்ணி இருந்தப்போ, சாகும் தறுவாயில் அவர் என்ன சொன்னாருன்னு ஞாபகமிருக்கா?"

"என்ன சொன்னார்?"

"நீ மறுமணம் செய்துக்கணும்னு சொன்னாரா இல்லையா?

"ஆமா சொன்னாருதான்."

"அவர் சொன்னதைத்தான் நானும் சொல்றேன். நீ மறுமணம் பண்ணிக்க."

"இங்க பாருடி. என்னால மறுமணம் பண்ணிக்க முடியாது. அதை இந்த ஊரும் உலகமும் ஏற்றுக்கொள்ளாது."

"என்னடி விசர்கதை கதைக்கிறே? இந்த ஊர் உலகத்தைப் பற்றி நீ எதுக்குடி யோசிக்கிறே? உன்னோட எதிர்காலத்தைப் பற்றி முடிவெடுக்க வேண்டியது நீதான். இந்த ஊர் உலகமில்ல."

"அதுக்கில்லடி..."

"உஷ்...மேற்கொண்டு எதுவுமே பேசாத. அடுத்த வாரம் உனக்கும்.. விக்ரமிற்கும் கல்யாணம். இந்தக் கல்யாணத்திற்கு விக்ரம், அவரோட அப்பா, அம்மா எல்லோரும் சம்மதிச்சிட்டாங்க. கல்யாணத்திற்கு ரெடியா இரு. நான் வர்றேன்." என்று கூறிவிட்டு விஜி போய்விட்டாள். அருணா கற்சிலையாக நின்றுக்கொண்டிருந்தாள். விஜி இறுதியாக கூறிவிட்டுச் சென்ற வார்த்தைகள் அவளது செவிகளுக்குள் திரும்பத் திரும்ப எதிரொலித்துக்கொண்டிருந்தன.

◻◻◻

இப்போதெல்லாம் விக்ரமை தனிமையில் சந்திப்பதை விஜி தவிர்த்தே வந்தாள். அவன் தன் தோழிக்கு கணவனாகப் போகிறான் என்ற எண்ணம் அவள் மனதில் பதிந்து போயின. நாளை அவனுக்கும், அருணாவுக்கும் திருமணம். விக்ரம் அருணா இருவரும் இல்வாழ்வில் இணையப் போகிறார்கள். என்ற சந்தோஷத்தோடு தோழியின் வீடு நோக்கி விரைந்தாள் விஜி.

"அருணா அருணா. இவ எங்க போனா... ஆளையே காணோம்?"

பெட்ரூமைத் தவிர ஏனைய இடங்களிலெல்லாம் அவளைத் தேடிய விஜி 'வீட்டை விட்டு வெளியே எங்கேயும் போக மாட்டாளே? எங்க போயிருப்பா?' என்ற யோசனையோடே அவளது பெட்ரூமைத் திறந்தாள். "அட இங்கதான் இருக்கிறியா..? நான் என்னடான்னா வீடு முழுக்க உன்னைத் தேடிட்டு வர்றேன். பட்டப் பகலில என்ன தூக்கம் வேண்டிக்கிடக்கு....? நாளைக்கு கல்யாணம் இல்லியா. எந்திரிடி" கட்டிலில் படுத்திருந்தவளை உசுப்பியவள் அதிர்ந்து போனாள்... அவள் கையில் ஒரு கடதாசி.

"என் உயிரிலும் மேலான தோழி விஜி....முதலில் என்னை மன்னித்துவிடு. உன் விக்ரமை எனக்கு கல்யாணம் செய்து வைக்க முன்வந்த நீ மனித உருவில் நடமாடும் ஒரு தெய்வம். ஆமாம் உனக்கு இருக்கும் இந்தத் தியாக மனப்பான்மை வேறு யாருக்குமே இருக்காது. விக்ரமை நீ எந்தளவுக்கு நேசித்தாய் என்பதை நானறிவேன். அவரை உன்னிடமிருந்து பிரித்த பாவம் எனக்கு வேண்டாம். அதனால் தான் அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்டு என் உயிரை மாய்த்துக்கொண்டேன். அடுத்த ஜென்மத்திலும் நாம் உயிர்த் தோழிகளாகவே பிறக்க வேண்டும். நீயும் விக்ரமும் திருமணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழ வேண்டும். அப்போதுதான் என் ஆத்மா சாந்தி அடையும்!"

கடிதத்தைப் படித்து முடித்த விஜி மயக்கம் போட்டு அருணாவின் உயிரற்ற உடல்மீது விழுந்தாள்.

(சுபம்)

# வள்ளி வரப்போறா

பிரியகவியன்-மாவனல்லை

"வாங்க வாங்க, என்ன விசேஷம்? 'கிழக்கு கரை'யிலே இருந்து வீடு தேடி வந்திருக்கீங்க. உள்ள வாங்க" என்று 'சின்னக் கவுண்டரை' வரவேற்றார் பழனிச்சாமி.

"வீட்ல விசேஷங்க' அதான் உங்களைக் கூப்பிடலாம்னு வந்தேன்."

"என்ன விசேஷம்" என்று சின்னக் கவுண்டரைக் கேட்டார் பழனிச்சாமி.

"ஆ 'சின்ன ஜமீனா' வந்திருக்கிறது." என்று கேட்டுவிட்டு உள்ளே போனாள் 'திருமதி பழனிச்சாமி.'

"ஒண்ணுமில்ல பழனி. நம்ம மகன் 'வீரா'வுக்கு 'கிழக்குச் சீமையிலே' இருக்கிற 'கேப்டன் மகள்' 'வள்ளி'யை நாளைக்கு பொண்ணு பார்க்கப் போறேன். அதனால உங்களை கூப்பிடலாம்னு வந்தேன்" என்றார் சின்னக் கவுண்டர்.

"உங்க 'தங்க மகனு'க்கு இப்பவே தேவையா இது?" இது பழனிச்சாமி.

"அவனுக்கு இப்பவே 'பொண்டாட்டி தேவையாம்' ஜோக்கடித்தார் சி.கவுண்டர்.

"நீங்க 'அக்கரைச் சீமையிலே' இருக்கிற 'பொன்னுமணி'மகள் 'வள்ளி'யைத்தானே சொல்றீங்க. ரொம்ப நல்ல பொண்ணுங்க." என்றார் பழனிச்சாமி.


"ஆமா பொண்ணு எங்க வேலை செய்யது." என்று கேட்டார் சி.கவுண்டர்.

"மகளிர் மட்டும்' வேலை செய்யுற ஒரு கம்பெனிலதான்" என்றார் பழனிச்சாமி.

அப்போது அவசரமாக உள்ளே வந்த பழனிச்சாமியின் மகன் 'பாண்டியன்' "அப்பா 'எங்க தம்பி' அதான் 'சின்னத்தம்பி' 'மறவன்' கீழே விழுந்து இரத்தம் வடியுது." என்றான்.

"என்னது. எப்படி விழுந்தான்?" என்று கேட்டார் பழனிச்சாமி.

"அண்ணா நகர் முதல் தெரு'வில '13ம் நம்பர் வீட்'ல இருக்கிற நம்ம 'உழைப்பாளி'



வீட்டுக்கு 'கிளிப்பேச்சு கேட்கவா'ன்னு கூப்பிட்டேன். அவன் ஓடிவந்து தடுக்கி விழுந்திட்டான்" என்றான் பாண்டியன்.

"சரி சரி போய் பக்கத்து வீட்டு 'மிஸியம்மா'கிட்ட மருந்து கட்டிட்டுவா" என்றார் பழனிச்சாமி.

"சரி நம்ம விஷயத்துக்கு வாங்க." என்றார் சின்னக் கவுண்டர்.

"உங்க 'பெரிய கவுண்டர் பொண்ணு'வ மகனுக்கு பேசியிருக்கலாமே?" என்றார் பழனிச்சாமி.

"ஆனா 'பாண்டித்துரை'யின்ட மனைவி 'மீரா' 'வீரா'வுக்கு 'பெரியம்மா ஆகுதே." என்றார் சின்னக் கவுண்டர்.

"அதுவும் சரிதான் ஆனாலும்,"

"என்ன ஆனாலும்" என்று கேட்டார் சி.கவுண்டர்.

"ஒண்ணுமில்ல. வள்ளிட அக்கா 'புவனா ஒரு கேள்விக்குறி' ஆயிட்டா. உங்களுக்குத் தெரியும்தானே? 'கேப்டன்' 'தங்க மகன்' அதான் வள்ளியின்ட 'முரட்டுத் தம்பி' இருக்கானே அவன் ஒரு 'போக்கிரி ராஜா' இந்தப் '16 வயதினிலே'யே 'ஊரெல்லாம் உன்பாட்டு'ன்னு பொண்ணுங்க பின்னால சுத்துவான். பேரு என்னமோ... ஆ...'பரதன்'. கேப்டன் மனைவி 'அஞ்சலி' இருக்காளே அது ஒரு மின்சாரம். 'சம்சாரம் அது மின்சாரம்'னு சொல்வாங்களே அது கேப்டன் குடும்பத்துக்கு ஏத்தது. கேப்டன் 'வீட்ல எலி வெளில புலி." ஆனாலும் வள்ளிப் பொண்ணு ரொம்ப நல்லதுங்க. 'பெண்கள் வீட்டின் கண்கள்' என்று சொல்ற மாதிரி ஒழுங்கா இருக்குது." என்று மூச்சுவிடாமல் கூறிமுடித்தார் பழனிச்சாமி.

"அப்படின்னா நாளைக்கு 'பொண்ணு பார்க்கப் போறன்' நீங்களும் வாங்க" என்று கூப்பிட்டார் சின்னக் கவுண்டர்.

"சரிசரி. 'கல்யாணப் பரிசு' கொண்டு வாறன். 'சின்ன மாப்பிள்ளை'யை கேட்டேன் நான்னு சொல்லுங்க" இது பழனிச்சாமி.


"மறுபடியும்' சொல்றேன் 'வீட்ல விசேஷங்க, கட்டாயம் வாங்க" என்று சொல்லி விடைபெற்றார் சி.கவுண்டர்.

"உங்க 'தங்க மகன்' கல்யாணம் நடக்கணும்னு நானும் 'சுப்பிரமணிய சுவாமி யை வேண்டிக்கிறேன்" என்று கூறி சி.கவுண்டரை வழியனுப்பி வைத்தார் பழனிச்சாமி.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# நேசிக்கும் நினைவுகள்!

போகவந்தலாவை-சோ. ஸ்ரீதரன்



## நிஜம்பாதி கற்பனை மீதி

**" மனிதம் மரணித்துக்கொண்டிருக்கும் இக்கலியுகத்தில், மனிதனிடம் மனிதன் பரஸ்பரம் பயப்படுவதில் ஆச்சரியமில்லை."**

வழமைப்போல் அன்றும் பேராதனை வளாகம் வனப்பாகவே காட்சியளித்தது. இந்நாட்டிற்கு வருடந்தோறும் புத்திஜீவிகளை உற்பத்தி செய்வதனால் அங்குள்ள வளாகக் கூடங்கள்கூட பெருமையால் நிமிர்ந்து நின்றன. வளாகத்தினுள் போவோரும் வருவோரும் போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருந்தார்கள்.

அங்கே இயற்கை தந்த அந்த மரத்தின் கிளைகளின் மேல் இரு பட்சிகள் இன்பமாக சல்லாபித்துக்கொண்டிருந்தன. மேலே இவைகள் என்றால்.. கீழே...மானிடப் பட்சிகள் மறைந்து கொண்டும் மறந்து கொண்டும் விழிகளாலும் மொழிகளாலும் காதல் காவியங்கள் சமைத்துக்கொண்டிருந்தார்கள். சற்றுத் தூரத்தில் வளாகத்தின் பெருமைக்குரிய விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் விரிவுரைகளை நடத்துவதற்காக தாம் கற்பிக்க வேண்டியவற்றை மனனம் செய்துகொண்டு மௌனமாக நடந்து சென்றுகொண்டிருந்தார்கள்.

அங்கே.. அவன் மட்டும் பேராதனை பேராறின் கரையிலுள்ள கல்மீது கால் போட்டுக்கொண்டு அமர்ந்து ஏதோ...எழுதிக் கொண்டிருந்தான். ஆம் அவன் தான் ப்ரியன். ஒரு இளங்கவிஞன்: தனது ஆத்ம திருப்திக்காக தினந்தோறும் பல கவிக் குழந்தைகளை பிரசவித்துக் கொண்டிருந்தான். அவன் வாழ்க்கையோ பல்கலைக்கழக படிப்பைத் தவிர பிற நேரங்களில்தான் வாழ்க்கையில் இரசித்ததை நடந்ததை, நினைத்ததை, நடக்கப்போவதை கருவாகக் கொண்டு தம்மனத்தின் எண்ண ஓட்டத்திற்கேற்ப கவி வடிப்பதாகும்.

அவன் எழுதிய கவிதைகள் ஏனோ... அவனின் ஆத்மதிருப்திக்காக மட்டும் எழுதியதால் அக்கவிகளை பிறர் இரசிக்க பாராட்ட சீராட்ட சந்தர்ப்பமில்லாமல் போய் விட்டது.

இவ்வாறாக ப்ரியனின் தனிமையில் இனிமை காணும் வாழ்க்கை அந்த பேராதனை பேராறு போல் ஓடிக்கொண்டிருந்தது.

★★★

வளாகம் புதிய வருடத்தில் வரும் மாணவர்களை வரவேற்றுக்கொண்டிருந்தது. அதே வேளையில் பட்டம் பெற்றுச் செல்லும் பட்டதாரிகளுக்கு 'டாட்டா' காட்டிக் கொண்டிருந்தது. கலைப்பிரிவில் கல்வி பயிலும் ப்ரியனின் சக நண்பர்கள் புதிதாக வரும் மாணவர்களுக்கு அன்புத் தொல்லையான 'றாக்கிங்' கொடுக்க ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர்.

கருணையைக் கருவாக கொண்டு கவி வடிக்கும் பழக்கமுள்ள ப்ரியன் அன்புத் தொல்லையான 'றாக்கிங்' சமாச்சாரத்தை வெறுத்தான். இருந்தும் அடாபிடியாக வரும் மாணவர்களுக்கு மட்டும் அடக்கியாளும் சர்வாதிகாரியாக 'றாக்கிங்' இருப்பதால் அதை சற்று மறைமுகமாக ஆதரித்தான்.

ப்ரியனின் நண்பர்கள் தமக்கு பிரியமான புதுப்புது 'றாக்கிங்' விதிகளை கைக்கொண்டு புதிய மாணவர்களுக்கு அன்புத் தொல்லைகளை கொடுத்துக் குதூகலித்தார்கள். அங்கே ப்ரியன் மட்டும் அவர்களிடமிருந்து பிரிந்து இவைகளை அவதானித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் மனதில்,

**வளாகத்தின்**<br>
**அன்புத் தொல்லைகளாய்...**<br>
**வலம்**<br>
**வரும் 'றாக்கிங்'**<br>
**அது**<br>
**அன்பான மனங்களை**<br>
**வறட்சியாக்கிறது!**<br>
**வறட்சியான மனங்களை**<br>
**புரட்சியாக்கிறது!**

எனக் கவிதை வடித்துக்கொண்டிருந்தான். அப்போது புதிய மாணவர்களுள் அவள் மட்டும் இவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். 'மற்றவர்கள் வெறுக்கத்தக்க முறையில் நடந்துக்கொள்கிறபோது அவர் மட்டும் ஏன் தனிமையில்' என்று நினைத்துக் கொண்டாள். வளாகத்தின் அன்புத் தொல்லையாய் வலம் வந்த 'றாக்கிங்' லீவு எடுத்துக் கொண்டு ஒரு வாரமாகிவிட்டது! பிறகு தொடரலாம்! முடிவிலி தானே...றாக்கிங்!

★★★

நடிகர் முரளியைப்போல் சாயலைக் கொண்டவனான ப்ரியனின் அன்புப் பார்வையையும் அமைதியான முகத்தையும் கவர்ச்சியான தோற்றத்தையும் கண்டு, ப்ரியனிடம் பேச நெருங்கினாள் சுகணா.

அவள் மனதிலொரு பயம்! நடையிலொரு நடுக்கம்! இவை எல்லாவற்றையும் தடுத்து விட்டு "ஹலோ உங்கள்.. உங்கள் பெயரை அறிந்துக்கொள்ளலாமா?" என்று தயக்கத்துடன் கேட்டாள் சுகணா! தான் எழுதிய கவிதைகளை இரசித்துக்கொண்டிருந்த ப்ரியன், "ஹலோ" என்று உரிமையாய் அழைத்த அழகைப்பார்க்க திடுக்கிட்டுத் திரும்பினான்.

அப்போது சுகணாவின் இதழ்களுக்கிடையே ஜனனித்த புன்னகைக் குழந்தை இவன் பதிலுக்காக ஏங்கியது. அவனோ தன்னை சுதாகரித்துக்கொண்டு "ப்ரியன்" என்றான்.

'ரொம்ப நன்றி! நீங்களும் உங்கள் நண்பர்களைப் போல் முரட்டுத்தனமாக நடந்துகொள்ளுவீர்களோ... என்று பயந்து விட்டேன்." என்றாள் உவகையுடன் சுகணா!

"மனிதம் மர்ணித்துக்கொண்டிருக்கும் இக்கலியுகத்தில், மனிதர்களைக் கண்டு மனிதன் பயப்படுவதில் ஆச்சரியமொன்றுமில்லை" என்றான் தனது கவித்துவ பேச்சில் ப்ரியன்!

"ப்ரியன்...! உங்களின் பேச்சாற்றலை கேட்கும்போது இன்னும் பேசிக்கொண்டிருக்கலாம் போலிருக்கிறது. என்றாள் சுகணா ஆர்வத்துடன்.

"ஆ...மறந்தே போய்விட்டேன். உங்களின் பெயரை எனக்கு இன்னும் சொல்லவில்லையே..." ஆவலுடன் கேட்டான் ப்ரியன்!

"சுகணா..." என்றாள் அவள்.

"சுகணா...சுவீட் நேம்! சுகமான பெயர்! பெயரிலேயே...சுகம் தொக்கி நிற்கிறது." என்றான் ப்ரியன்!

"அவ்வளவு..சுவீட் நேமா...?" என்று ஆசையாய் கேட்டாள்.

"ஆம்" என்றான்.

"மிஸ்டர் ப்ரியன், நான் பார்க்கும் போதெல்லாம் தனிமையில் ஏதோ... எழுதிக் கொண்டிருக்கிறீர்களே! அதென்னென்று நான் அறியலாமா..?" என தயக்கத்துடன் கேட்டாள்.

"தனிமையில் மனிதனின் உணர்ச்சியையும் இயற்கையின் எழிலையும் சேர்க்கும் போது அங்கு முழுமையான கவிதை பிறக்கிறது. அதைத்தான் நானிங்கு கொப்பிகொப்பியாக எழுதிக் கொண்டிருக்கிறேன்." என்று தனது நீண்ட பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

"ஆ..கவிதையா...! எனக்கு ரொம்ப விருப்பம். ஐயோ...ப்ரியன் உங்களின் கவிதைகளை நான் வாசிக்கலாமா?" என உரிமை கலந்த ஆவலுடன் கேட்டாள்.

"இதுவரை என் ஆத்மதிருப்திக்காக, நான் எழுதிய கவிதைகளை உங்களின் விழிப் பசுக்கள்தான் முதன முதலில் மேயப் போகின்றன. ஏதோ...என்னுள் நீங்களும் ஒரு கவிக்கருவாக புகுந்து கொண்டதால், தருகிறேன்." என்று தனது கவிதைக் கொப்பியை ப்ரியன் கொடுத்தான்.

"தேங்ஸ்...ப்ரியன், நான் ஆறுதலாக வாசித்து விட்டு, பிறகு கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறிவிட்டு...வளாகத்தின் இருமருங்கிலும் உயர்ந்த பூ மரங்களை கொண்ட அந்த ஒற்றையடிப் பாதையில் நகரும் தேராக நகர்ந்தாள் சுகணா!

★★★

தினந்தோறும் சுகணா ப்ரியனின் கவிதைகளை மிக சுவாரஸ்யமாக தன்னிலை மறந்து இரசித்துக்கொண்டிருந்தாள். ப்ரியனை காணும் போதெல்லாம் அவனின் கவியாற்றலை பாராட்டினாள். இன்னும் கவிதைகள் எழுத தூண்டினாள். ப்ரியன், சுகணாவின் நெருக்கம்- கவி-கருவாக உருவாகிக்கொண்டிருந்தது. ப்ரியனின் கவி இரசிகையான சுகணா ப்ரியனின் குருதியோட்டப் பாதையில் உலா வந்து கொண்டிருந்தாள்.

இடைக்கிடை ப்ரியன் சுகனாவை பற்றியும் அதற்குப் பதிலாக சுகணாவும் கவிதைகளால் தமது எண்ணங்களைப் பறிமாறிக் கொண்டார்கள். இதனிடையில் தனிமையில் இனிமைகண்ட... ப்ரியனுக்கு சுகணாவின் நட்பு கிடைத்ததிலிருந்து சுகணா மீது அளவிட முடியாத நட்பின் உச்ச கட்டத்தினால் அவன் அவளை நேசிக்கத் தொடங்கினாள். சுகணாவிற்கு எழுதும் கவிதைகளில் தனது எண்ணத்தை பட்டும் படாமலும் எழுதினான். அவளோ... இதை அறிந்துகொண்டு மௌனம் சாதித்தாள். தான் ப்ரியனின் கவிதையை இரசித்தோமா? அல்லது ப்ரியனை இரசித்தோமா என தனது மனதிற்குள் குழம்பிக்கொண்டிருந்தாள். மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் பேதலித்தாள். இருந்தும் அவளுக்கு ப்ரியனின மேல் ஒரு தனிப்பட்ட அன்பு இருக்கத்தான் செய்தது.

ப்ரியனோ...சுகணாவின் பதில் கவிதையில் வரும் என்றெண்ணி ஏங்கிக்கொண்டிருந்தான். அவளோ...மௌனத்தை உடுத்திக் கொண்டிருந்தாள். நாட்கள் நகர்ந்தன... சுகணாவின் பதில் கவிதைக்காக ஏங்கியிருந்த ப்ரியனுக்கு இறுதியில் ஏமாற்றமே....! ஏனோ... ப்ரியனுள் சுகணா புரியாத புதிரானாள். மீண்டும் அந்த பேராதனை பேராற்றின் கரையின் கல்மீது அமர்ந்து கொண்டு.....

**சுகணா..**<br>
**நான்**<br>
**உன்னைவிட..**<br>
**உன் நினைவுகளையே...**<br>
**அதிகமாக நேசிக்கிறேன்**<br>
**காரணம்**<br>
**எப்போதும்**<br>
**உன் நினைவு**<br>
**என்னோடிருப்பதால்...!**

தனது ஆத்ம திருப்திக்காக மட்டும் இந்த கவிதையை எழுதிக்கொண்டிருந்தான்.

---

# மனிதாபிமானம்

ராமநாதனுக்கு அலுப்பாய் இருந்தது. அலுவலகத்திலும் ஒரே அலைச்சல்: முன் ஹாலில் கிடந்த சாய்மானக் கதிரையில் சாய்ந்து கொண்டார். மனைவி கொண்டு வைத்த தேனீர் ஆறிப்போய் கிடந்தது. சமையலறையில் அவர் செல்ல மகள் சிணுங்குவது கேட்டது. அதைத் தொடர்ந்து மனைவி ராசாத்தியின் சூடான குரலும் கேட்டது. "ராசாத்தி ஏன் ப்ரியா அழுவுறாள்." வசதியாக சாய்ந்து கொண்டே குரல் கொடுத்தார். "என்னவோ டீச்சர் நாளக்கி எழுதிட்டு வரச் சொன்னதாம். இப்ப சொல்லித் தரட்டாம். நானென்ன மெஷினா? சமையல் முடிஞ்சு சொல்றன் எண்டன். அதுக்குத்தான் இந்தக் கூத்துப் போடுறா."

நீண்ட நேரம் அடுப்படியில் நின்றதால் ஏற்பட்ட எரிச்சல், அவள் குரலில் ஏராளமாய் தெரிந்தது. "ப்ரியா குட்டி இஞ்சவாம்மா, அப்பா சொல்லித்தாறன். அன்பாய் மகளை அழைக்க, குசினிக்குள் நின்ற ப்ரியா, அழுகை நிறுத்தி, ராசாத்தியின் இடுப்பில் கோபமாய் கிள்ளிவிட்டு, அப்பாவை நோக்கி ஓடி வந்தாள். ராமநாதன் தன் தொந்தி வயிற்றில் மகளை தூக்கி நிறுத்தி, ஆதரவாய் தலைகோதி முத்தமிட்டார். "ஏம்மா டீச்சர் என்ன எழுதி வரச் சொன்னாங்க?" ப்ரியா கையில் இருந்த கொப்பி விரித்து நீட்டினாள். 'மனிதாபிமானம்' பற்றி பத்து வரி எழுதச் சொல்லியிருந்தது. ராமநாதனுக்கு பத்து வரியில் 'மனிதாபிமானம்' பற்றி சொல்லத் தெரியவில்லை. எப்படி சொல்வது. பிஞ்சு மனதிற்கு புரியும்படி கூறவேண்டுமே! பெரும் தலைவர்களுக்கே புரியாமல் போகும் இந்த தலைப்பு, பத்துவரிக்குள் எப்படி சுருங்கும்?

"என்ன டாடி யோசிக்கிற? 'மனிதாபிமானம்'னா என்ன?" சில சமயங்களில் குழந்தைகளின் கேள்விகளுக்கு அறிஞர்களாலும் விடை கூறமுடியாது.

"அதும்மா 'மனிதாபிமானம்'னா. .வந்து..." ராமலிங்கம் தடுமாறினார். வார்த்தைகள் வழுக்கி விழுந்தன.

"ப்ரியா குட்டி அப்பா இண்டக்கி டயர்டா இருக்கன், மோர்னிங் சொல்லித் தாரன் சரிதானே?" அவளும் தலை ஆட்டி., அவர் கன்னத்தில் 'இச்' பதித்து தூங்கி விட்டாள்.

மறுநாள் ப்ரியாவின், கேள்வி மறந்து அலுவலகம் போகும் அவசரத்தில் சென்று விட்டார். மாலை வந்தவுடன் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறியது.

"என்னங்க உங்க பிரண்ட், இண்டக்கி தாரண்டு வாங்கின கடன திருப்பி வாங்கிட்டு வாங்க. ஒருமாசமா ஏமாத்திட்டு வாறாரு."

ராசாத்தி ஞாபகமூட்ட, இவரும் எரிச்சலாய் சொன்னார்."நானும் ஒபிஸ் முடிஞ்சி வரேக்க கேட்டனான். பின்னேரம் அஞ்சு மணிக்கு தாரன் எண்டு சொன்னான்.

"இண்டக்கும் ஏமாத்தினா முகத்துல ஏசிப்போட்டுருவன். ஆயிரம் ரெண்டாயிரம் எண்டாலும் பரவாயில்ல. வீடு கட்ட வச்சிருந்த



'லோன்' காசல்லவா கொடுத்தன்." ராமலிங்கம், ஏசிக்கொண்டே பைசிக்கிளை உருட்ட, முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த ப்ரியா "டாடி. நானும் வாறேன்" என்று சிணுங்கினாள். அவளையும் ஏற்றிக்கொண்டு ராமநாதன் புறப்பட்டார்.

"டாடி.," ப்ரியா மெல்ல அழைத்தாள். "என்னம்மா?" "நான் நேத்து கேட்டன்தானே மனிதாபிமானம், நீங்க ஏமாத்திட்டு போயிட்டீங்க. டீச்சர் ஸ்கூல்ல பத்து வரி எழுதித் தந்தாங்க. ஆனா 'மனிதாபிமானம்'னா என்னண்டு விளங்கல டடி.. நீங்களாவது விளங்கப்படுத்துங்களேன்." செல்லமாய் கெஞ்சினாள். பாதையில் சன நெரிசல் நிரம்பி வழிந்தது. பிரேக்கும் குறைவாய் இருந்தது. 'ஐயோ மறுபடியும் இதுதானா' மனசுக்குள் குமைச்சலாய் இருந்தது. அவர் 'மனிதாபிமானம்' பற்றி 'லெக்சர்' பண்ண ப்ரியா ஒன்றுமே புரியாமல், பாதையில் விழிகளை விட்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினாள்.

நண்பனின் வீட்டை அடைந்த ராமலிங்கத்திற்கு ஏமாற்றமாய் இருந்தது. வீட்டில் வேலைக்காரியும் புதிதாகத் தெரிந்தாள். 'அயோக்கிய ராஸ்கள் ஏமாற்றிப்போட்டான். வரட்டும்'.

கருவிக்கொண்டு நின்றார். நிதானமிழந்து, ஆத்திரமாய் கொதித்தார். சற்று நேரத்தின் பின் நண்பனின் வீட்டின் முன் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதிலிருந்து அவரின் நண்பன்தான் இறங்கி, ஆட்டோவுக்கு பணம் கொடுத்து, இவரைக் கண்டு பதட்டமாய் ஓடிவந்தான்.

ராமலிங்கம் அடிபட்ட புலியாய் மாறினார். நட்பு மறந்து, சூடானார். "நீயெல்லாம் ஒரு மனுஷனா? திருப்பி கொடுக்க வக்கில்லாட்டி ஏன் கை நீட்டி கடன் வாங்கணும். எங்க செருப்புத் தேய நடக்கணும், நீங்க ஏமாத்தினா பொறுமையா போயிடணும். இண்டைக்கி பின்னேரம் வரச்சொல்லிட்டு, எங்கேயோ ஒளிச்சிப் போட்டு வாறீங்களா? ஏண்டா மானம் மரியாதை இல்லயா?"

"தயவு செஞ்சு இதற்கு மேல பேசாதீங்க. ராமலிங்கம்," அவர் உஷ்ண வெடிகளை தாங்க முடியாமல் நண்பன் தேவகுமார் கெஞ்சினான். அவனுக்கு அவமானமாகவும், வெட்கமாகவும் இருந்தது. குரல் தளதளக்க பேசினான். "ராமலிங்கம் இண்டக்கி அஞ்சு மணிக்கு உங்கட கடன தாரதுக்கு ரெடியாத் தான் இருந்தன். ஆனா, கடவுள்ற விதி, வேறயா மாறிப் போச்சி. சாயங்காலம் டீ போடப்போன என் மனைவி கேஸ் வெடிச்சி, தீ புடிச்சி எரிஞ்சிட்டா, அவவ ஏத்திக்கிட்டு, ஆஸ்பத்திரிபோய் மருத்துவம் பார்த்ததில ஐயாயிரம் கரைந்து போச்சி, மீதி அஞ்சு இருக்கு. இன்னும் ரெண்டு நாளயால மீதியையும் தந்துடுறேன். பிளீஸ் என்ன மன்னிச்சிடுங்க." பணம் நீட்டியவனின் கரம் பற்றி ஆதூரமாய் தடவினார். "சொறிடா தேவகுமார். உண்ட நெலமை தெரியாம வாய்க்கு வந்தமாதிரி ஏசிட்டன். என்ன மன்னிச்சிடு. இந்த பணத்தையும் நீயே வச்சு, வைத்தியம் பாரு. பொறகு எடுப்பம்." ராமலிங்கம் அவனை இறுகத் தழுவி கண் கலங்கினார்.

"நானும் ராசாத்தியக் கூட்டிட்டு வாறன், வாட் நம்பர் என்ன?" நண்பன் நம்பர் சொல்ல ராமலிங்கம் ப்ரியாவுடன் வெளியேறினார். "டாடி." "என்ன ப்ரியா?" குரல் கரகரத்தது. "இப்ப எனக்கு விளங்கிட்டு டாடி." "என்னம்மா விளங்கிட்டு?"

"மனிதாபிமானம்'னா என்னண்டு விளங்கிட்டு" ப்ரியா சொல்ல, அவர் மனம் அந்த சோகத்திலும் இலேசாக புன்னகைத்தது.

**ஓட்டமாவடி அறபாத்**

---



## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

அவன்: அப்பாசிட்ட சொத்து பிரிச்சு கேட்டது வம்பாப்போச்சு.<br>
இவன்: ஏண்டா?<br>
அவன்: முக்கால்வாசிக் கடனை என் பேருக்கு எழுதி வச்சிட்டார்.

▫▫

நண்பர்: எதுக்காக இவ்வளவு ஆழமான கிணத்துக்குள்ள உட்கார்ந்துகிட்டு கதை எழுதுறீங்க?<br>
எழுத்தாளார்: ஆழமுள்ள கதையாக இருக்கணும்னாங்க....அதான்.

▫▫

திருடன்: எப்போ திருட வந்தாலும் உங்க ரெண்டு பேருக்கும் சண்டை, சண்டை சண்டைதான் த்தூ!<br>
கணவன்-மனைவி:-...?...?..?

▫▫



ஒருவன்: நம்ம கட்சி உடைஞ்சி போச்சே! இப்ப எந்தக் கட்சியிலே இருக்கே....?<br>
மற்றவன்: ரெண்டு கட்சிக்கும் பாலமா இருக்கேன்.

▫▫

மனைவி: மருமகன் வந்து பத்து நாளாச்சு... போக மாட்டேங்குறாரே?<br>
கணவர்: சமையலில் உன் கைவரிசையைக் காட்டு...ஓடிவிடுவார்.

▫▫

இவர்: அவரிடம் தீக்குச்சி கடனாக் கேட்டது தப்பாப்போச்சு.<br>
அவர்: ஏன்?<br>
இவர்: எரிஞ்சு விழுறார்.

▫▫

நோயாளி: என்ன டாக்டர் இது? இப்போது தானே ஊசி போட்டீர்கள். இன்னொரு ஊசி சின்னதாக எதற்கு?<br>
டாக்டர்: நான் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிக்குச் சில்லறை இல்லை. அதற்குப் பதில்தான் இது.

▫▫

www.padippakam.com



# இலக்கிய நயம்

# விடை அறியும்வரை வருத்தம்!

தருவது ரசிகன்



கீறுப்புத் திரையாக மேகம் நிலாவை மறைத்தது. நிலா அந்தத் திரை விலக்கி பூமியின் மேனியின் அழகை அறிய அடம்பிடித்துக்கொண்டிருந்தது.

கார்வாணன் அண்ணாந்து வானம் பார்த்து, அங்கே அடம்பிடிக்கும் நிலவை கண்களால் வாங்கி இரசித்துக் கொண்டிருந்தான். கார்வாணன் தன் கரம் ஒன்றில் பனை ஓலையும், இன்னொரு கரத்தில் எழுத்தாணியும் வைத்துக் கொண்டிருந்தான்.

கார்வாணனின் தேகத்தை தென்றல் தொட்டு வருடிச் சென்றது. வருடிச் சென்ற தென்றல் அந்த நந்தவனத்தில் மலர்ந்திருந்த பூக்களை தழுவியதால் தான் பெற்ற வாசனையிலும் ஒரு பங்கை கொடுத்து விட்டுப் போனது.

தென்றலுக்கும் ஆசை பூக்கள் மீது. திருட்டுத்தனமாய் தழுவியிருக்கிறது. எனினும் தழுவிய போது பெற்றிட்ட வாசனை அதன் திருட்டுத்தனத்தை தெரியப்படுத்திவிட்டது.

கார்வாணன் நிலவைப் பார்த்தபடியே தென்றலை நினைத்து அதன் திருட்டுச் சுகம் இரசித்து சிரித்துக்கொண்டான்.

இப்போது கையில் உள்ள எழுத்தாணியை பனை ஓலையில் பதித்தான். கார்வாணன் எழுதத் தொடங்கியதைப் பார்த்து கரகோசை செய்வது போல நந்தவன மரங்களின் இலைகள் சலசலவென்று ஓசை எழுப்பின.

இலை ஒன்று வந்து பனை ஓலையின் மீது விழுந்தது. துரத்திவந்த காற்று அதனை மெல்ல தன் கரத்தில் தூக்கிக் கொண்டது. உடன்பட்டுப்போன இலை காற்றின் குறும்பில் வெட்கப்பட்டதுபோல் அதன் கரத்தில் இருந்து விடுபட்டு சற்றுத் தள்ளி நிலத்தில் விழுந்தது. காற்றும் சளைக்காமல் தரையில் சாய்ந்த இலை மீது பரவிக் கவிழ்ந்தது. அந்த நேரம் பார்த்து மறுபடியும் மரத்தின் இலைகள் சலசலத்தன. கார்வாணன் தன் விழிகள் வாங்கிய காட்சியை மனதில் இரசித்தபடி பனை ஓலையில் பதிவு செய்தான்.

கட்டுக்குள் சிக்காத காற்று
கைவீசித் திரிய
வீசிய கைகள்
பட்டதின் வெட்கத்தில்
கனிமர இலைகள்
களிப்பில் சிரித்தன.

எழுதி நிறுத்தி யோசித்து, மீண்டும் எழுதினான். அது ஒரு தத்துவம் போல் இருந்தது.

மோகம் என்பது
வயதின் வேகம்.
ஞானம் என்பது
முதிர்ச்சியின் நாதம்.

எழுத்தாணி நின்றது. எழுதிய வரிகளை விழிகள் வருடிப் பார்த்துக்கொண்டன. காற்றின் மீது பொறாமை வந்தது. அதன் சுதந்திரம் தானும் அனுபவிக்கும் தாகம் எழுந்தது. கார்வாணன் கரத்தில் இருந்த எழுத்தாணி இப்போது மூன்றாவது தடவையாக ஓலையின் மீது ஊர்வலம் போனது.

மோகம் சூடிய
விடலைக் காற்று
காளையின் மனக் குளத்தில்
கல்வீசிப் போயிற்று
குளத்தில் எங்கும்
கள்வெறிச் சலனம்!

கார்வாணன் என்று தன் பெயர் குறித்தான். கவிதை முடித்த திருப்தியில் எழுத்தாணி இயக்கி ஓய்ந்தது.

இலக்கண மரபுக்குள் அடங்காத வரிகள், புலவர் சபை இதை கவிதை என்று ஒப்பாமல் போகலாம். இந்த ஓலை தப்பிக்கிடந்தால் கால வெள்ளத்தில் கலந்து மிதந்து எவர் கரம் சேருமோ அவர்கள் அப்போது இதனை கவிதை என்று கரகோசம் செய்து இரசிக்கவும் கூடலாம்.

கார்வாணனுக்கு மனதில் ஒரு ஆசை மலர்ந்தது. எழுந்துகொண்டான். நந்தவன அருவி நோக்கி கவிஞனின் கால்கள் அவனை காவிப் போயின.

தன் இடையில் ஆடவன் கரம்படும்போது சிணுங்கும் பெண்போல அருவி சிணுங்கி ஓடிக்கொண்டிருந்தது. காற்று தன் கரங்களில் ஏந்திவந்து நீராடச் சொல்லி, போட்டு விட்டுப்போன பூக்களை அருவி தன் சில்லென்ற மேனியில் சுமந்துகொண்டும் நெளிந்து கொண்டும் ஓடும் அழகு ரம்மியமாய் இருந்தது.

கார்வாணன் தன் கரத்தில் இருந்த பனை ஓலையை அருவியின் மேனியில் போட்டான். வாங்கிக்கொண்ட அருவி ஓலை சுமந்து நகர்ந்து போனது.

■

இளவரசி மணிக்கொடி அழைப்பதாக அரண்மனை ஆள் வந்து சொன்னான்.

"இளவரசியார் என்னை எதற்கு காண விரும்புகிறார்கள்?"

"அதனை தாங்கள் அவரிடம் தான் கேட்டறியவேண்டும்."

மேற்கொண்டு எதுவும் கேட்பது முறையல்ல என்பது போல் அரண்மனை ஆள் பதில் தந்தான்.

மேல் அங்கியை எடுத்து அணிந்து கொண்டே கார்வாணன் கடுமையாக யோசித்தான்.

சரி... நேரில் கண்டுதான் அறிந்து கொள்வோமே என்று மனதை நிலைப்படுத்திக் கொண்டு அரண்மனை ஆள் கூட வர இளவரசியைக் காணச் சென்றான்.

■

கன்னிமாடத்திலே தன் அறையின் வாயிலிலே நின்று இளவரசி மணிக்கொடி வரவேற்றாள்.

கம்பீரமாகத் தெரிந்தாள். தாழம்பூவின் அழகுக்குள் ஆபத்தான சர்ப்பமும் இருப்பது போல, அவள் மலர் மேனியில் தாமும் இருப்பதாக எச்சரிப்பது போல மைதீட்டிய அவள் விழிகள் படபடத்தன.

நேற்றிரவு நிலவுக்கு திரைபோட்ட மேகம் போலத் தெரிந்த கருங்கூந்தலில் முல்லை மலர்கள் சூடியிருந்தாள்.

சந்தனமும், ஜவ்வாதும், கஸ்தூரியும் கலந்த சுகந்த வாசனை அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது. நீராடி முடித்து அழகுகள் சதிராடும் மேனிக்கு வாசனைத் திரவியங்களை பூசியிருக்க வேண்டும் என்று கார்வாணன் நினைத்துக்கொண்டான்.

வெண் சங்கின் பளபளப்பாய் கழுத்து இருக்க, அதன்கீழே மெல்லிய பட்டாடையை மீறிக்கொண்டு தெரிந்த மன்மதனின் வலிய கணைகள் கார்வாணன் மனதை வதம் செய்து கொண்டிருந்தன.

கார்வாணனின் மனதில் ஒரு கேள்வி எழுந்தது.

இந்த [illegible] அனைத்துக் [illegible] ஆயிரம் கைகள்கூட போதாது அன்றோ?

கனியிதழ் அமுதம் உண்ணும் பாக்கியம் பெற்றவனுக்கு இரு உதடுகள் போதுமோ? ஈராயிரம் உதடுகள் இருந்தாலும் போதாது அன்றோ?

"உள்ளே வாருங்கள்" என்ற இதழ் மொழி உதிர்த்தாள் மணிக்கொடி. சிந்தனை கலைய அவள் பின்னால் நடந்தான். முன் அழகுகளுக்கு நாம் ஒன்றும் சளைத்துவிடவில்லை என்று பெருமையாக சொல்லிக்கொள்வது போல் இருந்தன பின்னழகுகள்.

அமருமாறு ஆசனம் காட்டினாள். பஞ்சிருக்கை பதமாக இருந்தது.

"தாங்கள்தானே கவிஞர் கார்வாணன்?" என்று யாழின் நாதமாய் குரல் வந்து கேட்டது.

"கார்வாணன் நான்தான். ஆனால் கவிஞனா இல்லையா என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும்?"

புத்திசாலித்தனம் கலந்த நகைச் சுவையான பதிலில் மணிக்கொடி மனதுக்குள் வியந்தாள்.

"தாங்கள் எழுதுவது கவிதை என்று தங்களுக்கே நம்பிக்கை இல்லைப்போல் இருக்கிறது."

செவ்விதழ்களில் செழித்திருந்த புன்னகையை இரசித்துக்கொண்டே கார்வாணன் பதில் சொன்னான்:

"மனதில் உள்ளதை மடலில் வரைகின்றேன். அது கிறுக்கலாகவும் இருக்கலாம். கவிதைக்கான கருக்களாகவும் இருக்கலாம். பிறந்த பிள்ளைக்கு பெற்றோர் தானே பெயரிடுவது வழக்கம். என் எழுத்துக்களும் எப்படியிருக்கின்றன. என்பது அதைப் படிப்போர் சொல்வது தான் பிடிக்கும் எனக்கும்! தனக்குத்தானே கவிஞன் என்று சொல்லிக்கொள்வது அகௌரவம். அடுத்தவர் கவிஞன் என்று ஏற்றுக் கொண்டு அழைப்பது கௌரவம்."

தன் பட்டுக்கரங்களை மெல்லத் தட்டி அமுதம் கொட்டும் இதழ்களில் பூ நகை மலர்த்திவிட்டு, தங்கத்தால் செய்யப்பட்ட குவளையில் பழரசம் எடுத்து வந்து நீட்டினாள் பருவத் தோகையாள் மணிக்கொடி.

வாங்கிக்கொள்ளும்போது விரல்கள் பட்டுக்கொள்ள, என்ன நினைக்கப் போகிறாளோ என்று பயந்து போன கவிஞன் மெல்ல நிமிர்ந்து நிலவு முகம் பார்த்தான். செம்பருத்தி நிறம் எழில் முகத்தாளின் உள்ளே வந்த வெட்கம் சொல்லியது. பின்னால் நகர்ந்து போய் நின்ற கன்னல் மொழி மின்னல் இடையாள் கேட்டாள் ஒரு கேள்வி:

"எழுதியதையெல்லாம் அருவியில் வழுகிச் செல்ல வைப்பதுதான் உங்கள் வழக்கமோ?"

கார்வாணனுக்கு புரிந்துபோனது. நேற்றிரவு அருவியில் தான்விட்ட ஓலை இந்த கோல்தயிடம் கிடைத்திருக்கிறது. கவிதை இரசித்துவிட்டுத்தான் கையோடு அழைத்துவர ஆள் அனுப்பியிருக்கிறாள் இந்த அழகுமான்.

"இலக்கண வேலியை வெட்டியெறிந்து விட்டு உங்கள் எண்ணத்தை விதைத்துப் பார்த்திருக்கிறீர்கள் ஓலையில்."

"பட்சிகள்கூட எல்லைகள் விரிந்து செல்ல விரும்பி சிறகுகள் அசைக்கும்போது, பிடிக்காத எல்லைகளை பிடுங்கிவிட்டு, எல்லைகளை விசாலமாக்கிக்கொள்ள மனிதன் மட்டும் மறுக்கலாமோ?"

"வானம்தான் உங்கள் எல்லையோ?"

"இல்லை. வாழ்க்கை அழகாகவும், அர்த்தமுள்ளதாகவும் இருக்க வசதியான எல்லைகளை நாம் வாழும் காலம்தான் தீர்மானிக்கிறது. அதுபோலத்தான் இலக்கண மரபுகளும், விதிகளும்! மாறாதது என்று எதுவும் இல்லை. மாற்றம் ஒன்றுதான் மாறாதது."

"கட்டற்ற சுதந்திரம் தவறல்ல என்பது உங்கள் கருத்தாகுமோ?"

"இல்லை இளவரசி! கட்டென்று என்று சொல்லி வாழ்க்கை பட்டுப்போகக் காரணமான கட்டுப்பாடுகள் வேண்டாம் என்கிறேன். காலத்திற்கேற்ற முறையிலே வாழ்வின் சுவையை பத்திரப்படுத்தும் கட்டுப்பாடுகளுக்கு நான் எதிரியல்ல என்கிறேன்."

"உதாரணமாய் ஒன்று சொல்லுங்களேன்?"

"உடனிருந்த கணவன் உயிர் துறந்து விட்டால் மனைவி உடன்கட்டை ஏறுவதை உங்கள் அரச வம்சமும் அங்கீகரித்துக் கொண்டிருப்பது ஒவ்வாத முறை என்கிறேன்"

மணிக்கொடி விழிகள் அகல விரித்து அவனை தனக்குள் வாங்கி தட்டிக்கொடுத்தாள். மெல்ல நகைக்கவும் செய்தாள்.

"கலகக்காரராக இருப்பீர்கள் போல் இருக்கிறதே" என்றாள் மணிக்கொடி.

"வாழும் காலத்தில் கலகக்காரன் என்ற பெயர் எடுத்தவர்களை, வரும் காலம் கௌரவிக்க வேண்டிய, கருத்தாளர்கள் என்று கைதூக்கிக் காட்டும் என்று நம்புபவன் நான்."

என்று உறுதிகலந்து சொன்னான் கார்வாணன். பேசிக்கொண்டிருந்ததில் நாழியாகிவிட்டது என்று உணர்ந்து ஆசனம் விட்டு எழுந்துகொண்டான்.

விரைந்து செல்லும் நாழிகை மீது மணிக்கொடிக்கு பொல்லாத கோபம் வந்தது. கன்னிமாடத்திற்கு வெளி ஆடவர் வருவதே அரிது. அப்படி வந்தவர் அதிக நேரம் இருந்தால் அரசியாரான தாயார் கோபிப்பார்கள் என்பதால் தடுக்காமல் இருந்தாள்.

"அடிக்கடி வாருங்கள்,"

என்றாள். என்றதில் மனதில் மலர்ந்துவிட்ட அன்பு தெரிந்தது.

கார்வாணன் விடைபெற்றுச் செல்ல மணிக்கொடிக்கு உயிர் பிரிந்து சென்றது போல் இருந்தது.

"என் காதலை கவிஞர் ஏற்றுக் கொள்வாரா?" என்று உள்ளத்திடம் வினா தொடுத்து விசாரித்தாள். விடை சொல்லாமல் மௌனம் காட்டியது உள்ளம். அதனால் துயரம் வளர்ந்தது.

"எப்படி எடுத்துச் சொல்வேன். ஏற்றத் தாழ்வு கண்டு என் காதல் மறுப்பாரோ கவிஞர்? மனம் என்னும் தராசின் ஒரு புறத்தில் அவர்மீது கொண்ட காதல் நிறைந்திருக்கிறது. தாராசு முள் ஒரு புறமாய் சரிந்திருக்கிறது. என் காதலை அவர் ஏற்பின் மறுபுறத்தின் தட்டும் நிறைந்துவிடும். முள் நேராகும். மனம் மென் மலராகும். நடக்குமா? நடக்க வேண்டுமே?"

மனதில் புலம்பினாள் மணிக்கொடி. துயரம் தாங்கினாள் மணிக்கொடி.

காதல் ஒரு தலையாக உள்ளவரை துயரம்தான் என்றுதானே சொல்கிறார் திருவள்ளுவரும்.......

"ஒரு தலையான் இன்னாது காமம் காப்போல
இரு தலை யானும் இனிது."

குறள் 1196
அதிகாரம் 120

## குறுக்கெழுத்துப் போட்டி இல–51

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | 2 |
| 3 | 4 | | ■ | 5 | | |
| | | ■ | 6 | | ■ | |
| | | 7 | | | ■ | |
| ■ | | | | ■ | 8 | |
| 9 | ■ | | ■ | 10 | | ■ |
| 11 | | | | | | |

**இடமிருந்து வலம்**

1. குறுக்கெழுத்துப் போட்டியில் அதிஷ்டசாலிகளை இது தேடிவரும்.
3. இந்தப் பெயரோடு அழைக்கப்படும் பாகின் சுவையோ சுவை.
5. கண்ணால் காணும் இது சமயங்களில் பொய்யாகவும் இருப்பதுண்டு.
7. இதனை முரசு என்றும் சொல்லலாம்.
10. இதற்கு நிலா விளக்காகும்.
11. மூன்றெழுத்து நடிகர் முத்திரை பதித்த படம்.

**மேலிருந்து கீழ்**

1. முரசில் வரும் குறிப்புகள் இதற்குப் உதவும்.
2. இவர் ஒரு முனிவர்.
4. தீயோர் பின்னும் வலை.
5. பெண்ணை இப்படியும் அழைக்கலாம்.
6. சுற்றியுள்ள உறவுகளில் காட்ட வேண்டியவற்றில் முக்கியமானது.
7. சிந்தனைச் சிற்பி என்பது இவருக்கும் பொருந்தும்.
8. ரசனை உள்ள பெண் (தலைகீழாக உள்ளது)
9. இங்கும் மீன்கள் உண்டு.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 04.06.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-51
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை
கொழும்பு -05.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல-49க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 நெ | ப் | போ | லி | ய | ன் | ■ |
| ரு | ■ | 2 ப | ■ | 3 ந | த் | தை |
| ப் | 4 க | டி | வா | ள | ம் | ■ |
| 5 பு | ர | வ | ல | ன் | ■ | 6 வே |
| ■ | ண் | ம் | ■ | ■ | 7 ஊ | க் |
| 8 தா | டி | ■ | 9 கூ | த் | தா | டி |
| லி | ■ | 10 உ | ப் | ப | ரி | கை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.49இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. ஏ. திருநிறைச் செல்வன் கொழும்பு-12.
2. பாதியா ஹஸ்னா ஹாலி-எல.
3. ஆர். விமல் அக்கரைப்பற்று.
4. சரோஜினி ஜெயராஜ் கண்டி.
5. இர்ஷானா மீரா முகைதீன் ஏறாவூர்-03.
6. வி. ராகினி மட்டக்களப்பு.
7. எஸ்.எச். சியாமா கெக்குனகொல்ல.
8. ச. விஜயகுமார் நீர்கொழும்பு.
9. செல்வி. கே. நஸ்ரீனா திருகோணமலை.
10. பி. மொஹிடீன் வாழைச்சேனை.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.


இனிய செய்தி – பிரதிக்கு முந்துங்கள்



**இவ்வாரம் (29.05.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

# மகாபாரதம்

அங்கம் 31

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

**காலத்தின் குரல்:** அழகான வர்ணமலர்களைக் கொண்டு தொகுக்கப்பட்ட கதம்பமாலை. பூக்களை ஒருங்கு சேர- ஒழுங்காகத் தொடுத்திருப்பது ஒரு நாரிழை. இதனை வெளியே பார்க்க முடியாது. அந்த நாரின்றி அழகான மாலையே இல்லை. இதே போன்றுதான் பல்வேறுபட்ட மனிதர்களை ஒரு குடும்பமாக ஓர் அம்சம் இணைத்துள்ளது.

ஒரு சிறந்த குடும்பத்தின் சிறப்புக்கும் செழுமைக்கும் குடும்பத்தலைமையே பாத்திரதாரி.

அஸ்தினாபுரத்தின் அரச குடும்பத்திலும் இதே நிலைதான். மகாராஜா திருதராட்டினர் பார்வையற்றவராக இருப்பதனால் தன்னைச் சுற்றி நடக்கும் காரியங்களை அறிய முடியாதிருக்கிறது என்று சாக்குக்காட்ட முடியாது. அவருடைய [illegible] தீயவர்களுக்கு [illegible] [illegible] போர் முனையினை [illegible] நகர்கிறது. புருவஞ்சனர் அமைத்த மாளிகை [illegible] முனையில் ஆரம்ப [illegible].

[illegible] பாதுகாப்புக்காக [illegible] துரியோதன [illegible] அரக்கு மாளிகை [illegible] அமர்ந்து பாண்டவர்கள் [illegible] தடுப்பதே அவர்களுக்கு [illegible] பணி. வாரணாவதியில் அமாவாசை தினத்தில் நடைபெறும் [illegible] பாண்டவர்களை தீயில் [illegible] சகுனி தீட்டிய திட்டம்.

-காட்சி தொடக்கம்-

துரியோதனன் அரண்மனை.

**சகுனி:** அடுத்து வரும் நாட்களைப்பற்றி என்ன நினைக்கிறாய் மருமகனே? இன்னும் மூன்றே நாட்களில் நீ அஸ்தினாபுரத்தின் எதிர்கால மன்னன் என்ற பேற்றினை அடையப் போகிறாய். உன் எதிர்காலத்தின் கதவுகள் திறக்கப் பட்டுவிட்டன. கண்களை மூடிக்கொள்! அரக்கு மாளிகை தீப்பற்றி எரிகிறது. வெளியேற முடியாமல் குந்தியும் புதல்வர்களும் திணறுகிறார்கள். கற்பனை உலகில் அந்தக் காட்சியைப் பார். புருவஞ்சனரின் திறமை..அவர்கள் தப்பிச் செல்ல ஒரு சிறு பொந்தைத்தானும் [illegible].

**துரியோ:** மாமா...என் மகிழ்ச்சி மட்டற்றது மாமா...!

-காட்சி தொடக்கம்-

விதுரர் மாளிகை-ஒற்றன் வருகிறான்.

**விதுர:** [illegible] இந்த வேளையில்-அவசரம் [illegible]?

**ஒற்றன்:** இச்சாமத்தில் வந்தமைக்கு மன்னியுங்கள் பிரபு! அவசரமான- முக்கியமான செய்தியுடன் ஓடி வந்தேன்! காந்தார மன்னர் சகுனி, அமாவாசை [illegible] காளி யாக பூசை தினத்தன்று அரக்கு மாளிகைக்குத் தீ மூட்டத் திட்டமிட்டுள்ளார்.

**விதுர:** இத்தகவல் உனக்கு எப்படிக் கிடைத்தது?

**ஒற்ற:** அரக்கு மாளிகை அமைக்க [illegible] உதவியவர்கள் மூலம் அறிந்தேன் பிரபு!

**விதுர:** [illegible] பணியினை யார் [illegible]

[illegible]

**விதுர:** [illegible]

-காட்சி தொடக்கம்-

[illegible]

[illegible]

ooo

[illegible]

**அர்ச்:** காளி பூசைக்கு முதல் நாளன்று சுரங்கப் பாதை முடிய வேண்டும். ஒருநாள் முன்னதாகவே மாளிகையை நாங்களே தீக்கிரையாக்க வேண்டும்.

**சுர.அமை:** அப்போ இடையில் இரண்டு நாட்கள்தானே உள்ளன...? கவலை வேண்டாம்! என் பணியினைத் தொடர அனுமதிப்பீர்களானால் நாளையே சுரங்கப்பாதையை அமைத்து முடிப்பேன். தங்கள் அண்ணாவின் படுக்கை அறையை இன்றிரவே சுரங்கப்பாதை தொட்டுவிடும் என்று சொல்லி விடுங்கள்.

-காட்சி மாற்றம்-

வாரணாவதியில் யுதிஷ்டிரன் அறை- ஐவரும் குந்தியும் இருக்கின்றனர். சுரங்கப்பாதை திறந்து அதனுள்ளிருந்து சுரங்கம் அமைப்போன் வெளி வருகிறான்.

**யுதிஷ்:** நாங்கள் அனைவரும் தங்களுக்கு நன்றிக்கடன் பட்டவர்கள்.

**சுர.அமை:** அவ்வாறெல்லாம் கூறவேண்டாம். நாட்டையும் அரச வம்சத்தையும் காப்பது குடிமக்களின் கடமை. குடிமக்களைப் பாதுகாப்பது அரச வம்சத்தின் கடமை. என் கடமை முடிந்தது. விடை கொடுங்கள்.

சுரங்கம் அமைப்போன் விடை பெறுகிறான். சுரங்கப்பாதை மீது கம்பள விரிப்பினைப் பரவி மூடுகின்றனர்.

-காட்சி மாற்றம்-

காந்தாரி அந்தப்புரம்- கனவுகண்டு அச்சத்துடன் காந்தாரி எழுகிறார்.

**காந்தா:** பிரபு..பிரபு..!

**திருத:** என்ன காந்தாரி..? என்ன நடந்தது..?

**காந்தா:** பயங்கரமான கனவு ஒன்று கண்டேன் பிரபு! பூஜையறையில் மகா தேவர் சிவபெருமான் உர்த்தவதாண்டவ மாடினார். முடிவில் என்னையே உற்றுப் பார்த்தார். எனது இல்லத்தில் தங்களின் தாண்டவம் எதற்காகப் பிரபு என்று கேட்டேன். எதுவுமே கூறாமல் மறைந்து விட்டார். 'காந்தாரி' என்று யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பினேன். அக்னி தேவன் தோன்றினார். "உனது இல்லமும் உலகமும் எரிந்து சாம்பலாகப் போகின்றன. அதற்காக என்மீது கோபம் கொள்ளலாகாது" என்றார். காரணம் கேட்டேன். "காரணத்தை மகேஸ்வரனே உன்னிடம் கூறாதிருக்கும்போது நான் எப்படிக் கூறமுடியும்." என்று கூறி மறைந்தார். இந்த மாளிகை எரிய ஆரம்பித்தது. பயந்து போய் இந்திர தேவனின் உதவியைக் கோரினேன். அவர் வந்தார். எதுவுமே செய்யாமல் வெறுமனே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு அவரும் மறைந்துவிட்டார். நான் கண் விழித்துக் கொண்டேன்.எனக்குப் பயமாக இருக்கிறது பிரபு!

**திருத:** அழவேண்டாம் காந்தாரி! அந்த மகா தேவனாலும் இந்திர தேவனாலும் அணைக்க முடியாத தீயினை உன் கண்ணீரால் மட்டும் அணைத்துவிட முடியுமா? கனவுதானே மறந்துவிடு...!

**காந்தா:** அந்த மகேஸ்வரனின் தாண்டவத்தை கனவினில் கண்டமையினால் இது சாதாரண கனவாக இருக்க முடியாது பிரபு! இக்கனவுக்கான பலனைக் கூறுவீர்களா பிரபு?

**திருத:** கனவுகளுக்கு விளக்கம் தெரிந்த வேதாந்தியானால் நான் காணும் கனவுகளின் பொருளினை எப்போதோ அறிந்திருக்க மாட்டேனா? போய்ப் படுத்துக்கொள்! வேறெதும் நல்ல கனவுகளை காண முயற்சி செய்!

-காட்சி மாற்றம்-

வாரணாவதி-புருவஞ்சனர் ஆதிவாசிகளைச் சந்திக்கிறார்.

**ஆதிவாசி பெண்:** என்ன புருவஞ்சனரே! உங்கள் வயதைப்பற்றியே யோசிக்காமல் கானகத்தில் இந்த இருட்டு வேளையில் உலா வருகிறீர்களே? இதோ...இந்தப் பானத்தை சுவைத்துப்பாருங்கள்!

**புருவ:** பெண்ணே! உனது பிள்ளைகளின் உதவியுடன் தான் அந்த மாளிகையினை அமைத்தேன். அந்த மாளிகை வாசம் எத்தகையது என்று வந்து அனுபவித்து பாருங்கள். அதன் ஆயுள் இன்னும் ஒரு நாள் மட்டுமே! அதற்குள் அந்த மாளிகையில் உங்கள் அனைவருக்கும் விருந்து வைக்கப் போகிறேன். நாளை இரவு நீங்கள் அனைவரும் விருந்துக்கு வரவேண்டும்.

**ஆ.பெண்:** அதற்கென்ன வருகிறோமே!

-காட்சி மாற்றம்-

அஸ்தினாபுரம்-துரியோதனன் மாளிகை.

**துரியோ:** மாமா! மிக்க மகிழ்ச்சியாகக் காணப்படுகிறீர்களே..!

**சகுனி:** உண்மைதான் மருமகனே! மகிழ்ச்சி தான். நான் சற்று அமைதியடைந்தாலும் என் இதயம் மகிழ்ச்சி எனும் கங்கையில் துள்ளிக்குதிக்கிறதே! கவனமாகக் கேள்! நாமே நமக்கு முடிவுகட்டவும் கூடும். புருவஞ்சனர் நமது திட்டத்துக்கு ஒத்துழைத்தவர்தான். இருப்பினும் அவரிடமும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவருக்கு முடிவுகட்டுவதற்கான ஒழுங்கு முறை, மெய் காப்பாளர் தலைவனிடம் தரப்பட்டுள்ளது.

**துரியோ:** தொடர்ந்து சொல்லுங்கள் மாமா!

**சகுனி:** அஸ்தினாபுரத்துக்கு பாண்டவர்கள் இனிமேல் உயிருடன் திரும்பமாட்டார்கள். ஆனால் அவர்களுடைய அஸ்தி நிச்சயம் வந்து சேரும்.

-காட்சி மாற்றம்-

கர்ணன் மரம் வெட்டுகிறான். துரியோதனன் வருகிறான்.

**துரியோ:** நண்பனே! "இது என்ன-...என்ன செய்து கொண்டிருக்கிறாய்?

**கர்ண:** நண்பா! அரக்கு மாளிகை மூலம் அவர்களை அழிக்கும் சதித்திட்டத்தை இப்பொழுதும் உன்னால் தடுக்க முடியும். இந்தக் கோழைத் தனத்தால்- சிம்மாசனத்தில் நீ ஏறினாலும் உன்னால் நிச்சயமாக நிம்மதி காணவே முடியாது.

**துரியோ:** நீ சொல்வதும் சரியே! இருப்பினும் பாண்டு சித்தப்பாவின் மகன் முடி சூடுவதை என்னால் சகிக்க முடியாது. பாண்டு சித்தப்பாவால் தானே என் தந்தைக்கு அரியணை ஏற முடியாத நிலை ஆரம்பத்தில் ஏற்பட்டது. உன்னை வேண்டுமானாலும் அஸ்தினாபுரத்தின் மன்னனாக்கவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால் அந்த யுதிஷ்டிரனுக்கு அந்த உரிமையை ஒருபோதும் விட்டுக்கொடுக்க மாட்டேன்..!

**கர்ண:** இல்லை. விதியே எனக்கு அஸ்தினாபுரியின் கிரீடத்தை அளித்தாலும் அதனை ஏற்கவே மாட்டேன். அதனை உனக்கே அளித்துவிடுவேன். யுதிஷ்டிரனுக்கும் உனக்குமிடையில் தேர்வு நடைபெற்றாலும் நண்பனே, உன்னையே நான் என்றும் சார்ந்திருப்பேன். உனக்கே நான் என்றென்றும் கடமைப்பட்டவனாக இருப்பேன். நீ போகும்பாதை முறையற்றதாயினும் உன் கரம் கோர்த்து உன்னுடனேயே நான் வருவேன்.



-காட்சி மாற்றம்-

அரக்கு மாளிகை முன்புறம்- ஆதிவாசிகளுக்கு புருவஞ்சனர் விருந்தளிக்கிறார். ஏற்கனவே நஞ்சு கலக்கப்பட்ட மதுவினை ஊற்றிக் கொடுக்கிறார்.

**புருவ:** இந்த மாளிகையை நிர்மாணிக்க உதவிய உங்களுக்கு விருந்தளிக்க மகாராஜா கட்டளையிட்டுள்ளார். நன்றாகக் குடியுங்கள். விருந்தினைச் சுவைத்து உண்ணுங்கள்.

**ஆதி.பெண்:** ஓ...அப்படியா..! நன்றாகக் குடிப்போம்..நன்றாக உண்ணுவோம்... இந்த பானம் தனியான சுவையாக இருக்கிறதே?

**புருவ:** அரசமாளிகையிலிருந்து வந்த மதுவல்லவா? உங்கள் தலைக்கே ஏறிவிடும்....கவனம்!

**ஆதி.பெண்:** தலைக்கா....? நன்றாக ஏறட்டுமே...!

ooo

அரக்கு மாளிகை உட்புறம்.

**யுதிஷ்:** அம்மா! சுரங்கப்பாதை ஆயத்தமாகி விட்டது. இப்பொழுதே நாம் கிளம்ப வேண்டும்!

**நகுலன்:** நமது முடிவையொட்டிய மகிழ்ச்சியில் வெளியே கொண்டாட்டம் நடைபெறுகிறது.

**குந்தி:** காந்தார நாட்டு மன்னன் சகுனியை இந்தக் கொடிய செயலுக்கு என்றுமே மன்னிப்பளிக்க மாட்டேன்.

**யுதிஷ்:** சுரங்கப்பாதையினைத் திறவுங்கள்!

**அர்ச்:** அண்ணா! பொறுங்கள்! இந்த மாதிரி கோழைகள் போல் ஒளித்து ஓடுவதை நான் விரும்பவில்லை.

**யுதிஷ்:** ஒளித்தோடவில்லை தம்பி...! சூழ்ச்சியிலிருந்து தப்பிக்கொள்ள வெளியேறுகிறோம். ஓடுவதற்கும் தப்புவதற்குமிடையில் நிரம்ப வித்தியாசமுண்டு. நமது சித்தப்பா நம்மைத் தப்பிச் செல்லும் படிதான் கட்டளையிட்டுள்ளார். நாம் தீக்கிரையாகி அழிந்துவிட்டதாக அவர்கள் உணரவேண்டும். இதுதான் அவர் எண்ணம்...பீமா...பாதையைத் திறந்துவிடு!

**சகாதேவன்:** அம்மா! நீங்களே தீயினை மூட்டுங்கள்.

**பீமன்:** இல்லை சகாதேவா! இந்தச் சதிகளுக்கு அம்மா அப்பாற்பட்டவர். ஆகவே அவரை இதற்கு இழுக்கலாகாது.

**யுதிஷ்:** சரி...அம்மா...நீங்களே வழிகாட்டுங்கள்.

**குந்தி:** வேண்டாம்! மகன் சகாதேவன் வழி காட்டட்டும்..வா மகனே!

பின்னணிப் பாடல்:

*மாயவன் கண்ணனின் தூய அன்பதும்*
*ஆய்வறிவாளர் விதுரரின் போதமும்*
*வழித்துணையாக அமைந்திடுமதனால்*
*அழிவுத்தீயும் ஒளி வழி காட்டுமே!*

- பாண்டவர்கள் தாய் குந்தியுடன் சுரங்கப் பாதையில் செல்ல ஆரம்பிக்கின்றனர். பீமன் மாளிகைக்குத் தீ மூட்டுகிறான்.
- நஞ்சு கலந்த மதுவை உண்ட ஆதிவாசிகள் அனைவரும் மாண்டுவிடுகின்றனர். புருவஞ்சனர் மகிழ்ச்சியுறுகிறார். முன்கதவைத் திறந்ததும் தீமூண்டுவிட்டதைக் கண்டு திகைக்கிறார்.

**புருவ:** உதவுங்கள்...ஐயையோ உதவி... சேனாதிபதி! தீ பரவுகிறது..உதவுங்கள்...! புருவஞ்சனரையும் தீ தாவுகிறது. மாளிகையின் வெளியில் மக்கள்திரண்டு திணறுகின்றனர்.

**சேனாதிபதி:** யாராவது வெளியேறி தப்பிக் கொண்டனரா...?

**ஒற்றன்:** இல்லையே!

**சேனா:** தீ பரவும்போது எவர்தான் தப்ப முடியும்! பாவம் புருவஞ்சனர்...!

ooo

குந்தியும் புத்திரர்களும் சுரங்கப்பாதை வழியே தீங்கேதுமின்றி தப்பிவிடுகின்றனர். தொலைவிலிருந்த வண்ணம் மாளிகை தீயில் பொசுங்குவதைக் கண்ட குந்தி வேதனையடைகிறார்.

பின்னணிப் பாடல்:

**உலகியற்றியான் உறுதுணை இணைந்திடில்**
**உலகமே ஒன்றாய் உறுபகை மிரட்டியும்**
**அருகணையாதே அழி தீங்கெதுவும்**
**பெரு வாழ்வெய்தியே பெருமை சேர்ந்திடும்**

ooo

அஸ்தினாபுரம்- சகுனியின் இருப்பிடம்.

**சகுனி:** இந்தப் புரவஞ்சனன் குடிபோதையில் மதியை இழந்துவிட்டான். ஒருநாள் முன்னதாகவே தீயை மூட்டிவிட்டானே! அதுசரி எவராவது தப்பிப் பிழைத்தார்களா?

**ஒற்றன்:** இல்லை பிரபு. எவரும் தப்பவில்லை.

**சகுனி:** புருவஞ்சனனும் மடிந்துவிட்டானல்லவா? அதுவே நல்லது. ஓடு...இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை துரியோதனனிடம் போய்க்கூறு. காத்திருக்கச் சொல்! நான் அங்கு வருகிறேன்.

ooo

துரியோதனன் கர்ணன் மற்றும் துச்சாதனனுடன் இருக்கிறான்.

**துரியோ:** தீ பற்றிய செய்தி வந்துவிட்டதே! மாமா ஏன் இன்னும் வரவில்லை!

**துச்சா:** மாமா நிச்சயம் வந்து விடுவார்.

**கர்ண:** வீரர்கள் எப்போதும் வீர மரணமே எய்த வேண்டும்.. ஆனால் இந்தத் துர்ப்பாக்கிய நிலை என்றும் என் மனதை விட்டு நீங்கவே செய்யாது..!

**சகுனி:** (வந்துகொண்டே) அங்க தேசத்தின் அதிபதியே! அவர்களுடைய விதியை மாற்ற எவரால் முடியும்...?

**கர்ண:** மாமா! இதைவிட சிறந்த முறையில் அந்த வீரர்கள் இறந்திருக்க வேண்டும் என்பதை நீங்களே ஒப்புக்கொள்ளுவீர்கள் மாமா!

**சகுனி:** உனக்கு அவ்வாறு தோன்றினால் உமது விருப்பத்துக்காக அதனை ஏற்றுக் கொள்கிறேன். இருப்பினும் இதனைவிட சிறந்த சாவினை அந்தப் பரிதாபத்துக்குரியவர்களுக்கு என்னால் அளிக்க முடியவில்லையே! அவர்கள் ஐவரும் அவர்களின் அன்னையும் அழிந்து விட்டார்கள்.

**துரியோ:** மாமா.. மாமா...! நீங்கள் அசகாய சூரரே.

**சகுனி:** அஸ்தினாபுரத்தின் எதிர்கால மாமன்னனுக்கு எனது வாழ்த்துக்கள்! ஆண்டவன் உனக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கட்டும் நீடூழி வாழ்க...!

**துச்சா:** அண்ணா...! நீங்கள் மாமன்னரானதும் அரியணையில் எவ்வாறு அமர்ந்திருப்பீர்கள்? அந்தக் காட்சியைப் பார்க்க ஆசையாக இருக்கிறது...எங்கே அப்படி இருந்து காட்டுங்கள் பார்க்கலாம்..!

**சகுனி:** மருமகனே! எனது நீண்ட நாள் கனவு இன்று நிறைவேறுகிறது. இனி நீயே இந்நாட்டின் மாமன்னன். எங்கே அரியணையில் அமர்ந்துகொள். நீ குழந்தையாக இருந்தபோது நான் கண்ட கனவு நனவாகி விட்டது. உனது தந்தை இனிமேல் உன்னை அரசனாக அறிவிக்க தடை எதுவுமேயில்லை. இந்தத்துயரச் செய்தி இனிமேல் அவரை முடிதுறக்கத் தூண்டவே செய்யும்.

**துரியோ:** மாமா...! இந்தச் செய்தி அப்பாவுக்குத் தெரியுமா?

**சகுனி:** இல்லை. இந்தச் செய்தியை முதலில் அறிய வேண்டியவன் நீ! நானே மகாராஜாவிடம் கூறப்போகிறேன். அதுவரை இந்த அரியணையில் இருந்து ஆனந்தமாக அனுபவி.

சிம்மாசனத்தில் துரியோதனன் ஆனந்தமாக அமர்ந்திருக்கும் காட்சி.

ooo

திருதராட்டினர் அரண்மனை.

**காவலன்:** வணக்கம் மகாராஜா! காந்தார நாட்டு அரசர் தங்களைக் காண வந்துள்ளார்!

**காந்தா:** இந்த அகால வேளையில் அண்ணன் சகுனிக்கு இங்கு என்ன அவசரவேலை?

**திருத:** அதுதான் தெரியவில்லை... பாண்டவர்களுக்கு ஏதாவது..!

**காந்தா:** பிரபு...ஏன் அவ்வாறு கூறுகிறீர்கள்?

**திருத:** ஏதோ வாயில் வந்துவிட்டது.

இருவரும் சகுனியைச் சந்திக்கின்றனர்.

**திருத:** என்ன மைத்துனரே? இவ்வேளையில்... எல்லாம் நலம்தானே!

**சகுனி:** அவ்வாறானால் இந்த அகால வேளையில் நான் ஏன் வருகிறேன்? பாண்டவர்கள் ஐவரும் தாய் குந்தியும் இறந்துவிட்ட துயரச் செய்தியுடன் வந்துள்ளேன். துரியோதனனால் நிர்மாணிக்கப்பட்ட அந்த மாளிகை எதிர்பாராத விதமாகத் தீக்கிரையாகி எல்லோரும் மாண்டு போனார்கள்.

திருதராட்டினர் அதிர்ச்சியடைகிறார்.

**திருத:** இல்லை...இல்லை...! துரியோதனனை இதற்குள் இழுக்காதே சகுனி! நீயே இந்த மாளிகையினை அமைக்க முன் நின்றவன். இந்தத் தீக்கான காரண கர்த்தா நீயே! துரியோதனன் மன்னனாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனால் பாண்டவர்களின் சமாதியின்மேல் என் மகன் அரியணையை அமைக்க நான் விரும்பவேயில்லை. சகுனி! என் முன் நிற்காதே..போய்விடு. எனது துன்பத்தை.. என் வேதனையை நீ வேடிக்கை பார்க்க வேண்டாம் போய்விடு....! காந்தாரி இது பெரும் துன்பமான செய்தி...! எனக்கு எதுவுமே தோன்றவில்லை..! இது விபத்தா அல்லது படுகொலையா என்று தெரியவில்லையே!

**காந்தா:** பிரபு...! இருக்காது. கொலையாக இருக்கமுடியாது. துரியோதனன் இதற்கு உடன்பட்டிருக்கவே மாட்டான் பிரபு!

**திருத:** உன் அண்ணன் சகுனி எதற்கும் துணிந்தவனாயிற்றே! இது கொலையானால் எனக்கு மன்னிப்பே கிடையாதே! இந்தச் செய்தியை பெரியவர் பீஷ்மரிடம் எவ்வாறு எடுத்துரைக்கப் போகிறேன்..? அவர் எவ்வாறு தாங்கிக்கொள்ளப் போகிறாரோ...! காந்தாரி! வா.என்னுடன் பெரியப்பாவிடம் போவோம்...!

இருவரும் பீஷ்மர் விடுதிக்குச் செல்கின்றனர். காவலனிடம் தகவல் அனுப்புகின்றனர்.

**காவலன்:** பெரியவரை எழுப்ப வேண்டுமா மகாராஜா?

**திருத:** ஆமாம்...! அஸ்தினாபுரத்துக்கு இனிமேல் அமைதியாகத் தூங்க முடியுமோ தெரியாது.

பீஷ்மர் வருகிறார்.

**பீஷ்ம:** என்ன நடந்தது மகாராஜா?

**திருத:** என்னை மகாராஜா என்று இந்த வேளையில் அழைக்க வேண்டாம்! மகனே என்றே அழையுங்கள் பெரியப்பா..! எனதருமை பாண்டவர்களை இழந்து விட்டேன். வாரணாவதியில் அவர்களும் குந்தியும் தங்குவதற்காக துரியோதனனால் அமைக்கப்பட்ட மாளிகை தீக்கிரையாகி அவர்கள் அனைவரும் மாண்டு போய்விட்டார்கள்...

**பீஷ்ம:** என்ன... என்ன கூறுகிறீர்கள்? அவர்கள் அனைவருமே மாண்டு போயினரா...? இறைவா! என்னை மன்னியுங்கள்... எனக்கு இப்போது தனிமை தேவை. என்னை தனித்துவிட்டு விடுங்கள். இந்தத் துயரமான நிலையிலிருந்து எவ்வாறு மீளலாம் என்று வழி கண்டு நானாகத் திரும்பிவரும்வரை எவரும் என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம்....

காந்தாரி அழுகிறார்.

பின்னணிப்பாடல்:

***உத்தமர் பீஷ்மரின் உள்ளக் கதவுகள்***
***உடைந்து நொறுங்கி உருக்குலைந்தனவே***
***உறையுளின் கதவினை மூடியவுடனே***
***உணர்வினை இழந்தார் உயிர் துடிக்கின்றார்.***
***தளர்ந்த நடையுடன் துயரினை அணைத்தே***
***இளைத்த பிதாமகர் எதிர் திசை ஏகிட***
***இளையவரிருவரும் இணைந்தே வெதும்பினர்***
***இனி யெதுவினை யியற்றுவதறியார்.***

**(இன்னும் வரும்)**

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


அருள் ஜுவலர்ஸ்



பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


# பயிற்சியால் செதுக்கிய சிறப்பான தேகம்!




Kala



புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

433686


## ஜோடி இல்லாத ஜாடி!



'கிளியோபாத்ரா' என்று பெயரிட்டுள்ளனர். இதன் உயரம் 5.345 மீட்டர் (17 1/2 அடி) இதற்கு 1.2 மீட்டர் (4 1/2 அடி) உயரமான மூடியும் உள்ளது. இந்த ஜாடி உருவாக்கப்பட்டது. கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடித்துவிட்ட இந்த ஜாடிக்கு ஈடு கொடுக்க உலகில் வேறு ஜாடி இருந்தால் ஜோடி சேர்த்து விடலாம்.

## மின்சார சமாச்சாரம்

இவ்வண்டி மணிக்கு 124 மைல் வேகத்தில் ... 1997இல் சந்தைக்கு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ஆணின் விழிகளில் போர் என்னும் சட்டி!



## கடுகு போல் தோற்றம் ஆனாலும் கடும் வேகம்

அமெரிக்காவில் உட்டா மாநிலத்திலுள்ள வென்டோவரில் 1991 ஆகஸ்ட் 21ல் இந்த மிகச் சின்ன மோட்டார்வண்டி 696.331 கிலோமீட்டர் (432.692 மைல்) வேகத்தில் ஓடியிருக்கிறது. இந்த வண்டியை இந்த வேகத்தில் செலுத்தியவர் செக்ரேல் என்பவர். இந்த வண்டியினை ஆரம்பத்தில் 1974ம் ஆண்டில் அமைத்தார். இரண்டு வருடங்களாக இந்த வண்டியை வேகமாகச் செலுத்திப் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் பல மாற்றங்களைச் செய்து 1991ல் இத்தனை வேகத்தில் இந்த வண்டியினை செக்ரேலால் ஓட்டமுடிந்தது.

செக்ரேல் தான் மோட்டார் ஓட்டத்தில் அதிவேக உலக சாதனை படைத்தவர் என்று கூறுவதற்கில்லை.

1983 அக்டோபர் 4ம் திகதி றிச்சார்ட் நோபிளின் 'தோர்ஸ்ட்-2' என்ற வண்டி 1019.46 கிலோமீட்டர் (633.46 மைல்) வேகத்தில் ஓடி சாதனை படைத்திருக்கிறது.



## கடுகளவு ஆச்சரியம்



## அறிமுகமாகும் புதுவித சைக்கிள்

மலைகளிலும் கரடுமுரடான மேடு பள்ளங்களில் லாவகமாகத் தாவிச் செல்லக்கூடியது இந்த சைக்கிள். இதில் பயணம் செய்பவருக்கு எந்த உபத்திரவமும் கொடுக்காது. வண்டியைச் செலுத்துபவர் அலுங்காமல் குலுங்காமல் சாதாரண நேர் பாதையில் செல்வதைப் போன்று சொகுசாகப் பயணம் செய்யலாம்.

இதன் விலை 800 டொலர் முதல் 1,500 டொலர்வரையாகும். இங்கும் வரப்போகிறது வாங்கிக்கொள்ள தயாரா நீங்கள்?

